
தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன் பம்புகளை வாங்குங்கள்

வார

# முரசொலி

VARAMURASOLI

Pump With Standard Accessories



Select Newtone-Pumps

முரசு 3 ஒலி 54 ஞாயிற்றுக்கிழமை 22-01-1989 (தை 9) ஜ. ஆகிர் 13 விலை ரூபா நான்கு

● தமிழகத்தின் சில இடங்களில் குண்டு வெடிப்பு; தீ வைப்பு ● தி. மு. க. வுக்கு வெற்றிவாய்ப்பு அதிகம்

# தேர்தல் முடிவு இரவு தெரியும்

வன்னியர்களின் பகிஸ்கரிப்பின் மத்தியில் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் 232 தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்றது. இரு தொகுதி சுயேச்சை உறுப்பினர்களின் மரணத்தைத் தொடர்ந்து அவற்றின் தேர்தல் ஒத்திப்போடப்பட்டது. மிசோராம், நாகலாந்து சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நேற்று நடைபெற்றது. செங்கல்பட்டு மாவட்டத்தில் சில இடங்களில் தீ வைப்பும், விழுப்புரத்தில் ரயில்பாதையில் இடம்பெற்ற குண்டுவைப்புச் சம்பவமும் தவிர, வேறு பலமான வன்முறைகள் ஏதும் தமிழ்நாட்டில் இடம்பெறவில்லை. வன்னியர் அதிகமாகவுள்ள வடஆற்காடு மாவட்டத்தில் வாக்களிப்பு மந்தமாகவே நடைபெற்றது. சில வாக்குச் சாவடிகளில் முற்றாக பகிஸ்கரிப்பு இடம்பெற்றது. இந்திரா காங்கிரஸ் கட்சி மூன்று மாநிலத் தேர்தல்களிலும் போட்டியிட்டது. இத்தேர்தலில் அக்கட்சி வெற்றிபெறுமானால் டிசெம்பரில் நடைபெறவேண்டிய பாராளுமன்றத் தேர்தலை ஏப்ரலிலேயே ராஜீவ் முன்கூட்டி நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தேர்தலில் தி. மு. க.வே கூடுதல் ஆசனங்களைப் பெறுமென்றும், ஜானகி, சிவாஜி கட்சிகளுடன் சேர்ந்து இது கூட்டரசை அமைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று மாலை நாலரை மணி (16ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. கட்சி பிரமுகர்கள் பலருக்கு கொலை எச்சரிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியின் பல முக்கியஸ்தர்களுக்கு ஜே. வி. பி. இயக்கத்திடமிருந்து எழுத்துமூலம் கொலை எச்சரிக்கைப் பயமுறுத்தல் வந்துள்ளதையடுத்து அவர்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இடைக்கால அமைச்சரவையிலுள்ள சிலரும் இந்தப் பயமுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வெளி மாகாணங்களைச் சேர்ந்த பல முன்னாள் ஐ. தே. க. எம்.பிக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த 48 மணி நேரத்துக்குள் தலைநகருக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே கண்டி, நுவரெலியா பகுதிகளில் தேர்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக எச்சரிக்கைச் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

மலையகததிலுள்ள பலருக்கே கூடுதலாக எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விராஜ் மெண்டிஸ் கொழும்பில்

இரு வருடங்களாக லண்டன் தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த இலங்கையரான விராஜ் மெண்டிஸ் நேற்று அதிகாலை இலங்கை வந்து சேர்ந்தார். பதினைந்து வருடங்களின் பின் இலங்கை வந்த அவரை அவரது மகன், சகோதரர், மாமன் உட்பட → 16ஆம் பக்கம்பார்க்க

## முதலமைச்சர் யாழ்நகரில் மகாநாடு

யாழ். மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு சம்பந்தமான உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றது. வடகிழக்கு மாகாணசபை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளின் ஏற்பாட்டில் இக்கூட்டம் → 16ஆம் பக்கம்பார்க்க

# வன்னியில்கொலையுண்ட ஒன்பதுதமிழரின் குடும்பங்கட்கு புதிய வீடும், நஷ்டஈடும்

கடந்த பதினேழாம் திகதி வவுனியா பூந்தோட்டம் கிராமத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடும், ஈமக்கிரியைச் செலவும் வழங்கப்படவுள்ளதாக இந்தியப்படையின் யாழ் நகர கமாண்டர் அலுவலகம் தெரிவித்தது. இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர்களுக்கு பதினையாயிரம் ரூபாவுக்கும் இருபதிணுயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட ஒரு தொகை நஷ்டஈடாக வழங்கப்படும். அத்துடன் ஈமக்கிரியைச் செலவாக தலா இரண்டாயிரம் ரூபா வழங்கப்படும். இச் சம்பவத்தில் தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளை திரும்பக் கட்டுவதற்கு பதினையாயிரம் ரூபா வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கொடுப்பனவுகள் ஸ்ரீலங்கா மத்திய அரசின் உதவியுடன் வழங்கப்படவுள்ளன. இந்த தாக்குதல் சம்பவத்தில் ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் காயமடைந்திருந்தனர். மூன்று வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. இத்தாக்குதலுக்கு காரணமாகவிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் மூன்று →16 ஆம் பக்கம் பார்க்க

# சுண்டிக்குளமும் அயற்பகுதியும் முற்றுகையிடப்பட்டு தேடுதல்

வடமராட்சி கிழக்கிலுள்ள சுண்டிக்குளம் கிராமமும் அதன் அருகிலுள்ள காட்டுப் பகுதியும் முழுமையாக முற்றுகையிடப்பட்டு பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தரைமார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் அப்பகுதியை வந்தடைந்த இராணுவத்தினர் தற்காலிக முகாமொன்றை அமைத்து இத்தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தேடுதல் காரணமாக சுண்டிக்குளத்திற்கும் ஏனைய பகுதிகளுக்குமிடையேயான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் சுண்டிக்குளம் கடல் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் நான்கு ஜவான்களும் ஒரு அதிகாரியும் கொல்லப்பட்டிருந்தனர்.

# பஸ் விபத்து 25 பேர் பலி

(புது டில்லி)

இந்திய பீகார் மாநிலத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 25 பேர் வரை கொல்லப்பட்டனர். பஸ், ட்றக் ஒன்றுடன் மோதியதிலேயே பயணிகள் கொல்லப்பட்டனர்.

# ஜனாதிபதிதேர்தலில்ஊழல் இல்லை என 'சார்க்' குழு அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலை கண்காணிக்கவென வந்திருந்த சர்வதேச சார்க் கண்காணிப்புக்குழுவினர் தமது இறுதி அறிக்கையை அனுப்பியுள்ளனர். வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பு திருப்திகரமாக நடைபெற்றதாகவும் சட்டவரம்பிற்கு உட்பட்டே தேர்தல் இடம் பெற்றதாகவும் அக்குழு தன் அறிக்கையில் தெரிவித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பத்துப் பேர் கொண்ட சார்க் கண்காணிப்புக்குழு தனது அறிக்கையில் தங்களுக்களிக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய பொதுமக்கள், வாக்காளர்கள் வேட்பாளர்களுடன் கலந்துரையாடியதாகவும், ஒரு சில சம்பவங்கள் தவிர வன்செயல்கள் ஏதும் இடம் பெறவில்லை →16 ஆம் பக்கம் பார்க்க

# 1995லும் தாமே ஜனாதிபதி என்கிறார் பிரேமா

பொதுத்தேர்தலில் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி ரீதியாக ஒவ்வொரு தொகுதிக்கும் தலா இருபத்தைந்து லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

ஜனநாயக வழிக்கு வராதவர்களுடன் பேச்சுக்களை நடத்த தான் தயாராக உள்ளதாகவும், சகல பிரஜைகளும் சரிசமமாக மதிக்கப்படாத பட்சத்தில் நாட்டில் சுபீட்சமும், சமாதானமும் நிலவாது என்றும் அவர் கூறினர்.

நாட்டில் சமாதானம் நிலவியிருந்தால் தான் பத்து லட்சம் அதிகப்படியான வாக்குகளால் ஜனாதிபதி தேர்தலில் வென்றிருப்பார் என்றும் தனது வறுமை ஒழிப்புத் திட்டத்தால் அடுத்த தடவையும் மக்கள் தன்னையே ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள் என்றும் கூறினர்.

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பினை தேடு வோருக்கும் ஆங்கிலத்தில் பரீட்சைகள், பயிற்சிகள் செய்வோருக்கும் இன்றியமையாத மொழியான ஆங்கிலமொழி ஆரம்பத்தில் இருந்து முழு விளக்கங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படும். விபரங்கட்கு சுய விலாசமிட்டு முத்திரை யொட்டிய தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும். 60/3, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம் 01494

### புத்தகம்

ஈழத்து நாவல்களான மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனி மலர்கள், முடிவல்ல ஆரம்பம், கானகத்தின் கானம்; மலிவு விலையில் எண் ஜோதிடம் 6/50. ராஜன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம், கவிதா ஸ்ரோர்ஸ் வவுனியா. 01518

### விற்பனைக்கு

ரெலிவிசன் ரியூப், **Fly Back,** ரியூனர் சகல வீடியோ டெக், ஹெட் மோட்டர்கள் **RF Converter**, கவர் என்பன விற்பனைக்குண்டு. **Jaffna Technical Institute**, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். 01434

உபயோகித்த குளிர்சாதனப்பெட்டி, தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மேசை, செற்றி, Oven, கண்ணாடி மேசை, Show Case Baby cot, Cooker, Hotplate, Clock, Toaster Fan மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு 343, பருத்தித்துறை வீதி, நல்லூர், அரசடி சந்தி யருகில், 01539

### கல்வி

1-2-1989-ல் ஆரம்பம் Spoken English (With Grammar), Spoken Sinhalese, Sinhalese (With Grammar). ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 4.30-5.30, சனி, ஞாயிறு காலை 9-00-12-30 I E T கல்வி ஸ்தாபனம், 11 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 01428

**MotorRe-winding course Theory— 8 weeks, Practical-8weeks** முழுக் கட்டணமும் ரூபா650/- ஆரம்பம்: 1-2-89 **Omega,** மானிப்பாய் வீதி, யாழ்பாணம் 01422

G. C. E, (O/L)ல், கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை புதிய, பழைய திட்டத்திற்கமைய 21 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு 1 மாதத்திற்குள் சகல பகுதிகளும் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பிலிருந்து (O/L) (A/L)ற்குரிய சகல பாடங்களும் நிறைவேற்றப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, 01531

### தேவை

பீற்ருமக்ஸ் வீடியோடெக் கசட் உடன் தேவை. பாவிப்போரும் தொடர்பு கொள்ளவும். திருத்த முடியாதரெலிவிசன், வீடியோ டெக் என்பனவும் தேவை எம்மிடம் சொனி 1882. ரெலிவிசனுக்குரிய ரியூப விற்பனைக்குண்டு. விபரங்களிற்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (ரெயில்வே கடவை யருகாமை) யாழ்ப்பாணம். 01532

## SALE

**Valuable Second Hand Books For Sale. On 24& 25 January. 1989 No10. CrossetteLane (Kachcheri Nallur Road), Chundikuli, Jaffna.** 01536

### விற்பனைக்கு

ட்றெயிலர் (TRAILOR) விற்பனைக்கு உள்ளது மில்க்வைற், யாழ்ப்பாணம். 01496

### தேவை

O/L வகுப்புக்கு விஞ்ஞானம், தமிழ் கற்பிக்க விரும்பும் ஆற்றல் மிக்க பகுதி நேர ஆசிரியர் தேவை. தமிழாசிரியர் கலை இலக்கியப் பரிச்சியம் மிக்கவராக மிளிர்தல் விரும்பத்தக்கது. கையெழுத்தில் தகுதி, வேதனம் முதலியனவற்றைக் குறிப்பிட்டு அதிபர், மதி அக்கடமி, ஊரெழு, சுன்னாகத்திற்குத் தபாலில் விண்ணப்பிக்க. 01483

## G. C. E. (O/L)
## மீட்டற் பயிற்சி

1989 பெப்ரவரி சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவோரின் நன்மைகருதி

**BRIGHT STUDY CIRCLE**

தபால் மூலம் ஒரு கல்வி வட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT STUDY CIRCLE**
P. O. Box 162, Colombo 01019

குறுகியகால விசேட தொழில்நுட்ப பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகிறது

Radio - T V, Air condition - Refrigeration, வயறிங், வெல்டிங், வைன்டிங், பிளம்பிங், மோட்டர் மெக்கானிசம், Spoken English, Typing

சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகள் வழங்கப்படும்

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

## Vispa Engineering Aid Hall

328, நாவலர் ரோட்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் 01485

## மாநகர பகுதியில் இன்று பகல் மின் துண்டிப்பு

அவசர திருத்தவேலைகள் காரணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் மின் அத்தியட்சகர் பகுதியில் காலை எட்டு மணி தொடக்கம் நண்பகல் பன்னிரெண்டு மணிவரை மின்சாரம் துண்டிக்கப்படும் என்று யாழ். மின் அத்தியட்சகர் திரு. சி. த. கணநாதன் தெரிவித்தார்.

## ஆங்கிலம்

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் தவருக பேசிவிடுவோமா என்று தயக்கமாக இருக்கிறது. இதுதானே உங்களது பிரச்சனை. இனி கவலை வேண்டாம். உங்களின் பிரச்சனை மூன்றே மாதங்களில் தீர்க்க முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

Bright Training Centre
P. O. Box 162
**Colombo** 01028

## பிரயாண ஒழுங்குகள்

### ★ சவூதி அரேபியா

அல்ராஜ் கம்பனி

| | |
|---|---|
| கிளினேர்ஸ் | 400 + 100 S. R |
| மேசன் | 700 + 100 S. R. |
| எலக்றிசன் | 750 + 100 S. R. |
| வெல்டேர்ஸ் | 800 + 100 S. R. |

S. O. M. C. கம்பனி

| | |
|---|---|
| கிளினேர்ஸ் | 350 + 100 S. R. |
| றைவேர்ஸ் | 650 + 100 S R. |

### ★ குவைத்

| | |
|---|---|
| எயர்போர்ட் கிளினேர்ஸ் | 30 + 5 K. D. |

முற்பணம் அறவிடப்படமாட்டாது

செவ்வாய்க்கிழமைகளில் காரியாலயம திறக்கப்படமாட்டாது

தொடர்பு:

## நியூயோர்க் ரவல்ஸ்

K. K. S. வீதி மல்லாகம் 01540

## மூன்ரும் ஆண்டு நினைவஞ்சலி



**கணபதிப்பிள்ளை இராசதுரை**

அதிபர், பிள்ளையார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.

தோற்றம்: 07-09-1934 மறைவு: 27-01-1986

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**இராசதுரை சிவயோகம்**

தோற்றம்: 10-04-1937 மறைவு: 04-12-1988

திதி: 22 - 01 - 1989

எங்கள் ஆருயிர் தெய்வமே இனிமையான வாழ்வுக்கு வழிகாட்டினீர்கள். திடீரென எம்மை விட்டு பிரிந்தீர்கள், நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாலும் உங்கள் அன்பு எங்களை விட்டகலாது.

எங்கள் தெய்வமே எங்கள் வாழ்வுக்கு துணை நின்றீர்கள். உங்கள் மறைவு எங்கள் எல்லோர் நெஞ்சத்திலும் ஆருத் துயரை ஆழ்த்திவிட்டது. உங்கள் பிரிவால் வாடும்

அன்புள்ள
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள் மற்றும் உற்ருர், உறவினர்கள்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம். 01543

வார முரசொலி

# நம்நாட்டு எழுத்தாளர்களின் பிரசுரங்களும் விற்பனையும்

அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்ற வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தனின் நூல்கள் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் நூல்களின் விற்பனை பற்றிமனந்திறந்து பேசியகருத்துக்கள் எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும்நூல்விற்பனையும் மிகவும் உறுதுணையானவை. இவர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக அண்மைக் காலத்தில் வேறு சிலரும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

நந்தியின் பேச்சிலே தொனித்த சாரம் இதுதான். முதலில் நாம் யாருக்கு எழுதுகிறோம் என்று சிந்திப்பதில்லை. இதனால்தான் மக்கள் மத்தியில் எமது நூல்கள் செல்வதில்லை என்ற கருத்தைச் சொன்ன அவர்விற்பனைக்காகச்சொன்ன ஆலோசனைகளை இங்கு தருகிறேன். யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 600க்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்கள் இருக்கின்றன. வடக்குக் கிழக்கு, மலையகம், கொழும்பு என்று சேர்த்தால் ஆயிரத்தி ஐந்நூறுக்கும் மேற்பட்ட கல்விக் கூடங்கள் இருக்கின்றன. பிரதேச அபிவிருத்திச் சபை நூலகங்கள் இருக்கின்றன. இவை அனைத்திலும் கால்வாசி இடங்களுக்கு எமது எழுத்தாளர்களின் பிரசுரங்களை வாங்கச் செய்தாலே 500 புத்தகங்களை மிக இலகுவாக விற்பனை செய்ய முடியும்.

### உண்மையான கூற்று

என்னுடைய சொந்த அனுபவத்தை வைத்து இக் கருத்தை ஆராய்வதானால் இவரது கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரம் படிப்பகங்களுக்கும் அபிவிருத்திச்சபை நூலகங்களுக்கும் பாடசாலை நூலகங்களுக்குமாக நான் எனது வெளியீடுகளில் சுமார் 400 பிரதிகளை நானாகவே திரிந்து விற்பனைசெய்தேன். பணமோ, காசோலையோ உடனடியாகக் கிடைத்தது. ஆனால் நந்தி அவர்களோ நானே சொல்ல வரும் பிரச்சனை என்னவென்றால், எழுத்தாளன், தானாக அலைந்து நூல்களை விற்பனை செய்யாமல் ஒரு உருப்படியான நிறுவனம் அமைக்கப் பெற்று அதனூடாக இந்த விற்பனை நடைபெற வேண்டும் என்பதே

எல்லா எழுத்தாளர்களுக்கும் நூல்களைக் காவி விற்பனை செய்யும் ஆற்றலும், வசதியும், நேரமும், ஆதரவாளர்களும் இருப்பதில்லை. அப்படிக் கஷ்டப்படவேண்டிய அவசியமும் இல்லை. எழுத்தாளன் பிரசுரத்திற்காகத் தான் போட்ட முதலில் அரைவாசிப் பங்கையாவது நூல்வெளியிட்ட மூன்று மாதங்களுள் எடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் இன்னொரு புத்தகம் போட முடியாதபடி நஷ்டம்தான் ஏற்படும். பாடசாலை அதிபர்கள் வசதிக்கட்டணத்தில் நூல்களின் ஒவ்வொரு பிரதிகளைத் தயங்காமல் வாங்குகிறார்கள். சனசமூக நிலையங்களும் அபிவிருத்திச்சபை நூலகங்களும் ஒவ்வொரு பிரதிகளைத் தயங்காமல்வாங்குகின்றன. ஆனால் சுமார் 500 புத்தகங்களையாவது ஒரேயடியாக வாங்கி எழுத்தாளனுக்குரிய (கழிவு போக) பணத்தைக் காசோலையாகவோ, பணமாகவோ கொடுத்துவிட்டு நான் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு விநியோகிக்கும் ஸ்தாபனம் தான் இல்லாமல் இருக்கிறது.

### கல்விப் பகுதியின் பங்களிப்பு

திரு முருகானந்தனின் விழாவில் கருத்துரையாற்ற வந்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் அவர்களுடன் நான் இக்கருத்துப் பற்றிக் கலந்துரையாடினேன். ஒரேயடியாக 400 அல்லது 500 புத்தங்களைக் கமிஷன் அடிப்படையில் வாங்கி நீங்கள் கல்லூரிகளுக்கு விநியோகிக்க முடியாதா என்று கேட்டபோது அவர் பல நடைமுறைப் பிரச்சனைகளைப் பற்றித் தெரிவித்தார். கணக்கீடு சம்பந்தமான பல சிக்கல்கள் இருக்கும் என்றும் வசதிக் கட்டணத்தில் வாங்கப்படும்

**நெல்லை க. பேரன்**

நூல்களுக்குத் தமது திணைக்களம் கணக்கு வைக்க முடியாது என்றும் பாட நூற் பிரசுரசபையால் இவை அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார் ஆனால் எழுத்தாளரின் நூல்கள் விற்பனையாக வேண்டும் என்ற கருத்தை அவர் ஒப்புக்கொண்டதுடன் விற்பனை செய்து கொள்வதிலும் பெருவிருப்பம் உள்ளவராக இருக்கிறார்.

### கலாசார பேரவையின் உதவி

எல்லா நூல்களையும் வாங்காமல் தரமான நூல்களை மட்டும் தெரிவு செய்யும் அரசாங்க அமைப்பு ஏதாவது இருக்கிறதா என்று கேட்டார். யாழ் மாவட்ட கலாசாரப் பேரவை அரசாங்க அதிபரின் ஆலோசனையுடன் இயங்கி வருகிறது என்றும் அவர்களுடைய ஆலோசனையைப் பெறலாம் என்றும் சொன்னேன். அப்படியானால் அத்தகைய அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் தமக்கு ஈழத்து எழுத்தாளர்களின் பிரசுரங்கள், கிடைக்கும் இடங்கள், விலை என்பன அடங்கிய பட்டியல் ஒன்றை அனுப்பி வைத்தால் தான்சகல பாடசாலைகளுக்கும் அப்பிரசுரங்களை வாங்கும்படி சிபார்சு செய்து சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைக்க முடியும் என்றார்.

இவ்வாறு சுற்றறிக்கை அனுப்புவதால் எழுத்தாளனுக்கு உடனடியாகப் பணம் வரவாய்ப்பில்லை. ஏனென்றால் பாடசாலை அதிபர்கள் தமது நூலகங்களுக்குப் புத்தகங்களை வாங்கும் போதுதான் இந்த நூல்களையும் கொள்வனவு செய்வார்கள். ஒவ்வொரு வெளியீடுகளையும் உடனுக்குடன் வாங்கக்கூடிய மாதிரி இருக்காது ஆனால் கல்வித் திணைக்களத்தில் வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு ஊக்குவிப்புப்பணம்கொடுத்து (எழுத்தாளர்கள் கடைகளுக்குக் கொடுக்கும்கமிஷனை இவர்களுக்குக் கொடுக்கலாம்) அவர்களதுஉதவியுடன் நூல்களை அதிபர்களிடம்விநியோகித்துஅவர்கள் வசதிக்கட்டணத்தில் இருந்து காசோலைகளைப் பெற்று அவற்றைக் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைத்தால் திணைக்களம் எழுத்தாளர்களுக்கு ஒரேயடியாகப் பணம் கொடுக்க முடியாதா என்று கேட்டேன் இது நடைமுறைப் படுத்தக் கூடிய காரியம் என்பதையும் இதுபற்றிச் சிந்திப்பதாயும் அவர் தெரிவித்தார்.

### உள்ளூராட்சி அலுவலகம் உதவ முடியும்

இதே போன்று யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் தமது வெளிக்கள உத்தியோகத்தர்கள் (ஐ. ஓ) மூலம் அவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் கொடுத்துத் (திணைக்களத்திற்கு நஷ்டம் ஏற்படாத வகையில்) தமது அதிகாரத்திற்குட்பட்ட அபிவிருத்திச் சபை நூலகங்களுக்கும், சனசமூக நிலையப் படிப்பகங்களுக்கும் நூல்களை விநியோகஞ் செய்து பின்னர் திரட்டிய பணத்தைத் திணைக்களத்தில் ஒப்படைத்துச் சுமார் 3 மாதங்களுள் எழுத்தாளரிடம் அல்லது பிரசுரகர்த்தாவிடம் பணம் கிடைக்கச் செய்யலாம். இதை நடைமுறைப் படுத்தும் போது பற்றுச்சீட்டுக்கொடுக்கும் சிக்கல் எழலாம் இதை வட்டாரக் கல்வி அதிகாரிகளும், உள்ளூராட்சிப் பகுதி வெளிக்கள உத்தியோகத்தர்களும் தமது பொறுப்பில் கொடுத்துப் பணம் வாங்கிவிட்டுப் பின்னர் ஒரேயடியாக எழுத்தாளரிடம் இருந்துதாம் விற்பனை செய்து கொடுத்த நூல்களின் எண்ணிக்கைக்குரிய பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பிரச்சனையைத் திணைக்களம் தீர்த்துவைக்கும்.

இந்த வேலைக்கு நான் குறிப்பிட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புத் தேவை. அவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்புப் பணம் கிடைப்பதால் நிச்சயமாக அவர்கள் இதைச் செய்வார்கள். பலர் சேவை மனப்பான்மையுடன் எழுத்தாளர்களுக்கு உதவும்நோக்குடனும் இவ்வாறு செய்து வருகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

### அனைவரதும் ஒத்துழைப்பு தேவை

நடைமுறைப்படுத்தக் கூடிய இந்த ஆலோசனைகளை அதிகாரிகளின் ஆதரவும் விருப்பமும் இருக்கக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுவ

... 15 ஆம் பக்கம் பார்க்க

## செயற்கரிய செய்தோர்

### கபிலர்

சங்கப் புலவராகிய கபிலர் பாரியினிடத்துப் பேரன்பு கொண்டவர் பேரரசர்களால் எல்லாம் மதிக்கப் பெற்ற அவர், அவர்களோடு எல்லாம் வாழவிரும்பாது பாரியுடன் வாழ்வதையே பெரிதும் விரும்பினார். பாரியின் கொடையும், நற்குணங்களும் கபிலரை மிக மிகக் கவர்ந்துவிட்டன

பாரி பாண்டிய மன்னனால் கொல்லப்பட்டபோது கபிலர் துடிதுடித்தார். தமது உயிரைஉடனே விட நினைத்தார். ஆயினும் பாரியின் புதல்வியராகிய அங்கவை சங்கவை இருவரின் நலன் குறித்துச் சில காலம் வாழநினைத்தார்.

தந்தையையும், தாயையும் இழந்த பாரி மகளிர் இருவரையும் அழைத்துக் கொண்டு இருங்கோவேளிடமும், விச்சிக்கோவிடமும் சென்று அவர்களை மணஞ் செய்து கொள்ளுமாறு வேண்டினார். அவர்கள் உடன்படவில்லை.

பின்னர் கபிலர் கடையெழுவள்ளலுள் ஒருவனாகிய காரியை அடைந்து தான் வந்த வரலாற்றைக் கூறினார். கபிலரின் வேண்டுகோளுக்கு இணங்கிய காரி தமது மக்கள் இருவருக்கும் அங்கவை சங்கவையை மணம் செய்வித்தார்.

தனது கடமை முடிந்ததை உணர்ந்த கபிலர் பாரியின் பிரிவைப் பொறுதவராகி வடக்கிருந்து உயிர்நீத்தார்.

தனது பாடல்களால் சங்க இலக்கியத்தில் நிலைத்த கபிலர் தனது நண்பனாகிய பாரியில் வைத்த மதிப்பினாலும், பாரியின் புதல்வியர்க்குச் செய்த பேருதவியாலும் பெரும் பண்பாலும் மனித இதயங்களில் எல்லாம் நிலைத்தார்.

## தரிசனம்

எதுவானாலும் மலிந்தால் சந்தைக்கு வரும் என்பது பழமொழி

ஈழத்து இலக்கிய உலகிலும் இப்போது சில மலிவான விடயங்கள் சந்தைக்கு மட்டுமன்றி, சந்திக்கும் வரத்தொடங்கியுள்ளன.

இவற்றுள் ஒன்று, இலக்கியப் போட்டிகள், தெரிவுகளும், அவை தொடர்பான பரிசளிப்புகளுமாகும்.

இலக்கியப் போட்டிகள் எதற்காக நடத்தப் படுகின்றன என்ற நோக்கத்தையே சிதறடிக்கச் செய்யும் வகையில்இங்குஇடம் பெற்றுவரும் சில சம்பவங்கள், எழுதுவதற்கே கூச்சமானவையாகும்.

சில வருடங்களுக்கு முன்னர் இங்குள்ள ஒரிரு எழுத்தாளர்கள் சில போட்டிகளில் தங்கள் வயதை மறைத்து போட்டிக்குப்படைப்பை அனுப்பியதும், வயது தெரிய வந்தபோது மௌனமாக விலகிக்கொண்டதும், இதனால் இன்னொருவருக்குக் கிடைக்க வேண்டிய பரிசை இல்லாமல் செய்ததும் மறக்கக் கூடியவையல்ல.

அதே கோஷ்டி, பின்னர் மனைவியர் பெயரில்எழுதி பரிசை அபகரித்ததையும் இலக்கிய உலகு அறியும்.

இதன் பின்னர் இவர்களால் நடத்தப்பட்ட போட்டிகளையும், இவர்கள்நடுவர்களாக இருந்து அளித்த பரிசுகளின் கேவலங்களையும், இப்போது அநேகமாக அனைவருமே புரிந்து கொண்டு விட்டனர்.

இதுவரைகாலமும் இவர்களின் வட்டத்துக்குள் சிக்கியிருந்த சில முக்கியஸ்தர்கள் இப்போது 'உண்மை' கூறப் புறப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்றபரிசளிப்புநிகழ்ச்சியொன்றில்நேரடியாகவே ஒருவர் தமது மனதில் பட்டதை வெளிப்படுத்தி விட்டார்.

போகிற போக்கில் இன்னும் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும் போலத் தெரிகின்றது.

அண்மையதேநீர்விருந்து வைபவமொன்று இது தொடர்பான பல விடயங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து விட்டது.

"செப்படி வித்தை"க் காரர்களை இலக்கிய உலகு அடையாளம் காண ஆரம்பித்து விட்டதானது மகிழ்ச்சியைத் தருகின்றது.

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# திரைத்தலைகளில் ஒரு கவிதை

என் ''தாய்''
''தெய்வத்திடம்''
''குழந்தைக்காக''
தவமிருந்து
பெற்றெடுத்தாள்
என்னை!
''கண்ணே பாப்பா'' என்று
''பாலும் பழமும்''
ஊட்டி வளர்த்தாள்
என்''வாழ்க்கைப் படகு''
''பட்டாம் பூச்சியாய்''
சிறகடித்த வேளையிலே
''காதல் படகில்''
'சிறைப்பறவை''ஆனேன்
'அண்ணா நகர் முதல் தெருவில்'
'டாக்டர் சிவாவை'
முதல் தடவை சந்தித்த போது
'கண்ணோடு கண்'
பார்த்தேன்
'முதல் மரியாதைக்காக'
'மந்திரப் புன்னகையை'
பதிலுக்குக் கொடுத்து
'புன்னகை மன்னன்'னாய்
நான் உன்
'ராஜ பார்வையை'
ரசித்தேன்–நீ ஓர்
'பாசமலராய்'
என்னிடத்தில்
வந்தாய்–நான்
'பாலைவனச் சோலையில்'
'பாலைவன ரோஜாக்களில்'
ஓர்
'சிவப்பு ரோஜா'தான்
என்றேன்
நீயோ
'நல்லவனுக்கு நல்லவன்'
'சகல கலா வல்லவன்'
என்றாய்–நீ
'வணக்கத்துக்குரிய காதலியே'
என்றாய்! நானோ
'வணங்காமுடி'
என்றேன்–என்
'இதயக் கோயிலில்'
நீ என்றும்
'அழியாத கோலம்'
தான் என்றாய் நானோ
'நெஞ்சிருக்கும்வரை'
'நெஞ்சம் மறப்பதில்லை'
என்றேன் – நீயோ
'நினைவெல்லாம் நித்யா'
'உயிரே உனக்காக'
என்றெல்லாம்
காதல் வசனம் பேசினாய்! நீ
'ஆயிரத்தில் ஒருவன்'
'உயர்ந்த மனிதன்'
தான் என்றுநினைத்தேன்
அந்த
'பருவ மழையில்' என்
'நெஞ்சில் ஓர் ஆலயத்தில்'
உன் நினைவுகளால்
'மெல்லத் திறந்தது கதவு'
உன்னைப்
'பார்த்தாலே பசிதீரும்'
உன்னை
'நினைத்தாலே இனிக்கும்'
உன்
'நினைவே ஓர் சங்கீதம்'
என்றெல்லாம் என்
'இளமை ஊஞ்சலாடியது'
'உன்னிடத்தில் நான்'
என்னைப்பற்றி
சொல்லத்துடிக்குது மனசு'
ஆனால் நான் ஓர்
'மௌனராகம்'
'இரயில் பயணங்களில்'
'பச்சை விளக்கை'
காட்டுவது போல என்
'வசந்தமாளிகையில்'
நீ 'ஒளிவிளக்கை'
ஏற்றிய 'அபூர்வ ராகம்'
என்றிருந்தேன்!
''மூன்றாம் பிறை'' யன்று
''அம்மன் கோயில் கிழக்காலே''
''திரி சூலத்தின்'' அருகே
நான் நின்ற போது நீ
''ஆலய மணி''யை அடித்தாய்!
என்னிடத்தில் வந்த நீ
''பூஜைக்கு வந்த மலரை
எடுத்து 'பூவே பூச்சூடவா'
என்றாய்! என்
'மௌனங்கள் கலைவதில்லை'
தான் இருந்தும்
உன் கண்ணீரைக் கண்டு
'ஆயிரம் ஜன்மங்கள்'
எடுத்தாலும் என்
'இதயத்தில் நீ' தான்
'நாயகன்' என்றிருந்தேன்-
'நிலவே நீ சாட்சி'
நீ தான் என் 'மனைவி'
என்றாய்–உன்னை
'உத்தமன்'
என்று நினைத்தேன்–
ஆனால்
'நூறாவது நாள்' அன்று
'அன்னமிட்ட கை'யை
மறந்து என்
'துடிக்கும் கரங்கள்'
'அன்பைத் தேடி'
வந்த போது
'அன்பே வா'
என்றழைப்பாய்
என்றிருந்தேன்! ஆனால் நீ
'காதலிக்க நேரமில்லை'
என்றாய் – ஆனால் நீ ஓர்
'முரட்டுக் காளை'
என்பதை
யானறியேன்! நீ
'மூன்று முடிச்சு' போட்டு
'தாலிக் கயிறு' போடுவாய்
என்று
'மனக்கணக்கு'போட்டேன்
ஆனால்
'மணல் கயிறை' போட்டாய்–
நீ 'குங்குமம்' இடுவாய்
என்றிருந்தேன்.
ஆனால் 'இரத்த திலகம்' இட்டாய்–
நீ 'காஞ்சித் தலைவன்'
என்று நினைத்து
நான் 'காவியத்தலைவி'
ஆனேன்–
என் காதல் 'ஒருதலைராகம்'
தான்! என்
'காதல் வாகனம்'
'படகோட்டி' இன்றி
தத்தளிக்கிறது–
'ஊட்டி வரை உறவு'தான்
நம் காதல் என்று சொல்லி
நீ 'சின்ன வீடு'
சென்று விட்டாய்–
'இது ஓர் தொடர்கதை'
தான் – வாழ்க்கைப்
'பயணங்கள் முடிவதில்லை'
தான் 'திசைமாறியபறவை'
யான் 'தாய் வீடு'வந்து
'தாயின் மடியில்'
'பாவ மன்னிப்பு' கேட்டேன்–
என் 'அம்மா'
'பார் மகளே பார்'
'படித்தால் மட்டும்
போதுமா?'
நீ 'புகுந்த வீடு'சென்று
'குத்து விளக்கு' ஏற்றி
'குலமகளாய்' வாழ்வாய்
என்றிருந்தேன் ஆனால் நீ
உன் 'இளமைக்கோலங்களை'
வீணாக்கி விட்டாய்
இது தான் 'விதி' என்றார்–
நான் 'புதிய பறவை' யாய்
வாழ நினைக்கிறேன்
ஆனால் ..................... என்
'இதய வீணை'யில்
என் 'வசந்த ராகங்களில்'
நீ ஓர் 'சிந்து பைரவி'–
என் 'கடலோரக் கவிதை'களில்
நீ ஓர் 'சங்கராபரணம்'–
என் 'இதயக் கமலத்தில்'
நீ ஓர்'ஆனந்த பைரவி'–
உன் நினைவுகள்
என்னை 'நிழல்களாக'
தொடர்கின்றன– 'நீயா'
இன்று
'இரத்தக் கண்ணீர்'
வடிக்க விட்டு
'கூட்டுப்புழுவாய்'
மறைகின்றாய்–
உன்னை நான்
'ஊமை விழிகளால்'
பார்க்கிறேன்–
என் 'வாழ்வேமாயம்'
தான் இன்று நீ
'பொய்சாட்சி'
காதலுக்கு சொல்லலாம்–
ஆனால் 'நீதிக்கு பின் பாசம்'
வருவது போல் நீ
'நீதிக்கு தண்டனை'
பெற்று ''நல்லநேரம்'
வரும் வரை
'காத்திருந்த கண்கள்'
வீணாகாது இது ஓர்
'கைதியின் டயறி'யால்
எடுத்த
'காதல் ஓவியம்' தான்–

★ எழிலி

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## புது உறவு கோள்வோம்!

கோபத்தால் உலகெங்கும் அழிவுதோன்றும்–மனித
குலநீதி பகையாலே மறைந்து போகும்
ஆபத்தில் எவ்வுயிர்க்கும் உதவி செய்யும்–நல்
அன்பாலே உள்ளத்தில் அமைதி வாழும்!

காலத்தால் அழியாத மனித நீதி–தனை
காப்பதுவே மானுடத்தின் கடமையாகும்
ஞாலத்தோர் எல்லோரும் சோதரர்கள்–எனும்
நல்லுணர்வு இதயத்தில் இனிமை செய்யும்!

அன்புக்கு அடிபணியும் மனித உள்ளம்–அது
அன்றுடம் தோல்வியினைச் காண்பதில்லை
துன்பத்தில் துவழாத வலிமை உண்டேல்–மனம்
துயர்க்கடலில் வீழாது உலகை வெல்லும்!

மேகத்துள் மழை ஒளிந்து பொழிதல் போலே–உன்
மேன்மைக்குள் பொது நலமும் வேண்டும்;
பொய்மை
மோகத்தால் பண்பாடு சிதைந்து போகும்–கொடும்
மூடநிலை மறைந்தாலே மனிதம் வாழும்!

நீதிக்கு வாழ்வளித்து உறவு கொள்ளும்–புது
நேசநிலை மனிதர்களை இணைய வைக்கும்
போதித்தல் பெரிதன்று செயல்கள் தானே–இப்
பூமியிலே புது வாழ்வை பிரசவிக்கும்!

தேசத்தால் மொழி வகையால் பிரிவுசெய்து–நாம்
திசை மாறின் போராலே அழிவு காண்போம்
பாசத்தால் ஒன்றாகும் மனித சாதி–புது (ப்)
பண்பாலே இணைந்துவிடின் பகைமையில்லை!

★ வளலாய் ரஞ்சன்

## என் செயலும் இறைவனும்

எடுத்தவொரு காரியத்தில் எதிர்பாரா வெற்றி வந்தால்
'என்செயல்திறமையினுல்! நான்பெற்றவெற்றி' என்பேன்
எதிர்பாராத் தோல்வியதில் எனக்குவந்து விட்டாலோ
'என்செயலா லாவ தொன்றுமிலை! இவ்வுலகில்
எல்லா மிறைவன் செயலே! நடப்ப' தென்பேன்

★ அல்லை க. வ. ஆறுமுகம்

## அகமும் புறமும்

மனமது மகிழும் போது
வருமிசை மகிழ்ச்சி கூட்டும்
மனமது கலங்கும் போது
வருமிசை கவலை சேர்க்கும்

இயல்பிது மனித வாழ்வில்
இயற்கையும் மகிழ்ச்சி ஊட்டும்
துயரது வந்து சேர்ந்தால்
சூழலே துயரைக் கூட்டும்

குழந்தைகள் மழலை தானும்
குழலினின் ஓசை தானும்
மனதினில் துயரம் கண்டால்
மாறியே வெறுக்கத் தோன்றும்

கொடியினில் பூத்த முல்லை
கொத்துடன் பறித்துச் சூடி
மகிழ்வது வழக்க மாகும்
மலர்களும் மகிழ்ச்சி ஊட்டும்

துயரமே சூழ்ந்த தாலே
சூடிடும் முல்லை கூட
பூத்தது பொருத்த மில்லை
புலவனே வெறுத்தான் பாடி

ஊரெலாம் கவலும் போது
உனக்கு ஏன் மகிழ்ச்சி என்று
கேட்கிறான் முல்லை தன்னை
கேள்வியில் துயரம் தோன்றும்

★ வ. யோகானந்தசிவம்

## அவர் முன்போல இல்லை

முச்சந்தி வீட்டு முருகையா
முன்போலில்லாது நடக்கிறார்
பார்க்கும் முகங்களுக்கு
தலையசைப்பு
பாராது போறவர்க்கும்
அழைப்பு
கையில் சுவிஸ்ப் பிராங்குகளும்
கனேடியன் டொலர்களும்
வெகுதாராளமாய் புழக்கம்
கசிப்படித்த வாய்க்கு
பிஸ்கியியும். பிரண்டியும்
நிலைகொள்ளாமல் தவிக்கிறார்
நினைவுகள் ஏதும் அற்றவராய்
அன்றுவந்த கடிதமே
அவருள் நிறைந்து நிற்கிறது
அப்படி என்ன விசேடம்?
அப்பு தனிய இருக்கப்பயமென்றால்
ஆரும் ஒரு புறேக்கரை
பிடித்து
காலநேரம் பார்த்து
கல்யாணம் ஒன்றைச் செய்யுங்கோ
என கனடா மகன் எழுதியமையால்
முச்சந்தி வீட்டு முருகையா
முன்போலில்லாது நடக்கிறார்.

★ உமா

## உள்ளத்தில் இல்லை ஊனம்

நான் போகும் போதும்
வரும் போதும்
அடுத்த வீட்டு
யன்னலில்
முல்லைப் பூ ஒன்று
மெல்ல நகைக்கும்
என் தொல்லை மறந்து
உள்ளமோ
துள்ளிக்குதிக்கும்
அந்தக் கள்ளமில்லா
வெள்ளைமலரை
அள்ளிச் சூடக்
காத்திருந்தேன்
காலம் வந்தது—
நான் கூட்டிவந்த
என் பெற்றோரை
வரவேற்க
கதவு திறந்தது
கண்டேன் என்
தேவதையை
கட்டழகின் பொக்கிஷந்தான்
ஆனால்—
சல்லடை மிக்க
ஷெல்லாட்சியாளர்கள்
என் தேவதையின்
இடது காலை ஊனப்
படுத்தியிருந்தார்கள்
பூவை அழுதாள்—
பாவம் என்று
நான் பரிதாபப்பட்டு
அவளை மணக்கவில்லை
பரிணமத்தோடு
ஏற்றுக்கொண்டேன்

★ செவ்வந்தி
மகாலிங்கம்

## ஆகாச வீடுகள்

மண்ணை மறந்து
விண்ணைநோக்கும்
வரட்டுத்தத்துவங்களே!
நீங்கள் யாருக்காக
மண்ணில் வாழும்
மனிதனுக்காகவே
மண்ணுக்கு வாருங்கள்
கூடிவாழுவோம்
சேர்ந்து உயருவோம்

★ சின்னத்தம்பி
சதாசிவம்

சமூக நவீனம்

# காலங்கள் மாறும்



கே.எஸ்.ஆனந்தன்

## அத்தியாயம் ஒன்று

கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. விலைமதிக்க முடியாத அந்த விடிகாலைப் பொழுதின் இதமான குளிரை ஏந்தி வீசிக்கொண்டிருந்த காற்றைக் கிழித்துக்கொண்டு வடக்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்தது ரயில் வண்டி. அடுத்துவரும் நிலையத்தில் இறங்குவதற்காக ஆயத்தம் செய்பவர்களும், காலைக்கடன் கழிக்க அவதிப்பட்டு ஓடுபவர்களுமாக ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்த அந்த ரயில் பெட்டியின் ஓர் மூலை இருக்கையில் கண்களை மூடியவாறு இருந்தாள் சந்திரஞானம்.

அவள் மனம் எங்கோ அலைந்து கொண்டிருந்தது. பிறந்த மண்ணைவிட்டு இரவோடு இரவாக ஓடிவந்து விட்டபின்பு இருபது வருடங்களின் பின் பிறந்த மண்ணைநோக்கிப் பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அன்றைக்கு எனத் துணையில்லாத தனிமையும் அவளைப் பற்றிக்கொண்டிருந்த அச்சமும், பலபேர் மத்தியிலிருந்த போதும் ஓர் அனாதரவான நிலையில் விடப்பட்டிருப்பது போன்ற தவிப்பு.

இருபது வருடங்களுக்கு முன் எந்தச் சூழ்நிலையில் அவள் பிறந்தமண்ணை விட்டுப் புறப்பட்டதும் அதன் பின்பு நடைபெற்ற சம்பவங்களும் அவளுடைய மனத் திரையில் தெளிவில்லாத பிம்பங்களாக ஓடிக்கொண்டிருந்தன.

வண்டி ஓர் நிலையத்தில் நின்று .திரும்பவும் தன் கடமையை ஆரம்பித்து விட்டிருந்தது. பொழுது புலர ஆரம்பித்துவிட்டது. கீழ் வானம் சிவந்து செங்கதிர்க் கோடுகள் பளிச்சிட்டு மின்னின. வயல் வெளிகளைக் கடந்து குடியிருப்புப்பகுதி ஊடாக வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

''ஸ்ரேசனுக்கு யாராவது வந்திருப்பார்களோ?''

இல்லை நானுகத்தான் போய்...... என்று நினைத்த போது தொண்டைக்குள் ஏதோ அடைப்பது போன்றிருந்தது. அதற்கு மேல் அவளால் எதையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. விழிகளில் நீர் திரையிட்டது. நீர் நிறைந்த விழிகளைத் துடைத்துக்கொண்டே வெளியே பார்வையைச் செலுத்தினுள்.

காலைநேரத்து ஆரவாரங்கள், ரோட்டில் ஒன்றை ஒன்று துரத்துவது போன்று பஸ்களும், கார்களும் சென்று கொண்டிருந்தன. சில நிமிட நேரங்களில் காட்சிகள் மறைந்து அமைதியாக வண்டி நின்றது. வெளியே எட்டிப் பார்த்தாள். 'யாழ்ப்பாணம்' என்ற கறுத்த தடித்த எழுத்துக்கள் தெரிந்தன. நெஞ்சு 'திக் திக்' என அடித்துக் கொண்டது.

இன்னும் ஐந்தோ பத்தோ நிமிடங்களில் பிறந்த மண்ணை மிதிக்கப்போகிறேன். இருபது வருடங்கள் தரிசிக்காத காட்சிகளை, மக்களை தரிசிக்கப்போகின்றேன். அதுவும் ஓர் துயரத்தின் சந்நிதியில் பலரது பார்வைக்கும் ஆளாகிநிற்கப்போகிறேன் எனநினைத்தபோது வண்டியை விட்டிறங்கி அடுத்த வண்டியில்திரும்பிவிட்டால்... என்றும்மனம் நினைத்தது. ஆனல் கணவன்கட்டளைப்படி அவன், வேண்டுகோளுக்கிணங்கித்தானே வந்திருக்கின்ருள். எப்படித் திரும்பமுடியும்?

'நடப்பது நடந்தே தீரும் என இருபது வருடங்களுக்கு முன்பு எப்படி திடசித்தத்துடன் புறப்பட்டாளோ அதே திட சித்தத்துடன் புறப்பட்டிருந்தாளாயினும் வர வர மனதில் திகில் அதிகரித்தது. ஆனலும் மனம் தளரவில்லை.

''ஞானக்கா'' எங்கோ அவளுக்கு பழக்கப்பட்ட குரல், குரல்வந்ததிசையில் பாலசிங்கம்நின்று கொண்டிருந்தான்

''தம்பி நீங்களா?'' என்ருள்

''உங்களை அழைத்துப் போகத்தான் வந்தேன். இறங்குங்கோ. கார் கொண்டு வந்தனுன்'' என்ருன். உரும்பராய் நோக்கி கார்விரைந்து கொண்டிருந்தது. பாலசிங்கம் டிரைவர் சீட்டுக்கு பக்கத்தில் முன்னல் அமர்ந்திருந்தான். சந்திரஞானம் எதுவும் பேசாமல்உட்கார்ந்திருந்தாள்.

பலாலிவீதியில் கார் ஓடிக்கொண்டிருந்தது. வியப்புடன் இருமருங்கிலும் பார்த்துக் கொண்டிருந்தாள். இருபது வருடங்களில் எவ்வளவு மாற்றங்கள். புதர்க் காடுகளாயும் வெட்டவெளி களாயுமிருந்த இடங்களில் வீடுகளும் மாடிக் கட்டிடங்களும் எங்கோபுதிய இடத்துக்கு போவதுபோன்ற பிரமை.

''நீங்கள் இனுவிலுக்கோ 'ரிக்கற்' எடுத்தனீங்கள்?'' என்று பின்னல் திரும்பிக் கேட்டான் பாலசிங்கம்.

''ஓம் தம்பி நான் உங்களை எதிர்பார்க்கலை?''

''நான் இனுவிலுக்குத் தான் புறப்பட்டனுன். மாசிலாமணியண்ணர் தான் இங்கை அனுப்பினர்'' என்று கூறினுன்.

பாலசிங்கம், அவளுடைய கணவன் மாசிலாமணியின் தூரத்து உறவுக்காரன். அடிக்கடி வவுனியாவுக்கு வியாபார நிமித்தமாக போய்வருவான் சிலவேளைகளில் கிளிநொச்சி சந்தைக்கும் போவான். அப்படி போக்குவரத்தில் இரவு தங்கவசதிக்காக வவுனிக்குளத்திலுள்ள மாசிலாமணியின் வீட்டுக்கும் வருவான். அப்படிப்பட்டசில உறவினர்களை மட்டுமே சந்திரஞானத்துக்கு பழக்கம். மற்றும் உறவினர்களை தெரிந்திருந்தும் அவர்களுக்கும் அவளுக்குமிடையில் இருபது வருடபிரிவு பெரும் விரிசலை ஏற்படுத்திவிட்டிருந்தது.

அவள் சிந்தனைக் கடலுள் மூழ்கிப்போயிருந்ததால் கார் ஒழுங்கைக்குள் திரும்பியதையோ அவளுடைய கணவன் வீட்டுக்குச் செல்லும் சிறுபாதை ஓரத்தில் நிறுத்தப்பட்டதையோ அவதானிக்கவில்லை. அழுகுரல்களின் ஓசை அவளை இவ்வுலகிற்கு அழைத்து வந்தது. கார் வந்து நின்ற சப்தம் கேட்டு ஐந்தாறு சிறுவர்கள் ஓடிவந்து காரைச் சூழ்ந்துகொண்டனர். பாலசிங்கம் இறங்கி பின் கதவை திறந்துவிட்டான். அழுதபடியே சந்திரஞானம் அவனைப் பின்தொடர்ந்து சென்ருள்.

அதேவேளையில் வவுனிக்குளத்திலுள்ள அவளுடைய வீட்டில் அருள்மொழி நங்கை படுக்கையிலிருந்து எழுந்தாள் முந்தின இரவு படித்தபுத்தகங்களும், எடுத்த குறிப்புகளும் மேசைமீது அப்படியே கிடப்பதைப் பார்த்தாள். அம்மா இருந்திருந்தால் இவைகளை எடுத்து ஒழுங்காக வைத்திருப்பாளே என்று நினைத்தபோதுதான் தாய் யாழ்ப்பாணம் போனதும், அவளுடைய பாட்டி மரணப் படுக்கையில் கிடப்பதாக தந்தை தந்திகொடுத்திருந்ததும் நினைவுக்கு வந்தது.

பின்புற வாசல் கதவு திறந்திருந்தது. தம்பி விசுவநாதனுடைய படுக்கை மரக்கட்டிலில் சுற்றி வைக்கப் பட்டிருந்தது. இவன் ஏன் என்னை எழுப்பாமல் போனுன். இரவு வெகுநேரமாக படித்துக் கொண்டிருந்தவள் அசந்து தூங்குகின்ருளே என எண்ணியிருப்பான் என நினைத்தவாறே கொல்லைப்புறம் சென்ருள். தம்பி 'லக்ஷ்மி'யில் பால் கறந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் கண்ணுக்குட்டி 'அம்மா' எனக் குரல் கொடுத்தது.

'கண்ணுக்கு தண்ணி பருக்கினியா விசு'

'ஆமாக்கா'

'என்னடா ஆமாக்கா? இப்படி கதைத்துப் பழகாதே என்று எத்தனை நாள் சொல்லியிருக்கிறேன்' என்று கூறியவாறே முகம் கழுவுவதற்காக கிணற்றுப் பக்கம் சென்ருள்.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இரண்டு ஏக்கர் மேட்டுக் காணியில் அமைந்த சிறு வீட்டை மாசிலாமணி தன் சொந்தச் செலவில் சில மாறுபாடுகள் செய்து நவீனமயப் படுத்தியிருந்தான். வீட்டுக்குப் பின்னே மாட்டுத் தொழுவம். கறவை மாடுகள் மட்டுமே அங்கே கட்டப்பட்டிருந்தன. மற்றவை வயலுக்கு போய்விடும். வீட்டைச் சுற்றவர பசுஞ் சோலையாய் காய்கறித் தோட்டங்களும் வாழை, கமுகு, மா, பலா, எலுமிச்சை, தோடை என மாசிலாமணியின் உழைப்பின் உயர்வை பறைசாற்றிக் கொண்டிருந்தன ரோட்டுக் கரையிலிருந்தபடியால் மின் வசதிகூட கொடுக்கப்பட்டிருந்தது.

முகம் கழுவிய பின்பு கொடியில் கிடந்த சிறு துவாயை எடுத்து முகம் துடைத்துக் கொண்டே புகைமண்டலமாய் காட்சியளிக்கும் பனி மூட்டத்தை ஊடுருவிவரும் கதிரவனின் எழிற்கோலத்தைப் பார்த்தாள். பனியிலே குளித்து நிற்கும் மரங்களையும், சிறுதானியப் பயிர்களையும் பார்த்த போது தகப்பனுடைய முயற்சியின் விளைவுதான் அவையாவும் என்பதை எண்ணிப் பெருமை கொண்டாள். அந்தப் பகுதியில் மாசிலாமணியோடு வந்து குடியேறியவர்களே மாசிலாமணியைப் புகழ்ந்து பாராட்டியதையும் அறிந்தவளாகையால் தகப்பனுடைய முயற்சியின் பயனே தானும் படித்து ஓர் ஆசிரியையாக படிப்பித்துக் கொண்டே பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருப்பதையும் நினைத்து மனம் மகிழ்வுற்ருள். அதே வேளை அவள் குடும்பத்தை சூழ்ந்துள்ள ஓர் மர்மத்துக்கு விடைகாண அவள் துடித்துக் கொண்டுதானிருந்தாள். அதுதான் முடியவில்லை. அதை அறிய வேண்டுமென விரும்பினுளாயினும் தீவிரம் கொள்ளவில்லை.

மாசிலாமணியின் உறவினர்கள் என்று சிலர் வந்து போவதுண்டு. ஆனல் அவர்கள் வீடுகளுக்கு ஒருமுறையேனும் மாசிலாமணி தங்களை அழைத்துச் செல்லாதது அவளுக்கு ஒரு வியப்பு. விசுவநாதனை சிலவேளைகளில் யாழ்ப்பாணம் கூட்டிச் சென்றிருந்தாலும் தாயோ, தானே போகாதது பற்றி அவள் உள்ளூர வருந்தினளாயினும் தங்களுக்கு எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் சகல சௌகரியங்களோடும் வைத்திருக்கும் தகப்பனை குறைவாக நினைக்க மனம் வருமா?

அவள் எங்கே போவதானுலும் கூட்டிச் செல்வான். எது கேட்டாலும் வாங்கிக் கொடுப்பான். ஏ.எல். வரை படிக்க வைத்தான். பின்தங்கிய பகுதிக்கு கல்விப் பகுதியால் வழங்கப்பட்ட சலுகைகளின் அடிப்படையில் அதிகம் பிரயாசமின்றியே யார் யாரையோ பார்த்து தனக்கு ஓர் ஆசிரியைவேலை அதுவும் வீட்டுக்குச் சமீபமாக உள்ள பாடசாலையில் பெற்றவன் செய்யவேண்டிய கடமையில் சிறிதளவேனும் குறைவின்றி நடந்து கொண்டான் மாசிலாமணி. அம்மாவும் சந்தோஷமாகத்தானிருக்கின்ருளாயினும் அம்மாவிடம் இனம் காண முடியாத ஒரு சோகம் குடிகொண்டிருப்பதை அவள் அவதானிக்கத் தவறவில்ல.

விசுவநாதனே தண்ணீர் சுடவைத்திருந்தான். மின்சாரத்தின் உபயோகம் அவர்களுக்கு மிகுந்த உதவியாயிருந்தது. அடுப்பு பற்றவைப்பதற்கு அவளும் அம்மாவும் எத்தனைநாள் சண்டை போட்டிருப்பார்கள். இப்போ அந்தப் பிரச்சனை இல்லை. 'அக்கா சுவிட்சை ஓவ் பண்ணிவிடுங்கோ' என்று விசுவம் குரல் கொடுத்தான்.

மின் சுவிட்சை நிறுத்திவிட்டுப் பூசை அறைக்குள் சென்ருள். விளக்கேற்றிக் கும்பிட்டு விட்டு வெளியே வந்தாள். படிக்கின்ற மேசையருகேயிருந்து முதனாளிரவு எடுத்த குறிப்புக்களை ஒருமுறை திருப்பிப்பார்த்தாள். படிப்பதற்குத் தொடங்கிவிட்டால் புறச்சிந்தனைகளிலிருந்து விடுபட்டுப் பாடத்திலேயே அவள் ஒன்றிவிடுவாள்.

''அக்கா''

''ம்'' என்று நிமிர்ந்தவள் தேநீர்க்கோப்பையுடன் நிற்கும் விசுவநாதனைப் பார்த்து ''அடடே நான் இதைப் பார்த்துக் கொண்டிருந்ததால் தேநீர்போட மறந்துவிட்டேன். நீ குடிச்சுட்டியா?'' என்ருள்.

''இல்லை.''

''சரி குடித்துவிட்டு இங்கே வா''

இரண்டு நிமிடத்தில் அவன் வந்து சேர்ந்தான். அவள் ஏதும் படிப்புச் சம்பந்தமாய் கேட்கப் போகின்ருளோ என பயந்து கொண்டே வந்து நின்ருன் விசுவநாதன்.

''விசு அப்படி இரேன்'' என்று நாற்காலியைச் சுட்டிக் காட்டினுள்.

தகப்பன் தாய் முன்னிலையில் அவர்கள் குடும்பவிடயமாய் எதுவும் கதைப்பதில்லை. அந்தளவிற்கு அவர்கள் நடந்துகொள்வதுமில்லை தகப்பனில்லாத வேளைகளில் தாயிடம் கூட அவள் கேட்பதில்லை. அவள் பிறந்து வளர்ந்த இடமும் சுற்றுடலும் தான் அவளுடைய உற்ருர், உறவினர்களாயிருந்தனர். மற்றவர்களை அவளுக்கு இன்றுவரை தெரியாது இன்று அவளுள் ஏதோ ஓர் ஆர்வம் மரணப்படுக்கையில் உள்ள பாட்டியைக் கூடப் போய்ப் பார்க்கமுடியாத நிலையில் தங்களுக்குள் ஓர் பந்தபாசம் உறவினர்கள் என்று தொலை தூரத்துக் கப்பாலிருக்கின்ருர்கள். அவர்களைப்பற்றித் தெரிந்து கொண்டால் என்ன என்று நினைத்தாள்.

''விசு நீ எங்க பாட்டிவீட்டுக்கு போனனி தானே?''

''போனனுன்?''

''வேறு யார் யார் வீட்டுக்கு போனனி?''

''பெரியப்பா, மாமா, மாமி என்று அப்பா கூட்டிப் போனர்.''

''அம்மாவுடைய சொந்தக்காரர் வீட்டுக்கும் போனியா?''

''இல்லையே''

''ஏன்டா? அவங்களுக்கும் அப்பாவுக்கும் சரியில்லையா?''

''என்னவோ எனக்குத் தெரியாது. ஆனல் அம்மம்மா செத்துப் போனுங்களே தெரியுமா?''

''என்ன அம்மாவின் தாயா?''

''ம்'' என்று தலையாட்டியவன் தொடர்ந்து கூறியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவளுக்கு ஏதோ மர்மக்கதை கேட்பது போலிருந்தது அவளுடைய பெண்மனம் பேதலித்தது அம்மம்மா அப்படிச் சொல்லுமளவுக்கு அம்மா என்ன செய்தாள்? நினைவுக்கு எட்டாத- தெளிவில்லாத சிந்தனைகளாகவே தோன்றின.

''அவள் என் பிள்ளையில்லை! அவள் என் பிணத்தைக் கூட பார்க்க விடக்கூடாது என்று மாமாவிடம் சத்தியம் வாங்கிக் கொண்டபின் தான் உயிர்விட்டாங்களாம் அம்மம்மா'' என்று விசுவநாதன் கூறிக்கொண்டிருக்கையில் வெளியே மணிச்சத்தம் கேட்டது.

(வளரும்)

வைத்திய கலசம்

# தொய்வு நோயாளிகளுக்கு சில ஆலோசனைகள்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B.S. (Cey)

✶ உங்களுக்குத் தொய்வு–ஆஸ்த்மா தொடர்ந்து இருப்பதில்லை. திடீரெனத் தோன்றுகின்றது. இது தோன்றுவதற்கான காரணங்கள் எவை என நீங்கள் அறிய ஆவல்படக்கூடும். சிலவேளைகளில் அந்தக் காரணத்தை உங்கள் அனுபவம் மூலம் ஏற்கனவே உணர்ந்திருக்கவும் கூடும். பலருக்கு பொதுவான சில காரணங்களைக் கூறுகிறோம். ஆனால் எல்லோருக்கும் எல்லாக் காரணங்களும் பொருந்தாது. ஒருவருக்கு ஆஸ்த்மாவைத் தூண்டும் பொருள் மற்றவருக்கு எவ்வித தொல்லையையும் கொடுக்காது. எனவே மற்றவர்கள் சொல்வதைப் பொருட்படுத்தாது, உங்களுக்கு ஒவ்வாதது என நீங்கள் அனுபவம் மூலம் நிச்சயமாக உணர்ந்தவற்றை மாத்திரம் விலக்குங்கள்.

✶ தூசி, புகை ஆகியவை பலருக்கும் ஆஸ்த்மாவைத் தூண்டி விடலாம். அல்லது ஏற்கனவே இருப்பதை மோசமாக்கலாம். புகை பிடித்தல் நன்கு தெரிந்த காரணம். எனவே பீடி, சிகரட், சுருட்டு போன்றவற்றைப் புகைப்பதை உடனே நிறுத்துங்கள். புகை பிடிப்பவர்களுக்கு அருகே இருப்பதையும் தவிருங்கள். தூசியும் முக்கியமானது. தச்சுவேலை, மேசன்வேலை, பேக்கரிவேலை, பெயின்டிங்வேலை, ஆடு, மாடு கோழிப் பண்ணைகள், தோட்டத்தொழில், சிமெந்து இரசாயன, தேயிலை ஆலைகளில் வேலை போன்றவை தூசியுடன் நெருங்கிய சம்பந்தமுடையன. உங்கள் தொய்விற்கு இத்தகைய தொழில் காரணமாயிருக்கும் என்றால், வேறு தொழிலுக்கு மாற முயற்சி செய்யுங்கள்.

✶ மழை பெய்வதற்கு முன் ஏற்படும் புழுக்கம், கடும் பனிக்குளிர் போன்ற சீதோஷ்ண நிலையின் திடீர் மாற்றங்கள் போன்றவை பலருக்கு ஆஸ்த்மாவைத் தூண்டி விடலாம். கடும்பனி நேரத்தில் அறையை விட்டு வெளியே செல்லாமல் இருப்பது நன்மைபயக்கலாம். குளிர் நீரில்நீராடல், குளிரூட்டப்பட்ட அறைக்குள் திடீரென நுழைதல் போன்றவையும் ஆஸ்த்மாவிற்கு காரணமாகலாம். இத்தகையவர்கள் மதிய நேரத்தில், வெந்நீரில் குளிப்பது உசிதமானது. ஆனால் சில ஆஸ்த்மா நோயாளர்கள் கடும்பனி நேரத்தில் குளிர்ந்த நீரில் முழுகினால் கூட எதுவும் நடக்காதிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

✶ சிலருக்கு தடிமன், இன்புளுவென்சா (Influenza) போன்ற கிருமித் தொற்று நோய்கள் ஏற்படும்போது ஆஸ்த்மாவும் தோன்றுகின்றது. இவை பெரும்பாலும் வைரஸ் கிருமிகளால் உண்டாவதால் நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் தேவைப்படாது. எனவே அம்பிசிலின் (Ampicillin), எரிதிரோமைசின் (Erythromycin), டெட்ராசைகிளின் (Tetracycline) போன்ற மருந்துகளை ஆஸ்த்மா நோய்க்காக உபயோகிப்பது அவசியமற்றது. வைத்திய ஆலோசனையின்றி இவற்றை உட்கொள்ளாதீர்கள்.

✶ வீட்டுத் தூசியும் தொய்வைத் தூண்டிவிடலாம். வீட்டுத் தூசியில் ஒரு சிறு கிருமி (Dust Mite) இருக்கிறது. இது மனித உடலிலிருந்து உதிரும் சருமத் துகள்களை உண்டு வாழ்வதால் கட்டில், மெத்தை, தலையணை, படுக்கை விரிப்பு, தளபாடங்கள், தும்பு துணிகளாலான பொம்மைகள் போன்றவற்றில் அதிகம் காணப்படும். இதனால் உண்டாகும் ஆஸ்த்மா அதிகமாகக் குழந்தைகளையே தாக்குகிறது. எனவே வீட்டையும் முக்கியமாகப் படுக்கை அறையையும் அடிக்கடி கூட்டி, தூசி நீக்கி ஈரத்துணிகளால் துடைத்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஆனால் இவற்றை நோயாளி செய்யக்கூடாது. அடிக்கடி படுக்கை விரிப்புக்களை மாற்றுவதும், மெத்தை தலையணை போன்றவற்றிற்கு பொலித்தீன் உறைகளைப் போடுவதும், பஞ்சு மெத்தைக்கு பதில் இறப்பர் மெத்தை பாவிப்பதும் உகந்ததாகும்.

★ வைத்தியரிடம் என்ன காரணத்திற்காகச் சென்றாலும், நீங்கள் ஒரு ஆஸ்த்மா நோயாளி என்பதைக் கட்டாயம் கூறுங்கள். ஏனெனில் ஆஸ்பிரின், பென்சிலின் போன்ற மருந்துகள் ஆஸ்த்மாவை தூண்டக் கூடும். இன்டிரால் Indiral (Propranalal) இன்டோசிட் (Indocid) போன்றவை நோயைத் தீவிரமாக்கலாம்.

★ பூனை, நாய், பறவை ஆகியவற்றின் சிறகு, மயிர் ஆகியவற்றிற்கும் ஆஸ்த்மாவுக்கும் உள்ள தொடர்பை முன்பே அறிவீர்கள். எனவே தொய்வு உள்ள குழந்தைகளை இத்தகைய மிருகங்களுடன் நெருங்கிப் பழக அனுமதிக்க வேண்டாம். இவற்றைப் படுக்கை அறையுள் நுழைய ஒருபோதும் விடாதீர்கள்.

✶ கடும்வேலை, உடற்பயிற்சி போன்றவை சில குழந்தைகளுக்குஆஸ்த்மாவைத்தூண்டிவிடுகிறது ஆனால் இதற்காக அவர்களை உடற்பயிற்சியிலிருந்து தடுக்க வேண்டாம். வைத்திய ஆலோசனையுடன் உடற்பயிற்சிக்கு முன்னரோ, உடற்பயிற்சின் போதோ சில மருந்துகளை உபயோகிப்பதன் மூலம் ஆஸ்த்மாவைத் தடுக்கலாம். நீந்தல் பயிற்சி ஆஸ்த்மாவை உண்டாக்காது என்பதால், நீந்தல் பயிற்சியை ஊக்குவிக்கலாம்.

✶ பாடசாலை, அலுவலகம், விடு ஆகியவற்றில் ஏற்படும் கவலை, விரக்தி, சஞ்சலம் போன்றவையும் காரணமாகலாம். எனவே கூடியவரை மன அமைதியைப் பேணுங்கள்.




# மேதைகள் கொடுத்த விளக்கம்

## கற்பனை

கற்பனை என்ற அற்புதமான சக்தி மனிதனிடத்திலே இல்லை என்றால் கலை என்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கவே முடியாது.

— மாக்சிம் காக்கி

## கவிதை

கவிதை என்பது யாப்புக் கூண்டில் அடைபட்ட அடிமைக் கிளியன்று. அஃது எல்லையற்று அருள்வானில் பறக்கும் சுதந்திரப் பருந்தாகும். அழகே அதன் உருவம்; அருளே அதன் உள்ளம்; ஐக்கியமே அதன் வாக்கு; சமரசமமே அதன் நோக்கு; உண்மையும் உரிமையுமே அதன் சிறகுகள்.

— சுத்தானந்த பாரதியார்

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது இன்பமானதுமல்ல; துன்பமானதுமல்ல; தைரியத்தோடும் தியாக உணர்வோடும் ஈடுபட வேண்டிய ஒரு கடிமான தொழில்.

— டி. டாக்குவெல்லி

# அறிவுத் திறமை

தமக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லைஎன்கிறசெருக்கோடும் கூடிய ஒரு பெரியவர் சம்பந்த முதலியார் வீட்டுக்கு வந்திருந்தார்; அப்போது அவ்விடத்திலிருந்தவர்கள் ஞானம் பாலைக் காட்டி "இந்தக் குழந்தை இவ்வளவு இளமையிலேயே நுட்ப அறிவுடைய தாயிருக்கிறது என்றார்கள்.

அதைக் கேட்ட அந்தப் பெரியவர் "சிறுவயதிலே அறிவாளியாயிருக்கிற பிள்ளை, பிற்பாடு மட்டியாய்ப் போவது இயற்கை" என்றார்.

உடனே ஞானம்பாள் அவரைப் பார்த்து "அப்படியானால் தாங்கள் இளமையில் மிக்க அறிவாளியாக இருந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என்றாள். உடனே அவர் நாணம் அடைந்து அவருடைய செருக்கை விட்டு விட்டார்.

(பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து)

# ஹிரோஷிமா கல்வெட்டு

அமெரிக்க அணுகுண்டினால் அழிவுக்குள்ளாகிய ஹிரோஷிமாவிலுள்ள இடிபாடுகள் "அணுகுண்டு இல்லம்" என்னும் பெயரில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அங்கு நாட்டப்பட்டுள்ள கல்வெட்டில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன.

**அணுகுண்டு இல்லம்**

1945 ஆகஸ்ட் மாதம் ஆறும் திகதி வரலாற்றில் முதன்முதலாக அணுகுண்டு போடப்பட்ட போது கீழேயிருந்த கட்டிடங்களின் இடிபாடுகள். இக்குண்டு இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மனித உயிர்களைப் பலியெடுத்தது. இரண்டு கிலோ மீட்டர் சுற்றுவட்டத்திலிருந்த நகரத்தைச் சாம்பல் மேடாக்கியது. அந்தத் துயர் தோய்ந்த சம்பவங்களின் உண்மையினை எதிர்காலச் சந்ததியினருக்குக் கூறுவதற்காக இந்த இடிபாடுகள் பேணப்பட்டு வருகின்றன.

கதிர் மாணிக்கம்

# வாரியார் நகைச்சுவை

வாரியாரின் பிரசங்கங்கள் மக்களைக் கவர்வதற்குக் காரணம் பொருள் ஆழமும் அவர் கதை சொல்லும் விதமும் இயல்பாக அமைந்த நகைச்சுவையும் ஆகும்.

ஒரு முறை பிரசங்கத்தின் போது பாணன் ஒருவனின் பாடல் பற்றிய நகைச்சுவையை அவர் கூறினார்.

நந்தி என்கின்ற அரசனின் பாணன் ஒருவன் நந்திக்கு விருப்பமான பெண் ஒருத்தியின் வீட்டில் இருந்து இரவிரவாகப் பாடினான். மறுநாள் நந்தியைக் காண்பதற்காகப் பாணன் சென்றபோது அவனை அரசி கண்டாள். நந்தி வேறு பெண்களிடம் செல்வதற்குப் பாணனும் உடந்தை என்பதை அரசி அறிவாள். எனவே அவளின் கோபம் பாணனிடம் திரும்பியது.

"பாணனே நீ நேற்று இரவு விடியவிடிய ஒருத்தி மனையில் இருந்து பாடினாய். உன்னுடைய பாடலைக் கேட்ட எனது தாய், பேய் காட்டில் அழுகிறதுஎன்றாள். மற்றவர்கள் இது பேய் அன்று நரி ஊளையிடுகிறதுஎன்றார்கள் தோழி சொன்னாள் இது பேயும் அன்று; நரியும் அன்று; நாய்தான் ஊளையிடுகிறது என்று. எனக்கு உன் இசையை நன்றாகத் தெரியும் அல்லவா? அதனால் தான் சொன்னேன் இது பேயும் அன்று நரியும் அன்று நாயும் அன்று. எங்கள் அரசனின் பாணன்தான் பாடுகிறான் என்று பாணன் மீது உள்ள வெறுப்பைஅரசிநகைச்சுவையாகப் புலப்படுத்தியபாடல் இது.

"ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிருந்துபாட விடியளவும்–காட்டிலழும்
பேயென்றாள் அன்னைபிறர்
நரி என்றார் தோழி
நாயென்றாள் நீயென்றேன்
நான்"

# புராதன மருத்துவ நூல்கள்

**ஆயுர் வேதம்:**
அதர்வ வேதத்திலிருந்து தோன்றியது

**ஆயுள் கிரந்தம்:**
திரேதாயுகத்தில் சிவபெருமான் இயற்றியது.

**அக்கினி புராணம்**

**அதர்வசமிடாரிதை:**
ஆத்திரேயர் இயற்றி அக்கிநிவேசர் அபிவிருத்தி செய்தது.

**அக்நிவேச சம்ஹிதை:**
அக்நிவேசர் தொகுத்தது.

**வேல சம்ஹிதை:**
வேல முனிவர் இயற்றியது.

**அரித சம்ஹிதை:**
ஹாரிதா வினாவிடை நூல்

**விருட்ச ஆயுர்வேதம்:**
பராசரர் இயற்றியது.

**சரக சம்ஹிதை:**
நோய்களைப் போக்கும் முறைகள்.

**அச்ருத சம்ஹிதை:**
ரண சிகிச்சை முறை அடங்கியது.

**காச்யப சம்ஹிதை:**
ஜீவகர் தொகுப்பு (கி. மு.500)

# தெரிந்து கொள்ளுங்கள்

● நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகமாயிருப்பதுபோல் ஒட்டகங்களுக்கு பார்வை சக்தி மிக அதிகம். ஒருமைலுக்கு அப்பால் நீர் இருப்பதை ஒட்டகம் எளிதாக கண்டு பிடித்துவிடும்.

● உலகின் முதல் வங்கி 'பாங்கோ டிரிவால்டோ' ஆகும் இது 1857 ஆம் ஆண்டு வெனிஸ் நகரில் தொடங்கப்பட்டது.

● ஸ்கொட்லாந்து நாடு துப்பறிவதில் பெயர்போனது. இதன் தேசிய சின்னம் பிரபோசனமற்ற பொருள்தான் ஆம் அதன் தேசிய சின்னம் 'நெரிஞ்சி முள்' ஆகும்.

● உலகின் மிகப்பெரிய நூலகம் மொஸ்கோ நகரின் லெனின் நூலகம் ஆகும். இதற்கு 125 வயதாகிறது. புத்தக அலுமாரிகளை நேராக அடுக்கினால் அதன் நீளம் 600 கிலோமீற்றர் வரும். இங்கு தினமும் 14,000 பேர் படிக்க வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

● வீரபாண்டிய கட்டப்பொம்மன் தம்பி பெயர் ஊமைத்துரை என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். உண்மைப் பெயர் அதுவல்ல. 'சிவத்தையா குமாரசாமி'

● 'ரிப்வன் விங்கிள்' என்ற கதையே உலகின் முதல் சிறுகதையாக கருதப்படுகிறது. இக்கதை 1819இல் வெளிவந்த 'ஸ்கெச்பிக்' என்ற சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றது.

# வாய்விட்டுச் சிரியுங்கோ

# நோய் பறந்தோடி விடும்

கதை, கட்டுரை, கவிதைகள் போலவே துணுக்குகளும் இலக்கியந்தான்! அரும் பெரும் கருத்துக்களையெல்லாம் மிகச் சில வரிகளில் சுவையாகவும் செறிவாகவும், அழகாகவும், ஆணித்தரமாகவும் சொல்லி விடும் ஆற்றல் துணுக்குகளுக்கு உண்டு.

ஒரு நாட்டின், ஓர் இனத்தின், ஒரு சமுதாயத்தின் பண்பாட்டைக் கூடத் துணுக்குகள் அழகாக ஆழமாக படம் பிடித்துக் காட்டி விடுகின்றன.

ஆனந்தவிகடன் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் விகடன் அட்டைப் படத்தில் போட்ட ஒரு துணுக்கால் தான் பொலிஸார் அவரைக் கைது செய்தனர். இதை அறிந்த சக சஞ்சிகைகள் அவரைக் கைது செய்ததை ஏளனம் செய்து போட்ட துணுக்குகளால்தான் அவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் அட்டைப்படத்தில் போட்ட துணுக்கு இதுதான். மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெறுவதற்காக இரு அரசியல்வாதிகள் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள். பார்வையாளரில் ஒருவர் இன்னொருவரைக் கேட்கிறார்—

இதில் யார் மந்திரி? யார் எம். எல்.ஏ? இதற்கு மற்றவர் சொன்ன பதில்—

கொள்ளைக்காரன் மாதிரி இருக்கிறாரே அவர்தான் மந்திரி, ஜேப்படிக்காரன் மாதிரி இருக்கிறாரே அவர் தான் எம்.எல்.ஏ.

ஒரு சின்னத் துணுக்கு எவ்வளவு பெரிய விஷயத்தைக் கக்கிவிடுகிறது.

நகைச்சுவை உணர்வு மாத்திரம் எனக்கு இல்லாவிட்டால் நான் எப்போதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன் என்றார் மகாத்மா காந்தி.

ஒரு நல்ல சிறுகதைக்கான கருவைக் கூட நான்கே வரியில் துணுக்கின் மூலம் வாசகர்கள் இதயத்தில் பதித்து விடலாம். ஒரு நகைச்சுவைக் கட்டுரைக்கான விடயதானத்தை ஒரு சிறு துணுக்கின் மூலம் வெளிப்படுத்தி விடலாம்.

விரைவான காலஓட்டத்தில் இன்றைய மனிதர்களுக்குப் படைப்பிலக்கியங்களை ஆழ்ந்து படிக்கின்ற பொறுமையும் நேரமும் இல்லை. இதழ்களில் வெளிவருகின்ற துணுக்குகளை மட்டும் படித்து மிகப்பலர் தம் அறிவுப் பசியைத் தணித்துக் கொள்கின்றனர். எனவேதான் எல்லா இதழ்களுமே துணுக்குகளுக்கு முதலிடம் தந்து வெளியிடுகின்றன. எல்லோராலும் இன்று விரும்பிப் படிக்கப்படுபவை துணுக்குகள் தாம் அவற்றுள்ளும் நகைச்சுவைத் துணுக்குகளே முதலிடம் பெறுகின்றன.

இங்கே படித்துக் கேட்டு சுவைத்த சில நல்ல துணுக்குகளை தொகுத்திருக்கிறேன். படியுங்கள் சிந்தியுங்கள் சிரியுங்கள்.

★

தனக்கு முன் எதிர்ப்பட்ட நீண்டகால நண்பனைப் பார்த்துக் கேட்டான் இன்னொரு நண்பன்.

"என்னடாப்பா, நீ ஒரு பெண்ணை காதலித்தாயே அது என்னவாப் போச்சு?"

"ஓ கல்யாணம் ஆச்சே!"

உண்மையாகவா! எனக்கு ஏன் அழைப்பு அனுப்பவில்லை?"

'அவள் எனக்கே அழைப்பு அனுப்பவில்லையே?"

★

திருவிழாக் கூட்டத்தில் கையில் உண்டியலுடன் நின்றவரைப்பார்த்து இன்னொருவர் கேட்டார்.

"என்ன"... இது! கையிலே உண்டியல் அகதிகளுக்கு நிதி சேர்க்கிறீர்களா?"

"அப்படி ஒன்றும் இல்லை. ஜனநெருசலான இடத்திலே கையில உண்டியலுடன் நின்றால் எல்லோரும் விலகி நடக்கிறார்கள். கூட்டத்திலே இடிபடாமல் சுலபமாக போக முடிகிறது. அவ்வளவு தான்"

★

குற்றவாளிக் கூண்டில் நின்ற கொலையாளியைப் பார்த்து நீதிபதி கேட்டார்:—

"உன் மனைவியையும் கள்ளக் காதலனையும் படுக்கையில் பார்த்த நீ, காதலனைக் கொல்லாமல் மனைவியை மாத்திரம் கொன்றாயே! ஏன்?"

"நீதிபதி அவர்களே! வாரத்தில் ஒரு கள்ளக் காதலனைக் கொல்வதைவிட, மனைவியை கொல்வது நல்லதல்லவா?"

★

விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்க்கிடையில் தகராறு மூண்டது:

## நகைச்சுவை துணுக்குகளும் இலக்கியங்களே

"போடா, நீ முட்டாள்!

"போடா, நீ தான் முட்டாள்!

"என்ன அங்கே சத்தம் நான் ஒருவன் இங்கே இருப்பது தெரியவில்லையா?" என்றார் அவ்வீட்டின் உரிமைக்காரர்.

★

"பணம், அறிவு இந்த இரண்டில் எது வேண்டும் என்று கேட்டால்...என்ன கேட்பாய்?"—என்றார் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர்.

### குமார் தனபால்

"பணம் தான் வேண்டும் என்பேன்' — என்றான் மாணவன்.

"பணமா? என்னைக் கேட்டால் அறிவுதான் வேண்டும் என்பேன்"—என்றார் ஆசிரியர்.

"சேர்! அவரவர் தங்களிடம் இல்லாததைத் தானே கேட்பார்கள் என்றான் மாணவன்"

★

நீரில் மூழ்கி விட்ட ஒருவனைக் காப்பாற்றி கரையில் கொண்டு வந்து போட்டார்கள்.

"அடடா என்றான் நீரில் மூழ்கியவன், எழுந்து இருந்தபடி".

"என்ன?" என சுற்றி நின்றவர்கள் கேட்டார்கள்.

'உங்களையெல்லாம் வீணாக சிரமப்படுத்தி விட்டேன்... எனக்கு நீந்தத் தெரியும் என்பது இப்போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது" என்றான்.

★

குடிப்பதால் ஈரல் கெட்டுப் போய் விடும் என்று புத்தகத்தில் படித்தேன்" என்றார் ஒரு குடிப்பழக்கம் உள்ளவர்.

"இப்போது குடிப்பதை நிறுத்தி விட்டீர்களா?"—என்று கேட்டார் மற்றவர்.

"இல்லை, புத்தகம் படிப்பதை நிறுத்தி விட்டேன்" என்றான்.

★

"நேற்று நடந்த ஓவியக் கண்காட்சியில் உங்கள் ஓவியம்தான் பார்க்கக் கூடிய மாதிரி இருந்தது என்றார் ஒருவர்.

அப்படியா! மிகவும் மகிழ்ச்சி"—என்றார் ஓவியர்.

"ஆமாம், மற்றவர்களுடைய ஓவியங்களைச் சுற்றி கூட்டம் அதிகமாக இருந்தது என்றார் அவர்.

"உங்கள் சிறுகதையைப் பாராட்டி பத்துக் கடிதங்கள் வந்திருக்கின்றன" என்றார் வார இதழ் ஆசிரியர்.

"பத்தா ! இன்னும் ஐந்து வந்திருக்க வேண்டுமே ..!" என்றார் எழுத்தாளர்.

★

"மிகவும் அழகாக இருக்கிறதே இந்தக் களிமண் பொம்மை" எப்படிச்செய்தீர்கள்.

"எல்லாம் என் மூளையை உபயோகித்துத்தான்.

★

"அமெரிக்காவை பார்க்க எத்தனை பேருக்கு ஆசை?" என்று ரீச்சர்கேட்டா, என்னைத்தவிர எல்லோரும்கையை தூக்கினார்கள் அம்மா.

"நீ ஏன் தூக்கவில்லை?"—என்று கேட்டாள் தாய்.

"எங்கேயும் போகாமல் பள்ளிக்கூடம் முடிந்ததும் நேராக வீட்டுக்குவரவேண்டும் என்று நீங்கள்தானே சொன்னீர்கள்."

★

"நேற்றுத்தானே பார்த்தேன் உங்களுக்கு நாடகக்கலையில் உள்ள ஆர்வத்தை. ஆறுவது கல்லும் உங்கள் மேல் விழுந்தபின்தானே உள்ளே போனீர்கள்.

★

ஒருவர்:- குழந்தை பிறக்காமல் இருக்க என்ன செய்ய மேண்டும்?"

மற்றவர்:- ஒன்றும் செய்யாமல் இருந்தாலே போதும்.

★

அதிவேகமாக பஸ்ஸை ஓட்டிக்கொண்டிருந்த அந்தச் சாரதி திடீரெனச் சிரித்தார்.

"ஏன்சிரிக்கிறீர்கள்?" என்றார்அருகில் இருந்த பிரயாணி

"வள்ளுவர் சொல்லி இருக்கிறாரே இடுக்கண் வருங்கால் நகுக என்று"

"சரி, அப்படி என்ன இடுக்கண் வந்துவிட்டது உங்களுக்கு?"

வேறு ஒன்றும் இல்லை வெகு நேரமாக முயற்சிக்கிறேன். பிறேக்கே பிடிக்க மறுக்கிறது."

★

"ஐம்பது பவுண் நகையும் ஒருலட்சம் சீதனமும் தருவதாகச் சொல்கிறீர்களே...... பெண்ணுக்கு, பல்லுக்கில்லு நீளமோ...?"

"சேச்சே! பெண்ணுக்குப் பல்லேலே கிடையாதே!

★

"உங்கள் நிகழ்ச்சி நிரல் அட்டையில் ஒரு சின்ன அச்சுப்பிழை நேர்ந்துவிட்டது" என்றார் அச்சகஉரிமையாளர்.

"பரவாயில்லை, என்ன பிழை சொல்லுங்கள்"—என்றார் பகவதர்.

"வேறை ஒன்றும் இல்லை உங்கள் பெயருக்கு முன்னால் பிரபல வித்துவான் என்பதற்குப் பதிலாக பிரபல கத்துவான்என்று அச்சாகிவிட்டது. அவ்வளவுதான்."

★

ஏன், என்னவோபோல் இருக்கிறாய்?"

"நான் விரைவில் தந்தையாகப் போகிறேன்."

... 14 ஆம் பக்கம் பார்க்க

## தொடர் காவியம்

# காவேரி

### காரை. செ. சுந்தரம்பிள்ளை

## பாயிரம்

செந்தூர்ப் பதியினிலே செக்கர் வெளிப்பதன்முன்
ஐந்தாறு சேவல்கள்தம் அழகுச் சிறகடித்துக்
கொக்கரக்கோ வென்றுசொல்லிக் கொட்டுமர-சறையப்
பக்கமுள்ள கோழியெலாம் பக்குவமாய்த் தூயதிருப்
பள்ளி யிசைத்திடலும் பாங்கான பட்சியெலாம்
துள்ளியெழுந் தினிய தோத்திரங்கள் செய்துநிற்க
வாச மலர்தேடும் வண்டுகள்ரீங் காரமிட
பேசும் கிளிமழலை பேசநல்ல நாகணவாய்
அக்கக்கா வென்றே அழகுதமிழ் தான்மொழிய
சிள்வண்டு பாட்டிசைக்கத் தேன்வண்டு சுருதிவிட்டுக்
கள்ளுண்ட மயக்கத்தால் கண்டபடி தான்பாடக்
கோலக் குயில் எங்கோ குற்றம் பொறுக்காமல்
ஞாலம் மகிழ்திடவே நல்லஇசை பொழிய

மென்காற்று வீசிவந்து மெல்லத் தழுவுகையில்
தன்கீற்றின் ஓசைக்குத் தென்னை தலையசைக்கத்
காலைக் கதிர்செல்வன் கண்விழித்துப் பார்க்கின்ற
வேளை;

அடிவானம் வெற்றிலையை மென்ற அந்தக்
கோலவிதழ் போலக் குங்குமமாய்த் தான்சிவக்கத்
தூரத்தே மேகமெலாம் துணிகளெனத் தானசையும்
ஓரத்தே வெள்ளியிழை யிட்ட சரிகைகளாய்
வெள்ளிச் சரிகையொடு வைத்திழைத்த தங்கமென
அள்ளிச் சொரிகின்ற அழகுமிகு கீழ்வானம்
கண்ணைப் பறித்தழகு காட்டி முறுவலிக்க

நீலக் கடற்குமரி நெஞ்சமெலாம் முத்துமணி
போலக் கதிரொளியால் புத்தழகு கூட்டிநிற்க
அலைகள் எழுந்தார்த்தே ஆதவனைத் தான்தொழுது
பூபாளம் பாடிநிற்கப் பூதேவி துயில் எழுந்தாள்.

நல்லை மணியோசை நாதம் செவிப் புகுந்தே
இல்லை இனித்துயரம் என்பதுபோல் பேசியது

காளைகளை முன்நடத்திக் காளையர்கள் பின்நடக்கப்
பாளைச் சிரிப்போடு பாவையரு மே-தொடர
வரப்புத் தவளையெலாம் வழிவிட்டுத் தான்குதிக்க
அரக்கும் சிறுநத்தை அச்சமுட னுங்கசைய
வரப்போரம் பாழிவைத்து வாழுகிற நண்டுகளும்
பதுங்கு குழி தேடும் பாவி மனிதரைப் போல்
ஒதுங்கி மறைந்தபடி உளம்நடுங்கப் பார்த்துநிற்கும்
இத்தகைய ஊரினிலே இரவோ டிரவாக
நித்திரையே யில்லாது நெஞ்சம் கனக்கமனக்
கவலை மிகக்கொண்டே காவேரி தானிருந்தாள்
அவளின் கதை தமிழர் அவலக் கதையம்மா.

(தொடரும்)

## முது மக்கள் தாழி

'முது மக்கள் தாழி' என்னும் போது எமது வயோதிபர்கள் அஞ்சத்தேவையில்லை. அக்காலத்தில் இந்த முது மக்கள் தாழிகள் வயோதிபர்களின் அந்திம காலத்துக்குத் தயாராக இருக்கும். அவர்களும் இதற்குத் தயாராகவே இருப்பர். இந்த விநோதமான பழக்கம் அக்கால முது மக்களுக்கு அவர்களின் இறுதிக் காலத்துப் பயங்கர அனுபவங்கள்.

ஆற்றுப் படுக்கைகளிலே 'முது மக்கள் தாழி' என்று சொல்லப்படும் பெரிய பானைகள் புதையுண்டிருப்பது கண்டு பிடிக்கப்படுவதுண்டு அண்மையில் கூட நாகர் கோவிலில் ஒரு முது மக்கள் தாழி கண்டு பிடிக்கப்பட்டதாகச் செய்தியில் வாசித்தது ஞாபகத்துக்கு வருகிறது.

இந்த முது மக்கள் தாழி என்பது என்ன? இது ஏன் பூமிக்கு ஆழத்தில் புதையுண்டு கிடக்கிறது?

முது மக்கள் தாழி என்றால் வயது வந்தோர் பானை எனப் பொருள் படும். அந்தக்காலத்தில் அனேகம் பேர் நூறு வயதுக்கும் கூடுதலாக வாழ்பவர்கள் அவர்கள் உடல் தளர்ந்து கூனிக் குறுகி நடக்க முடியாத நிலையில் வீட்டில் முடங்கிக் கிடப்பார்கள். இவர்களால் யாருக்கும் நன்மை கிடையாது. தொண தொணப்பும், தொல்லைகளும் அதிகமாக ஏற்படும்.

இனிமேல் அப்படிப்பட்ட நிலையில் ஒருவரை வீட்டில் வைத்திருக்க முடியாது என்று கண்ட சுற்றத்தார் அவரைக் குறித்து ஒரு விழா ஏற்பாடு செய்வர். அதில் அவரது உறவினர்கள், அயலவர்கள் எல்லோரும் கலந்துகொண்டு அவரது குணநலன்களைக் கொண்டாடி மகிழ்வர்.இதுகூட அந்த வயது வந்தவருக்குக் கேட்காமல் இருக்கும். சிலருக்குப் பார்வை தெரியும் சிலருக்கு அதுவும் தெரியாது.

விழாவின் முடிவுதான் பயங்கரமானது. பெரிய அகலமான வாயை உடைய பானையின் உள்ளே அந்த வயோதிபரை இருத்துவர் அதற்குள்ளே ஒரு குத்துவிளக்கையும் ஏற்றி வைத்துப் பானையின் வாயை மூடி அதை ஆற்றுப் படுக்கையில் வெட்டப்பட்ட ஆழக் குழிகளில் வைத்து மூடி விடுவார்கள்.

பானையுள் இருக்கும் வயோதிபர் பிராணவாயுவைச் சுவாசித்து அதிக நாள் அவஸ்தைப்படாமல் இருக்கவே குத்துவிளக்கு ஏற்றி வைக்கப் படுகிறது. பிராணவாயுவை எடுத்துக்கொண்டு கரியமில வாயுவை உண்டுபண்ணி விட்டுக் குத்துவிளக்கு அணைந்து போகப் பிராணவாயு இல்லா

... 14 ஆம் பக்கம் பார்க்க

17



# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

க.சி.குலரத்தினம்

இலங்கையில் இடதுசாரி இயக்கத்திற்கு வித்திட்டவர்களுள் ஒருவரும், அவ்வியக்கதின் வியக்கத்தக்க தோழரும், வெள்ளைக்கார ஆட்சியின் விரோதியுமான தோழர் பிலிப் குணவர்த்தனு லண்டனில் இருந்தவாறே யாழ்ப்பாணத்து வாலிபர் மாநாட்டின் போக்கை வெகுவாக வியந்து பாராட்டி எழுதினுர். அவரின் மனைவி குசுமா, தம்பி ரெபேட், சகோதரி விவியன், மைத்துனன் லெஸ்லி, முதலானோர் யாவரும் தீவிர இடதுசாரிகளானவர்கள். தென்னிலங்கையில் சூரியமல் இயக்கம் இடதுசாரி இயக்கமாக வளர்வதன் முன்னரே யாழ்ப்பாணத்து இளைஞர்கள் தீவிரமான தேசிய இயக்கத்தை ஆரம்பித்தவர்கள்.

தோழர் பிலிப் பத்திரிகைகளில் யாழ்ப்பாணத்து இளைஞர்களைப்பாராட்டி, ஊக்கப்படுத்தி எழுதிய வகையில் இவர்கள் இந்தியா, இந்துசீனு, இந்தோனேசியா, சீனு, கொரியா முதலான நாடுகளுக்கெல்லாம் சுதந்திரப் பாதையில் வழிகாட்ட வல்லவர்கள் என்றெல்லாம் எழுதினுர். இந்நாடுகள் யாவும் சுதந்திரப்பாதையில் பீடுநடைநடக்கும் நாளினையே தாம் எதிர்பார்த்திருப்பதாகத் தம் அபிலாசையையும் வெளியிட்டார்.

இலங்கையில் யாழ்ப்பாணத்து இளைஞர்களே அறிவாற்றல் மிக்கவர்கள் என்பததைத் தாம் அறிந்து இன்புற்றதாகவும், அவர்களே இலங்கையின் சுதந்திரப் பாதைக்கு வழிகாட்டும் முன்னோடிகள் என்றும், சிங்கள இளைஞர்கள் இவர்களைப் பின்தொடர வேண்டும் என்றும் எடுத்துக் கூறினுர்.

இதற்குள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொழும்பில் தங்கியிருந்த போது யாழ்ப்பாணத்து இளைஞர்கள் தங்கள் கொழும்புக் கிளை சார்பாக வெள்ளவத்தை பிளாசா மண்டபத்தில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்து ஒன்றியொதுக்கல் தீர்மானத்தை நிறைவேற்றினுர்கள். நேரு அவர்களிடம் வேகத்தைத்தணிக்குமாறும் நிதானமாக நடக்குமாறும் ஆலோசனை கூறிப்போனுர்.

இவ்வாருக ஏரிக்கரைப் பத்திரிகைகளுள் ஒன்ருய டெயிலி நியூஸ் ஏடு இளைஞர்களை வெகுவாக உற்சாகப்படுத்திப் பாராட்டி, இலங்கை முழுவதும் ஒன்றியொதுக்கல் நிலவுதல் நன்றென எழுதுவதாயிற்று. இலங்கை தாராண்மைக்கழகம் இளைஞரின் திரத்தைப் பாராட்டியது. சிங்களவருள் மிகப் பெரியவரான ஈ. டபிள்யூ. பெரோ அவர்களும், பிரான்சிஸ் டீ சொயிசா அவர்களும்; முஸ்லிம் பெரியவரான ரி. பி. ஜயா அவர்களும் இளைஞர்களைப் பாராட்டினுர்கள்.

வைத்திலிங்கம் துரைசுவாமி முதலானேரின் அழைப்பிற்கிணங்கி யாழ்ப்பாணம் வந்த நேரு அவர்கள் பிடிகொடாமல் பேசினுர். ஒன்றியொதுக்கல் நிதானமாயிருத்தல் வேண்டும் என்று சூசகமாக, ஒருவிதமாக, மாருகவே பேசினுர் என்பர். இதற்குள் ஒன்றியொதுக்கலுக்கு மாருக எழுதினேர், பேசினேரும் இருந்தார்கள். வட்டுக்கோட்டைப் பெரியவர் ஜே. வி. செல்லையா அவர்கள் உதயதாரகை என்னும் பத்திரிகையைப் பயன்படுத்தி ஒன்றியொதுக்கலைக் கண்டித்ததும் உண்டு. நேருவின் பேச்சு வெப்பத்தைத் தணித்த மழை என்று சூசகமாகக் குறிப்பிட்டதும் உண்டு.

சுதந்திர அச்சுலகு என்னும் பத்திரிகையில் தன் கைவண்ணம் காட்டிய அப்புக்காத்தர் குலசிங்கம் அவர்களும் ஒன்றியொதுக்கலைக் கண்டித்தார். இலங்கைத் தேசாபிமானி என்ெருரு பத்திரிகை ஒன்றியொதுக்கலை ஆதரித்து எழுதி வந்தது.

இவ்வாருக 1931 ஆம் ஆண்டின் முதல் அரசாங்க சபைக்கான தேர்தல் யாழ்ப்பாணத்து நான்கு தொகுதிகளுந் தவிர்ந்த ஏனைய தொகுதிகளில் நடைபெற்றது. எவ்வித கட்டுப்பாடும் இன்றி, நிபந்தனையும் இன்றி, ஆண், பெண் ஆகிய இருபாலாருள்ளும் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டவர்கள் இலகுவான முறையில் புள்ளடி முதலியன இட்டு வருந்தாமல் வெள்ளைக் காகித மட்டைத் துண்டு ஒன்றைப் பச்சை, சிகப்பு, மஞ்சள் என விதிக்கப்பெற்ற பெட்டிகளில் இட்டுத் தம் பிரதிநிதிகளைத் தெரிந்து கொண்டார்கள். பிரதிநிதிகள் அரசாங்க சபை அங்கத்தவர் என்னும் தகுதியில் எம். எஸ். சி. என்னும் மூன்றெழுத்துப் பெருமை பின்னின்று ஒளிகாலக் காலிமுகத்திடரில் புதிதாக அமைக்கப் பெற்ற சபாமண்டபத்தை அலங்கரிப்பாராயினர். அங்கே 7. 7. 1931 ஆம் நாள் முதற் கூட்டம் கோலாகலமாக ஆரம்பித்தது. நாலு ஊர் இராசாக்கள் அரசியலில் நனையாமல் யாழ்ப்பாணத்திலேயே யார் எவர் பிரதிநிதிகள் எனத் தெரியப்பெருமலே இருந்தார்கள்.

யாழ்ப்பாணத்து நாவிடங்களிலும் ஒன்றியொதுக்கல் நிலவியபோது கடைசிநேரத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யலாம் எனக் கருதியிருந்தவர்களும் இருந்தார்கள். எங்கள் மதிப்புக்குரிய எம். ஏ. முத்துக்குமாரு, சரா என்னும் சரவணமுத்து, பொன்னம்பலம் முதலானேர் தங்கள் முயற்சி பலிக்காமல் விலகியதும் உண்டு. ஆனல் பொன்னம்பலம் அவர்கள் கடைசிநேரத்தில் மன்னர், முல்லைத்தீவு தொகுதியில் ஆனந்தன் என்பவரோடு போட்டியிட்டுத் தோல்வி கண்டதும் வரலாருகும். தாம் ஆனந்தனின் முயற்சியை முறியடிக்கவே போட்டியிட்டதாகவும், தான் வென்றிருந்தால் உடனடியாக இராஜிநாமா செய்திருப்பார் எனவும் அவர் விளக்கம் கூறியதும் உண்டு. இவ்வாருக வாலிபர் மாநாட்டினர் தங்கள் பிடியிலிருந்து விலகாமல் தொடர்ந்து தீவிரமாகவே 1932, 1933 ஆம் ஆண்டுகளில் இருந்தார்கள். சிறந்த பேச்சாளரும் பட்டதாரியும் சட்டத்தரணியுமான முருகேசு பாலசுந்தரம் அவர்கள் 1933 ஆம் ஆண்டின் மாநாட்டுத் தலைமையுரையில் தங்கள் தீவிரப் போக்கை வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாருக 1934 ஆம் ஆண்டு உதயமான போது நிலைமை மாறுவதாயிற்று. யாழ்ப்பாணம் பல வகைகளிலும் புறக்கணிக்கப்பட்டுப் பின்தங்கி நிலவ வேண்டிய சூழ்நிலை உருவானது. மாட்சிமை தங்கிய தேசாதிபதி அவர்கள் யாழ்ப்பாணத் தொகுதிகளில் உபதேர்தல் நடத்துவதற்குத் தாம் என்றும் தயார் என்று இதமாகப் பேசி வந்தார். நம்மவர்களுள் சிலர் நிலை தளர்ந்தார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் இளைஞர்கள் உள்நாட்டுப் பொருள்களையே உபயோகிக்குமாறு பொதுமக்களை வேண்டி நின்ருர்கள். சிகரெட் பற்றுமல் விடுக்குமாறும், மண்ணெண்ணெய்க்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யை உபயோகிக்குமாறும், வெள்ளைச் சீனிக்குப் பதிலாகப் பனங்கட்டியை உபயோகிக்குமாறும் வேண்டி நின்ருர்கள். முத்துக்குமாரு அவர்கள் சாரயத் தவறணைகளுக்கு முன்ஞக இலவச மோர்க் கடைகள் நடத்துதல் நல்லது என்ருர். இவையாவும் அன்று அரியாலையூர் ஆ. கனகரத்தினம் அவர்களின் தேசாபிமானி என்னும் சஞ்சிகையில் வெளி வந்த செய்திகளாகும்.

ஒரு சமயம் பணம் படைத்த இளைஞர்கள் சிலர் பல கடைகளிலும் சென்று பெரும் தொகையான சிகரெட் விலை கொடுத்து வாங்கி, நடுத்தெருவில் இட்டு நெருப்புக் கொளுத்தி எரித்துவிட்டு, நம் நாட்டுச் சுருட்டைப் புகைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். இளைஞர்களின் கோட்பாட்டை மதித்த பெரியவர்களுள் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், அப்புக்காத்தர் இந்துபோர்ட் இராசரத்தினம், பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோர் மதிப்புப் பெற்றிருந்தார்கள். இராசரத்தினம் அவர்களின் மாமன் மைந்தன் அப்புக்கபத்தர் பாலசிங்கம் அவர்களும் வாலிபர் மாநாட்டின் மகத்துவத்தைப் பேணிவந்தார். வாலிபர் மாநாட்டினரைப்போல தென்னிலங்கையிலும் தீவிர இயக்கம் உண்டாதல் வேண்டும் என்று தீவிரமாகப் பேசி வந்தவர் சாம். சபாபதி என்னும் சட்டத்தரணியாவர், யாழ்ப்பாணம் வாலிப மாநாட்டில் ஓரளவு காந்திய தத்துவமும் கலந்திருந்த போதிலும் அது விறைப் பாகவியாபகம் கொள்ளாமல் தளர்ந்து போனது வருத்தத்துக்குரிய நிகழ்ச்சியாகும்.

இவ்வாருக யாழ்ப்பாணத்தில் அரசாங்க சபைக்குரிய தேர்தல் நடைபெறுவதற்கான முயற்சிகள் எழுந்தன. அவை 1934 ஆம் ஆண்டில் இடைக்காலத்தில் நடைபெற்றனவெனவே இடைத் தேர்தல்கள் எனவே வழங்கின. ஊர்காவற்றுறைத் தொகுதியில் பெரியார் வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களைப் பொதுமக்கள் கேட்டபோது, அவர் அருமையான ஒரு கருத்துரை வழங்கினுர். ஒன்றியொதுக்கல் என்ருல் அந்தச்சபையின் முழுக்காலத்தையும் தவிர்த்தல் வேண்டும் எனவே 1931–1936 வரை தாம் அதை நாட விரும்பவில்லை என்ருர்.

### யாழ்ப்பாணத்தில் தேர்தல்

யாழ்ப்பாணத் தொகுதிகளாய ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், காங்கேயன்துறை, பருத்தித்துறை ஆகிய நான்கு தொகுதிகளிலும் 9. 7. 1934 ஆம் நாளுக்கு முன் பின்னுகத் தேர்தல்கள் நடைபெற்றன.

ஊர்காவற்றுறையில் நெவின்ஸ் செல்லத்துரை, ஜே. சி. அமரசிங்கம், ரி. காராளபிள்ளை ஆகிய மூவரும் போட்டியிட்டார்கள். அவர்கள் முறையே 6521 வாக்குகள், 4346 வாக்குகள், 2227 வாக்குகள் பெற்ருர்கள்.

காங்கேயன்துறைத் தொகுதியில் இராமநாதன் அவர்களின் மருமகன், பரமேஸ்வராக்கல்லூரி அதிபரும், கலாநிலையத்தலைவரும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப்பிரமுகரும் இன்னும் பல பெருமைகள் உள்ளவருமான சுப்பையா நடேசன் அவர்கள் போட்டியிட்டார். அவரை எதித்துப் போட்டியிட்ட பெரியவர் எஸ். சரவணமுத்து என்பார். இவர் புகழ் பெற்ற சரவணமுத்து சகோதரர்களுள் ஒருவர். மிகுந்த செல்வாக்குள்ளவர் இப்போட்டியில் நடேசன் அவர்கள் 8940 வாக்குகளும் சரவணமுத்து அவர்கள் 5260 வாக்குகளும் பெற்றனர்.

பருத்தித்துறையில் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களும், ஆர். ஸ்ரீபத்மநாதன் அவர்களும் போட்டியிட்டனர். பத்மநாதன் அவர்கள் சேர். அருணசலம் அவர்களின் புதல்வியர் ஒருவரை மணந்து தாரமிளந்தவர். இப்போட்டியில் பொன்னம்பலம் அவர்களுக்கு 9319 வாக்குகளும் பத்மநாதன் அவர்களுக்கு 2032 வாக்குகளும் கிடைத்தன.

யாழ்ப்பாணத் தொகுயில் இராசரத்தினம் அவர்களே தெரியப்பெற வேண்டியவர். அவர் 1924 முதல் 1931 வரை இத்தொகுதியில் பிரதிநிதியாயிருந்து அளப்பெரும் சேவை செய்தவர். உள்ளூரவர் பெரியவர், அறிவாளி, தியாகி என்றெல்லாம் அவரைப் பெரியவர்கள் விரும்பினுர்கள். ஆனல் கதி இழக்கினும் கட்டுரை இழக்க மாட்டாத உறுதிபூண்ட அவருக்குச் சந்தர்ப்பம் சூழ்நிலை பாதகமாயிற்று.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த அருணசலம் மகாதேவா அவர்கள் அங்கே 1924 முதல் 1931 வரை சட்டசபையை அலங்கரித்தவர். பின்னர் அரச ஈட்டுவங்கியில் பணிப்பாளர்களுள் ஒருவராயிருந்தவர் அவர் 1931 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தில் பிரதிநிதியாவதற்கு விரும்பியவர். அவர் முன்னர் 1921 ஆம் ஆண்டுமுதல் பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராயும் இருந்தவர் நூற்றுக்கணக்கான பழையமாணுக்கர்களுக்குப் பழக்கமானவர். அன்றைய கிறிஸ்தவர்கள் அவரைப்பெரிதும் விரும்பினர். இராமநாதன் அருணசலம் ஆகியோரின் பழம்பெருமையும் ஓரளவுக்குப் பக்க பலமாயிருந்து பறைசாற்றியது.

காதுக்கினிய ஓசைநயமுள்ள பாடல்கள் புனைவதில் பரமேஸ்வராக்கல்லூரி ஆசிரியர்களும், சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியப் பெரியார் பண்டிதர் சவுரிமுத்து அவர்களும் பெருமுயற்சி எடுத்தார்கள். பண்டிதர் அவர்கள் தூய செந்தமிழில் மேடைகளில் நன்ருகப் பேசிவந்தார். "சிங்கார தோற்றம், சீமைஅறிவு, அழகு மங்காத மன்மதன்" என்றெல்லாம் அவர் அருமையாகப் பேசிஅணிதிரட்டினுர். இப்பால் பரமேஸ்வராக் கல்லூரியினர் மகாதேவா அவர்களுக்குக் கிடைத்த பச்சைக் கொடியையும் பெட்டியையும் வாய்ப்பாகக் கொண்டு வாய்க்கினிய பாடல்களைப்பாடு வாராயினர். "பார்வதி அம்மன் நிறம் பச்சை பச்சை அந்தப் பாலகிருஷ்ணனும் பச்சை பச்சை சீர்வதி இந்திரனும் பச்சை, பச்சை அந்த சிவசுப்பிரமணியன் மயில் பச்சை இச்சை பார்க்கும் இடங்களெல்லாம் பச்சை பச்சை இந்தப்பூலோகத்தியற்கையெல்லாம் பச்சை பச்சை".

இப்பால் இராசரத்தினம் அவர்களை ஆதரித்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் அணிதிரண்டார்கள். இவர்களும் இராசரின் சிவப்புப் பெட்டிக்கும் கொடிக்கும் செந்தமிழில் பாட்டுக்கள் பாடிக் கொடியுயர்த்திக் கூட்டங்கள் கூட்டிப் பேசினுர்கள். இராசரின் சார்பில் கூடிய மகத்தான கூட்டம் ஒன்று திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை அதிபர் சுவாமிநாதன் அவர்களின் முயற்சியால் கூடியது. சென். யோன்ஸ் கல்லூரி ஆசிரியர் ஏ. எம். கே. குமாரசுவாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. (இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பதிவாளராய்ப் பிற்காலம் பெரும் சிறப்புப் பெற்றவர்) இவர் தமது தலைமையுரையில் நிலைமையை நன்ருக விளக்கிப் பேசினுர்.

"இத் தொகுதியில் போட்டியிடுவதற்கு விரும்பியிருந்த பேராசிரியர் சுந்தரலிங்கத அவர்கள், இத் தொகுதியை இராசருக்காக விட்டுக் கொடுத்துவிலகி கொண்டார். அவர் போட்டியிட்டிருந்தால் நான் அவருக்காவே உழைக்க விருந்தேன். அவரே விட்டுக் கொடுத்து ஆதரவளிக்கும் இவர் பெரியவர். இவரே அரசாங்க சபையை அலங்கரித்தற்குரியவர்" ஆசிரியர்கள் பலர் தாங்கள் இராசருக்காக அணிதிரண்டு உழைப்பதாகவும் ஆதரவு தேடுவதாகவும் வாக்குறுதி கூறி, அவருக்கு எவ்வித பணச்செலவும் உண்டாகாது தாம் உபகரித்தல் வேண்டும் எனப் பேசினுர்கள்.

கடைசியாகப் பேசிய இராசர், ஆசிரியரின் தியாகவுணர்ச்சிக்கு நன்றி கூறிவிட்டுச் சொன்ன வாசகம் "நீங்கள் அன்பினுல் ஏதாவது செய்யுங்கள். நான் அதைத் தடுக்கவில்லை ஆனல் எவரேனும் உங்களை அச்சுறுத்திச் செய்யுமாறு பணித்தால் நீங்கள் எனக்காக எதுவும் செய்தல் வேண்டாம்."

இவ்வாறு முன்னுரையாகக் கூறியபின் அவர் தொடர்ந்து பேசியபோது, தம்முடைய நிலைமையையும் குறிப்பிட்டுப் பேசினுர். தாம் கல்விப் பணியில் முழுநேரமும் ஈடுபடுவதற்காகத் தமக்கு நல்ல வருவாய் தந்த அப்புக்காத்தர் வேலையையும்1930 ஆம் ஆண்டு தொடக்கம் புறக்கணித்து விட்டதாகவும். ஆசிரியர்களின் அயராத வேண்டுகோளை மறுக்க மாட்டாமல் வேட்பாளனுய் வந்ததாகவும், அருணசலம் மகாதேவா அவர்கள் தமது மனதுக்கினிய நண்பன் என்றும், அவர் தம்மிடம் சில கோட்பாடுகளைக் கூறித்தாம் அவற்றுக்கு இணங்கினுல் போட்டியைத் தவிர்த்துக் கொழும்புக்கு மீள்வதாகவும் தம்மைக் கேட்டார் என்றும் தாம் அவர் கேட்டவற்றுக்கு இணங்கவில்லை என்றும், அதனுலேயே இப் போட்டி உண்டானது என்றும் தெளிவாகக் கூறினுர்.

அன்று நாடெங்கும் பெரும் பிரச்சனைக் குரியதாயிருந்த மதுபானம் அரசியல் நிலைமையையே ஆட்டி வைத்தது. அன்று வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. இந்த முறையை நாடெங்கும் நடைமுறையில் கொண்டு வருதலே தமது நோக்கம் என்ருர். இதற்கு முதலில் உடன்பட்ட

... 15 ஆம் பக்கம் பார்க்க

# சைக்கிள் சவாரியைப் போல பெடல் செய்தால் ஓடும் விமானம்

கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர் கானெல்லோ கானல்லோபூலோஸ் (Kanello Kanel-lopoulos). 31 வயதான அவர் வேகமாக சைக்கிள் ஓட்டுவதில் வல்லவர். ஒலிம்பிக் சைக்கிள் போட்டியில் ஒரு முறை தங்கப் பதக்கம்வென்ற அவர், கிரேக்க தேசிய சைக்கிள் போட்டியில் 14 தடவை சாம்பியன் பட்டம் பெற்றிருக்கிறார்.

கிரேக்க விமானப் படைத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த சிறிய விமானத்தில் அந்தச் சைக்கிள் வீரர் ஏறி உட்கார்ந்தார். அந்த விமானத்தில் என்ஜின் கிடையாது. எனவே பெட்ரோல் டாங்கும் கிடையாது. ஆனால், சைக்கிளில் உள்ளது போலப் பெடல்கள் இருந்தன. விமானத்தின் முன்புறத்தில் புரொப்பெல்லர் (Propeller) இருந்தது. விமானத்தைக் கிளப்ப கானெல்லோபலொஸ் பெடலை வேகமாக மிதிக்க ஆரம்பித்தார். புரொப்பெல்லர் சுழல ஆரம்பித்து விமானம் தரையில் சிறிது தூரம் ஓடிப் பிறகு மெல்ல வானில் கிளம்பியது. அவர் தொடர்ந்து விடாது பெடலை மிதித்துக் கொண்டேயிருந்தார். விமானம் பறந்து கொண்டேயிருந்தது.

விமான தளத்தில் கூடி நின்று என்ன ஆகுமோ எனக் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்த அனைவருக்கும் ஒரே வியப்பு.

கிரேக்க நாட்டின் கிரீட் என்னும் தீவிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் மொத்தம் 74 மைல் தூரம் பறந்தது. மனித உடல் உழைப்பின் மூலம் ஒரு விமானம் இவ்வளவு தூரம் பறந்தது என்பது ஒரு பெரிய சாதனையே.

இச்சாதனை ஏப்பிரல் கடைசி வாரத்தில் நிகழ்த்தப்பட்டது.

கிரேக்க நாட்டைச் சேர்ந்த சைக்கிள் சாம்பியன் ஓட்டிச் சென்ற அந்த விமானம் சாதாரண விமானம் அல்ல. மனித உடல் உழைப்பினால் ஓட்டுவதற்கான வகையில் விசேஷமாக அமெரிக்காவில் உள்ள மாஸாச்சுஸெட்ஸ் தொழில்நுட்ப ஸ்தாபனத்தில் (MassachusettsInstituteof Te-chnology) வடிவமைக்கப்பட்டதாகும். வரலாற்றுப் பேராசிரியர்கள், உடலியல் துறை நிபுணர்கள், விளையாட்டுத்துறை வல்லுநர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்று 36 பொறியாளர்கள் 3 ஆண்டு காலம் பாடுபட்டு இந்த விமானத்தை உருவாக்கினர்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அந்த விமானத்தை சிரமப்பட்டு கிரேக்க நாட்டுக்குக் கொண்டு வருவானேன்? அந்நாட்டின் கிரீட் தீவிலிருந்து ஏன் அது வானில் கிளம்பியது? கிரேக்க நாட்டின் சைக்கிள் வீரர் ஏன் அதை ஓட்டிச் சென்றார்? இவற்றின் பின்னால் கிரேக்க புராணக்கதை ஒன்று தொக்கி நிற்கிறது.

கிரேக்க புராணத்தில் வரும் டேடலஸ் (Daedalus) என்ற வீரர் கிரீட் தீவில் சிறை வைக்கப்படுகிறார். எப்படியாவது அங்கிருந்து தப்ப டேடலஸ் முடிவு செய்து மெழுகு, பறவையின் இறகுகள் ஆகியவற்றைக் கொண்டு இறக்கைகளை உண்டாக்கி அவற்றைத் தனது கைகளில் கட்டிக் கொண்டு சிறகடித்தபடி வானில் பறந்து தப்புகிறார். இவ்வாறு கிரேக்க புராணக்கதை கூறுகிறது. மனிதன் இறக்கைகளைக் கட்டிக் கொண்டு சிறகடித்துப் பறக்க முடியாதுதான். ஆனால், இறக்கைகளைக் கட்டிக் கொண்டு சிறகடித்தால் என்ன...? பெடலை மிதித்தால் என்ன...? மனித உடல் உழைப்பு மூலம் மனிதன் வானில் பறக்க வேண்டும். கிரேக்க சைக்கிள் சாம்பியன் அதைச் செய்து காட்டி கிரேக்க புராணக் கதையை நனவாக்கினார் எனலாம்.

**தகவல்-குறிப்பு-செய்தி-விபரம் விஞ்ஞானம்**

பெடல் செய்தால் வானில் பறக்கின்ற அளவுக்கு விமானம் மிகவும் எடை குறைந்ததாக இருந்தாக வேண்டுமே! அதற்காக அது விசேஷபிளாஸ்டிக்கைக் கொண்டு தாயாரிக்கப்பட்டது. விமான இறக்கையின் நீளம் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை 112அடி ஆனாலும்,விமானத்தின் எடை வெறும் 70 கிலோ. (ஓர் அரிசி மூடையின் எடையை விடக் குறைவு.)

கானெல்லோபூலோஸ் கிரீட் தீவிலிருந்து கிளம்பி சாண்தோரினி (Santorini) தீவில் வந்து இறங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. சாண்தோரினியை நெருங்கிய சமயத்தில் திடீரென கடுங்காற்று வீசியது. கானெல்லோபூலோஸ் சமாளித்து விமானத்தைத் திருப்ப முயன்றார். ஆனால் வலுவற்ற அந்த விவமானத்தின் பின் பகுதி முறிந்து விமானங் கடலில் விழுந்தது. கானெல்லோபூலோஸ் நீந்திக் கரைசேர்ந்தார். சாண்தோரினி தீவில் காத்திருந்தோர் அவருக்கு வீர வரவேற்பு அளித்தனர்.

பெடல் செய்யும் விமானம் என்பதால் அது கிரீட்தீவிலிருந்து கிளம்பியதிலிருந்துதரையிலிருந்து சுமார் 20 அடி உயரத்தில்தான் பறந்து வந்தது தாழ்வான உயரத்தில் பறந்த காரணத்தில் அவர் ஒரு கணம்கூட நிறுத்தாமல் ஓயாது பெடல் செய்யவேண்டியிருந்தது கிரீட்டில்கிளம்பியதிலிருந்தது விமானம்விழுந்து உடைந்தது வரையில் அவர் பெடல் மிதித்த நேரம் 3மணி 54 நிமிஷம்.

கானெல்லோ பூலோஸ் சைக்கிள் ஓட்டுவது போல பெடல்மிதித்தார் என்றாலும் சைக்கிள் செயின் எதுவும் விமானத்தில் கிடையாது, பெடலை மிதிப்பதன் மூலம் புரொப்பெல்லரைச் சுழல வைக்க கியர் பாக்ஸ் (Gear Box) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தரையில்சுமார் 4மணிநேரம் சைக்கிளை மிதித்துச் செல்வது பெரிய கஷ்டமல்ல. ஆனால் என்னதான் எடை குறைவு என்றாலும் வடிவில் பெரிதான அந்த விமானம் தொடர்ந்து பறந்து கொண்டிருக்கும் வகையில் புரொபெல்லர் இயங்குவதற்கு வேகமாக விடாது பெடல் மிதிப்பது எளிய காரியமல்ல.ஒருவரால் அவ்வளவு சிரமத்தைத் தாங்க முடியுமா என முன் கூட்டியே உடலியல் நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டன. உடலுக்கு ஏற்படக்கூடிய சிரமமானது. விடாது இரண்டு தடவை மாரத்தான் போட்டியில் ஓடுவற்குச் சமம் என்று நிபுணர்கள் கூறினர்.

பெடலைத் தொடர்ந்து மிதிப்பதற்கு கானெல்லோபூளோஸுக்குத் தெம்பு வேண்டுமே!உடலுக்குப் போதுமான சக்தியை அளிக்க குளுகோஸ், கனிச்சத்து அடங்கிய உப்புகள்,விற்றமின் முதலியவை கலந்த "லெமன் ஜூஸ்" போன்ற பானத்தை அவர் தேவையான போதெல்லாம் உறிஞ்சினர்.

இந்த பெடல் விமானத்தை ஓட்ட ஆரம்பத்தில் கானெல்லோபூலோஸ் உட்பட 5 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் தினமும் சுமார் 60 மைல் தூரம் வேகமாக சைக்கிள் ஓட்டிப்பயிற்சி செய்தனர்.

இறுதியில் கானெல்லோபூலோஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் ஓட்டிச் சென்ற இந்த விமானத்துக்கு கிரேக்கப் புராண வீரரின் நினைவாக "டேடலஸ் - 88" என்று பெயர் வைக்கப்பட்டது. எனினும், பெடல் விமானத்தை ஏதோ விளையாட்டுத்தனமாக முயற்சியில் என்று கருதி விட முடியாது.

அமெரிக்க விண்வெளி ஸ்தாபனம்(NASA)இதற்கான ஆராய்ச்சித் திட்டத்துக்கு மானிய உதவி அளித்தது பல துறையினரும் இத்திட்டத்தில் அக்கறை காட்டினர்.

பெடல் விமானத்தை ராணுவ காரியத்துப் பயன்படுத்த முடியுமா என்று கேட்டதற்கு இத்திட்டம் சம்பந்தப்பட்டபெக்கி ஸ்காட் (Peggy Scott)பதிலளிக்கையில்' எதில்தான் ராணுவ உபயோகம் இல்லைஎன்றார்.

எனவே தொடர்ந்து இது போன்ற பெடல் விமானங்கள் ஓட்டப்படலாம்.

எனினும், போக்குவரத்து நெரிசலில் மிதி வண்டியை (சைக்கிளுக்கு அப்படி ஒரு பெயர் உண்டு)ஓட்டிச் செல்வதில் சிரமப்படுவோருக்கு, நீண்ட இறக்கைகளைக் கொண்ட மிதி விமானம் பயனுகப் போவதில்லை. எதிர்காலத்தில் ஒரு வேளை பெடல் மூலம் இயக்கும் மிதி ஹெலிகாப்டர் வந்தால் அது, வேலைக்குச் செல்வோருக்கு உதவியாக இருக்கலாம்.

## கவிஞனின் பிரசவம் வெறும் பிரசுரமல்ல

**முருக வே. பரமநாதன்**

கன்னிக்கு ஒருநாட் பிரசவம்
கவிஞனே பிறக்கிறான் அவன் கவிதைகளோ
இறவாத புகழ் உடையன- இறப்பதில்லை அவை
பாடாமல் இருக்க முடியாமை பிறந்து
பிறந்தன அக் கவிதைகள்
யோனிவாய்ப்பட்ட கவிஞனின்
கவிதைகள் மேனிவாய்ப் பிறக்கின்றன
மடிந்தபின் புலவன் வாழ்கிறான்
அவனுடைய படைப்புகளோ
அமரகாவியங்கள்- அவனமரன்
ஆன பின்னரும்,
அவன் வாழ்வு வெறுமையில்.
ஆனல்
அவனுக்குக் கவிதைகள் நிறைவளிப்பன
இன்பமளிப்பன உலகுக்கு
பசியவனைக் கிள்ளலாம், ருசி தெரியாத போதும்
அவன் கவிதைகளோ பிறருக்குத்
தீனி போடுகின்றன
அவனுக்கு அல்ப ஆயுளென்றாலும்
அவன் வார்ப்புகளின் ஆயுளோ
ஆயிரமாயிரமாண்டுகள் அவனை
மறக்கலாம். பாடல்களை மறக்கமுடியுமா?
அவனது சந்ததி மறைந்தாலும்
கவிதைகளே அவன் வாரிசு
அவன் சிருஷ்டிகளே சமகாலத்
தாக்கங்களின் பிம்பம் காலக் கண்ணடி அவன்
அவனுடைய பிரசவங்கட்கு டாக்டர்கள்
தாதிகள் இல்லை, அவனே எல்லாம்
என்றாலும் அவனுக்கோர் நோக்காடு
முத்துச்சிப்பி போல
கவிஞன் கைப்படாதனவே இல்லை
ஆனல் அவனைப் பாட
கவியுளப் புரிந்த கவிஞனுற்றான்
முடியும்;
சுவைஞர்கள், விமர்சகர்கள்
அவனைத் தொடர்வார்கள்
நெஞ்சிலுற்றதைச் செய்கையில்
நாட்டும் கர்ம வீரனவன்
தராசு அவனுடைய மனச்சாட்சி
வேறுமொழிகளிலே அப் பாடல்கள்
மொழி மாறலாம்- அவனோ
தாய்மொழிக்குத் தனையன்
சிந்தனை கவிதை மயம்
எழுத்தும், சொல்லும், பொருளும்
கருவும், இசையுமவன் ஏவலாட்கள்
ஏவாமற் பணிசெய்யும் சிருஷ்டி
கர்த்தா, பிரம்மா அவனே தான்
மனக்குகை தங்கச்சுரங்கம்- ஆனல்
எந்நேரமுமவன் சுமைதாங்கி தான்
சுகப் பிரசவங்களோ
தன் மொழியை, இனத்தை
ஏன் நாட்டையே வளமாக்குகிறான்
ஆயின், மொழியால் வருமினம்
அவனை வாழ்நாளிலே பேணுமலே
மறந்துவிடுகிறது
பிதாமகனவன் உருத்திரனல்ல அழிக்க
அழிப்பு தெரியாதவன் படையலவன் தொழில்
அவனுடைய பிரசவங்கள் வெறும் பிரசுரங்களல்ல
அவன் மழலைகளே கவிதைச் சகோதரங்கள்
மனிதன் சந்ததியினுற்பத்திக் களம்
இவனுடைய காலத்தாலழியாதன கருத்துக்கள்
கவிமலர்கள் பூக்குதாமரைத் தடாகமவன்
ஆழ்கடலாயுமிருப்பான் மூழ்கியெடுத்து வீசிய
முத்துச் சரங்களை அனுபவிப்போர் அவன்
உடன்பிறப்புகள்
ஆழ்கடல் அமைதி குமுறல்களானல்
கரங்கள் பிணைக்கப்படும் வேளை
அவன் ஒரு ஊமை கவிதைகள்
மட்டும் பேசும்வரை காத்திருப்பான்
யதார்த்தம் அவனது சிறகுகள்
சத்தியவேட்கை- சமதர்மம்
சமூகநிதி- பாவிப்பிரீதி- சமாதானம்
அவனுடம்பு
சுதந்திரமான வான்வெளியவன் இருக்கை
கட்டில்லாத உயிரோட்டமவன் நடை
பாவம்- கலை- நயம்- சுவைகள்
இதயதாகமே முத்திரை கனவுகள்
நனவாகும் கவிஞன் வாக்குப்
பலிக்கும் வெறும் சாலே சுரமல்ல
அந்த ஆழ்ந்திருக்கும் கவியுளம்
கண்டவனே பரிசளிக்கும் செல்வந்தர்
இலக்கியத்தின் திறவுகோலான கவிஞனின்
பிரசவம் வெறும் பிரசுரமல்ல.

## துணுக்கு தகவல்கள்

★ தாவரங்களுக்கா ஒரு ஆஸ்பத்திரி ஜேர்மனியின் பிராங்பேர்ட்டில் இருக்கிறது இவ்வாஸ்பத்திரியில் நோயான தாவரங்களை சாடியுடன் கொண்டுபோய் கொடுத்தால், அதற்கு கிகிச்சை அளித்து முற்றிலும் குணமானவுடன் உரியவரிடம் திருப்பி அளிக்கின்றார்கள்.

✶ யப்பானில் 100 வயதைக் கடந்த முதியோர்களுக்கு அந்நாட்டு பிரதமரால் தேசிய தினத்தன்று பரிசுகள் அனுப்பி வைக்கப் படுகிறதாம்.

✶ யாவா நாட்டு மக்கள் தங்கள் வீட்டில் பசுக் கன்று ஈன்றால் அண்டை அயலவர்களுக்கு அறுசுவை விருந்து படைப்பார்களாம்

✶ குவைத் நாட்டில் மக்கள், விருந்தினர்களுக்கு ஒட்டக இறைச்சியை அளிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்வராம்.

★ தமிழாளன்

**நூலகம்**

# சி. சிவசேகரத்தின் செப்பனிட்ட படிமங்கள் கவிதைத் தொகுதி

'செப்பனிட்ட படிமங்கள்' கவிதைத் தொகுப்பில் அமைந்த கவிதைகள் அனைத்தும் சீரியதோர் ஒழுங்கு முறையிலே- கவி ஆர்வலர்கள் மத்தியில் தெளிவை, நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கிலே, பொருளமைவு கருதி வைக்கப்பட்டுள்ளமை பொருத்தமாய் அமைந்துள்ளது.

"அடிப்படையில் தேடல் முயற்சிகளே என் கவிதைகள்" எனத் தன் முன்னுரையிலே கூறும் கவிஞர் சிவசேகரம் அவர்கள் தனது கவிதைகளினூடாக இன்றைய யுகத்தில் நமது வாழ்வின் நோக்குகளையும், போக்குகளையும், இன்பங்களையும், துன்பங்களையும், விழுமியங்களையும், வில்லங்கங்களையும், அற்புதங்களையும், அக்கறைகளையும், இளவேனிலையும், வசந்தத்தையும்; வானும் மலையையும்; நிலவும் நதியையும்; மரமும் இலையையும், மலரும் சருகையும்; பனியின் பிடியையும்; மாநகர் மோகனத்தையும்; அதன் அதிசயங்களையும், பல்கலைக் கழக யன்னல்களையும், நண்பனையும் எதிரியையும், ஹிட்லரின் நாட் குறிப்பையும், தியாகங்களையும், திசைமாறிய நண்பனையும், சட்டை மாற்றிய சாமியாரையும், ஒதுங்கி ஓடியோரையும் பார்த்தும், காரணங்கள் கண்டும்; சட்ட ரீதியான உரிமைகளை விசாரணை செய்தும், தூரத்து வீடியோ, நெக்ரோவின் துயரங்களையும், போராட்டங்களையும் நினைவிலாடப் பண்ணியும், பழையன கழிதலும் புதியன புகுதலுமாகிப் படிமங்களைச் செப்பனிட்டும், புதியபடிமங்களைச் செதுக்கியும் புதிய பூமியைக் காண விளைந்து- விரைந்து கொம்பியூட்டருக்கே புதிர்க் கணக் கொன்றைப் போட்டு விடுகிறார் இந்நூலில்.

இருபத்தைந்து கவிதைகளை கொண்டு தொகுக்கப்பட்ட இக்கவிதைகள் அவ்வப்போது தாயகம், புதியபூமி, செங்கொடி, செம்பதாகை ஆகிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தவை.

கவிஞர் சிவசேகரம் கவிதைகளை பிரசுரத்தை எதிர்பார்த்து எழுதுவதுமில்லை. உடனடியாக வெளியிடுவதுமில்லை முதலில் நண்பர்களின் பார்வைக்காக என்றே எழுதியனுப்புவதும், பின்னர் பல்வேறு திருத்தங்களைச் செய்தே பிரசுரிப்பதுமான இவரது பிரத்தியேக நடைமுறையினை இவரது முன்னுரைகளிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

கவிஞர் சிவசேகரம் சில சொற்களுக்குப் புதிய வியாக்கியானம் அளிப்பது சிந்தனைக்கு விருந்தாயமையும். இவரது "நதிக்கரை மூங்கில்,என்னும் தொகுதியில் ஆற்றல் வாய்ந்த சொற்பிரயோகங்கள் சிலவற்றை நாம் சந்திக்க முடிகிறது புதிய தமிழ்ப் படைப்புக்களிலிருந்தும் கவிதைக்கலை நுட்பத்தை விளக்கும் உதாரணங்களை நாம் பெற்றுக்கொள்ளலாம் என்பது தேறுதலளிக்கும் செய்தியாகி உள்ளது ' என்ற கவிஞர் முருகையனின் விமர்சனம் இக்கவிதைத் தொகுப்புக்கும் பொருந்தக்கூடியதே.

'சிறைக்கூடம்' என்பதனை 'ஐம்பத்திருவருக்கு கவிதையில் அற்புதங்கள் நிகழும் ஆலய மாடமாகக் காட்டுவது நாவுக்கரசர் சுண்ணும்பறையில் சிறை வைக்கப்பட்ட போது "ஈசன் எந்தை இணையடி நிழலே" என்பதனை நினைவூட்டும்.

'புதியபடிமம்' கவிதையில் மாறுக புனிதப் பொருட்களாகப் போற்றப்பட்டு வரும் புராதனச் சின்னங்களை, சிற்பங்களை, ஓவியங்களை, காவியங்களை, செப்பேடுகளை, செய்யுட்களை "சிறைக்கூடம்" என்றவாறுகக்காட்டி "வேய்ந்த சிறைக்கூடம், வீழ்ந்து நொறுங்கட்டும், பெண்ணடிமைப் பெருங்கோட்டை மதில்கள் பொடிபடட்டும்" என வியாக்கியானப்படுடுத்தி வெஞ்சினம் காட்டும் இக்கவிதையுடன் கவிஞர் முருகையனின் "இரண்டாயிரம் வருஷப் பழையசுமை எங்களுக்கு" என்ற கவிதையைஇதனுடன் இணைத்துப் படிப்பது இன்பம் பயக்கும்.

பண்டைய காலத்தில் வேந்தர்களால் நடாத்தப்பெற்ற யாகத்தின் பொருட்டு உயிர்க்கொலைகளும் இடம்பெற வேண்டுமென்ற நியதி இருந்தது. எனினும் உயிர்க்கொலைகள் மட்டுமே யாகம் ஆகிவிடாது. நவஇலக்கிய முன்னோடியாகிய பாரதியார் "ஊருக்கு உழைத்திடல் யோகம்-நலம்- ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" என்றுபாடிவைத்துள்ளமை மானுட நாகரிக வாழ்வின் பெறுமானத்தை நிலைநாட்டும்.

"சிறையினிலே பிறந்ததனால் கிருஷ்ணன் என்றால், சிலுவையிலே இறந்ததனால் யேசு என்றால் போர்க்களத்து வார்த்தையெல்லாம் கீதை ஆகும், படுகொலைகள் அத்தனையும்யாகம்ஆகும்என்றுதியாகங்கள் கவிதையில் கேள்விகளை எழுப்பிவிடுகிறார். "பால் வெள்ளை வெள்ளையெல்லாம் பால் அல்ல' என்ற தர்க்கவியல் உண்மையை சிந்திக்கத்தூண்டும்.

'படுகொலைகள் அத்தனையும் யாகம் ஆகுமா?' இதற்குரியபதிலே"சட்டைமாற்றிய சுவாமியார்' கவிதையில் குருவேசரண் என்றுகும்பிட்டு நிற்பாயேல், ஆசீர்வதித்து ஆன்மீகம்பேசி, அகிம்சை வழியினிலே, இனவெறுப்பும் போதித்து, படுகொலைக்கும் ஞாயம் பலவுரைப்பார்" என நையப்புடைத்து விடுகிறார். இவ்வாறாக யாகம்' என்பதனை பாரதிகாட்டும் பான்மையிலே சிந்திக்கச் செய்யும் வண்ணம் செதுக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

போர் நெருக்கடிமிக்கஈழத் தமிழர் வாழ்வில் நெஞ்சுரத்துடனும் நேர்மைத் திறனுடனும் ஆழ்ந்த ஞானத்துடனும் செயற்பட வேண்டியமை அவசியமென்பதனால் பாரதி பாடியது போல் "போரிட நின்றிடும்போதும்- உளம் பொங்கலில்லாத அமைதி மெய்ஞானம்" பெற வேண்டுமென்று கருதி "எதிரியும் நணபனும்" பார்வைகள்' ஆகிய கவிதைகளைத் தத்துவச் செழுமைபெற்றனவாகப் படைக்கப்பட்டுள்ளன.

ஹிட்லர் மரித்தாலும் அவனது பாசிசம் பார்முழுதும் அவ்வப்போது பற்றிப் படர்ந்து தொடரும் போக்கினை, 'ஹிட்லர் நாட் குறிப்பு' என்ற கவிதையில் 'ஹிட்லர் டயறிகள் இன்றும் தொடர்ந்து எழுதப்படுவன, செயலாய் நிசமாய் இன்று இந்த இலங்கை மண்ணில் ஹிட்லரின் சொற்கள் உயிர்த்துத் தங்கள் நிழலுரு நீங்கி நிசங்களாவன ...' வாரும் துவக்கும் தீவெட்டிகளும் இனவெறி உந்தும் ஆயிரம் கைகள் ஏந்த அழுத்தி எழுதிச் செல்லும்... அரசு முதலைக் கண்ணீர் உகுக்கும் அல்லது புண்ணில் முள்ளாற் செதுக்கும் எனப் பாடுகிறார்.

'ஐம்பத்திருவருக்கு 'கவிதையின் கடைசி வரிகள் 'கண்டு விறைத்த சிறைச் சுவர்கள் மௌனிக்கும்'' என்ற 1983 யூலைச் சிறைப் படுகொலைகள் பற்றிய மௌனம சர்வதேச மேதினத் தியாக சீலர்களின் கல்லறைகளின் மௌனத்தினை ஞாபகமூட்டும் ஈழத் தமிழர் வாழ்வில் அரசு இயந்திரத்தின் ஒடுக்கலின் கொடூரத்தைக் குறித்து நிற்கும் இச்சம்பவத்தில் மௌனத்தின் சக்தி அளப்பரியது, அற்புதம் மிக்கது என்பதை உணர்த்துகிறது.

ஜனநாயகம் என்பது நடைமுறை வாழ்வில் போலியாகவும் அதன் அரசு இயந்திரங்களான படைப் பட்டாளம், சிறைச்சாலை, சட்டங்கள், அதிகாரம் யாவும் சாதாரண மக்களின் நன்மைக்கன்றி ஆளுவோரின் அனுகூலத்துக்கானதேயென்று "காரணங்கள்" கவிதை அம்பலப்படுத்தி விடுகிறது. "கும்பிருட்டில் ராணுவத்தார் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்யும் நேரத்தில் வீடுகள் எரிகிறது ஏனென்று கேட்கிறாய் நண்பனே நாட்டின் அமைதியைப் பேண அவர்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள்...... இதிலிருந்தாவது தெரிந்து கொள் குப்பைத்தொட்டி முதலாக எல்லாமே இங்கு காரணத்துடன்தான் வைக்கப்பட்டுள்ளன''

போலி ஜனநாயகத்தின் பெறுபேறாக ஆளுமையிழந்த- முழுமை பெறுத "மாநகர்:- அற்புதங்கள்'' அபத்தமானவை யென்றும்,மானுடப்

— 15 ஆம் பக்கம் பார்க்க

# பன்னிருதிருமுறைமுற்றோதல்

**சமயம்**

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

சைவமக்கள் மத்தியில் திருவாசக முற்றோதல் பிரபலமடைந்து வருகின்றது. திருவாசக முற்றோதலை யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்தியவர் நல் ஆர் திருஞான சம்பந்தராதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் ஆவர். திருவாசகமுற்றோதல்போன்றுதிருமுறை முற்றோதலும் சைவமக்கள் மத்தியில் பிரபலப்பட்டு நடைமுறையில் இருக்க வேண்டியது அவசியம்.

சைவமக்களுக்கு சமய தீட்சையின் போது வழங்கப்படும் பஞ்சப்பிரம மந்திரம் சடங்க மந்திரம், சிவமூல மந்திரம் என்பன சேர்ந்து பன்னிரண்டாக அமைவதற்கு ஒப்பாகத் திருமுறைகளும் பன்னிரண்டாக அமைந்துள்ளன. இவற்றுள் எட்டாவது மந்திரமாக சிகாமந்திரம் உள்ளது. மனிதருக்கு சிகைக்கு (குடுமிக்கு, தலைமயிருக்கு) மேல் அங்கம் இல்லாமை போன்று திருவாசகத்துக்கு மேலான நூலும் இல்லை என்ற உண்மையினைத் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அழகாக விளக்கியுள்ளார்.

நடராசப் பெருமானே தன் கைப்பட எழுதி வெளிப்படுத்தியருளிய திருவாசகத்தின் சிறப்புகளைச் சைவமக்கள் உணரவும், நன்கு அனுபவிக்கவும் வாய்ப்பாகச் சைவச் சான்றோர் திருவெம்பாவைக் காலம் என ஒரு காலம் வருடம் தோறும் மார்கழியில் நிலைபெறச் செய்து அக்காலத்தில் எல்லாத் திருமுறைகளையும் காப்பிட்டுப் பூசிக்க வேண்டும் எனவும் பிறதிருமுறைகளைப் பாராயணம் செய்யலாகாது எனவும் ஒரு மரபினை வகுத்துள்ளார்கள். இம் மரபினைப் பொன்னே போல் போற்றித் திருவெம்பாவைக் காலத்தில் பூஜை வேளைகளில் திருவெம்பாவையையும் பிறநேரங்களில் திருவாசகத்தினையும் பாராயணம் செய்வது முறையாகும். திருவாசகத்துக்கு என வரையறுக்கப்படாத பிறகாலங்களில் ஏனைய திருமுறைகளை முற்றும் ஓதும் வழக்கத்தை ஏற்படுத்தல் நன்று

திருவாசகத்தை ஒரே தினத்தில் முற்றும் ஓதுவது போல பலதிருமுறைகளை ஒரே நாளில் ஓதிவிடமுடியாது. ஆதலால், ஒரு மாதத்திற்குஒருதிருமுறை என வரையறை செய்து அந்த மாதத்தில் வாரம் தோறும் ஒரு நாளினைத் தெரிந்து திருமுறை முற்றோதலை மேற்கொள்ளல் நன்று. இப்படி மேற்கொள்ளும் போது திருவெம்பாவைக்கு உரிய காலத்தை எட்டாம் திருமுறைக்கு உரியதாக வரும்படி திருமுறை முற்றோதலை அமைத்துக் கொள்ளலாம். இப்படி அமைக்கும்போது மார்கழி மாதம் எட்டாம் திருமுறைக்கு உரியதாக அமையும். வேறுவிதமாக அமைக்கும் போதும் திருவெம்பாவைக்கு உரிய பத்து நாளும் பிறதிருமுறை ஓதுதலைத் தவிர்த்துக் கொள்வது அவசியம்.

வைத்தியத் தொழிலை மேற்கொள்ளும் டாக்டராகவும், தொழில் நுட்பத்துறைத் தலைமையை மேற்கொள்ளும் என்ஜினியராகவும் விளங்கும் பலர் தாம் இத்தொழில்களை வகித்ததால் பெருமையும், புகழும், வசதியும் அடைந்ததாகத் திருப்தியுறுவது போன்று திருமுறைப் பாராயணத்தை மேற்கொண்டதால் தாம் பல சிறப்புக்களை அடைந்ததாக திருப்தியடைந்தவர் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியாரவர்கள். இவர் தனது நித்திய பாராயணத்திற்கு அகத்தியர் தேவாரத்திரட்டினைத்தெரிந்து அதிலுள்ள இருபத்தைந்து பதிகங்களையும் தினமும் பாராயணம் செய்துவந்தார். அதனால் தமக்கு உண்டான நலன்களை அவதானித்துத் தெளிந்த இவர் பன்னிரு திருமுறைகளையும் பாராயணம் செய்ய விரும்பினார். பன்னிரு திருமுறைகளையும் தினமும் பாராயணம் செய்தலரிது என்று கண்ட இவர் மாதம் ஒரு திருமுறையாகப் பன்னிரு மாதங்களிலும் பன்னிரு திருமுறைகளையும் பாராயணம் செய்தலை மேற்கொண்டார். இந்த நியதிப்படி பன்னிரு திருமுறைகளையும் முப்பது வருடங்களுக்கு மேல் முப்பதுக்கு மேற்பட்ட தடவைகள் பாராயணம் செய்திருக்கிறார்.

'ஓதுவது ஒழியேல்' என்று ஔவையார் அரிவரி வகுப்பிலேயே செய்த அறிவுரைக்கு ஏற்ப சைவத் தமிழ்மக்களாயுள்ளவர் ஓதியுய்வடைய வாய்த்த அருள் நூல்களான திருமுறைகளுள் ஆங்காங்கு ஒவ்வொரு பாடலை பாராயணத்துக்குத் தெரிந்துவிட்டு அமைதியடைவது தக்கதன்று. பன்னிரு திருமுறைகளையும் ஓத அஞ்சுபவர் பஞ்சபுராணம் என்று குறிப்பிடுகின்ற தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு திருப்புராணம் என்பனவற்றுக்கு உரிய பத்துத் திருமுறைகளையாவது முழுமையாக ஓதல் வேண்டும். இவற்றுக்கும் அஞ்சுபவர் திருவாசகம் முற்றுமோதுவது போல் தேவாரம் முழுவதையுமாவது முற்றுமாக ஓதல் வேண்டும்.

ஆலயம், மடம் போன்ற இடங்களில் திருமுறை முற்றோதலை நிகழ்த்தும் போது பிழையின்றியும் இசையுடனும் ஓதும் தகுதியுடையோர் தனித்தோ சேர்ந்தோ ஓத பிறர் கேட்டுச் சிந்தித்த வண்ணம் அதில் பங்கு கொள்வதே நன்று. சில இடங்களில் திருவாசக முற்றோதலின் போது எல்லோரும் பங்குபற்ற வேண்டும் என்ற அடிப்படையில் சொற்பிழை இன்றி வாசிக்க இயலாதவர்களும் பங்கு பற்றுகின்றனர். இது தவிர்க்கவேண்டியதாகும். திருமுறை ஓதுதலில் பங்குபற்ற விருப்பமுள்ளவர் ஆற்றவில்லையெனில் ஆயத்தம் செய்வது வரவேற்கத்தக்கது.

பன்னிரு திருமுறைப் பாராயணத்துக்குத் திட்டமிடும் போது நன்கு வாசிக்கத் தெரிந்த சிலரை நியமித்துக் கொண்டால் அதிக பதிகங்களைக் கொண்ட திருமுறைகளைச் சிரமமின்றி ஓதி நிறைவு செய்யலாம்.

மார்கழி மாதத்தில் எட்டாம் திருமுறை அமையும் வகையில் பன்னிரு திருமுறைப் பாராயணத்தை செய்ய முற்பட்டால் சித்திரை மாதத்தில் பன்னிரண்டாம் திருமுறையும் வைகாசி மாதம் முதலாம் திருமுறையும் ஓதும்நியதி ஏற்படும். சித்திரைத் திருவாதிரை நட்சத்திரமே பெரிய புராண அரங்கேற்றத் தொடக்கம் நிறைவு என்பன நிகழ்ந்த நாளாகையால் சித்திரை திருவாதிரை நட்சத்திரம் பெரிய புராணமாகிய பன்னிரண்டாம் திருமுறைப் பாராயணத்தை ஆரம்பிக்கும் நாளாகவோ நிறைவுசெய்யும் நாளாகவோ அமையச் செய்யலாம். வைகாசி மூல நட்சத்திரம் திருஞானசம்பந்தர் திருமுறையான 1-ம் திருமுறையை ஆரம்பிக்கவோ நிறைவு செய்யவோ நியமிக்கவோ விரும்பலாம். 7-ம்8-ம் 9-ம் திருமுறைகள் குறைவான பாடல்களைக்கொண்டமையால் இத்திருமுறைக்கு உரிய மாதங்களில் இத்திருமுறைகளுக்கு முன்பின் உள்ள திருமுறைகளை ஓதும் நிலை வருமானால் அங்கிகரிப்பது தவறாகாது.

திருவாசக முற்றோதல் போன்று ஒரேதினத்தில் எளிதாக நிறைவேற்ற இயலாது என்பதற்காக திருமுறைகள் முற்றோதலை மேற்கொள்ள அஞ்சலாகாது. முயற்சியின் பெருமைக்கு ஏற்ப பயனும் சிறப்பாக இருக்கும் என்பதை நினைவில் நிறுத்தல் அவசியம். திருமுறைகளின் தோற்றத்திற்குப் பின்னர் சைவத் தமிழ்ச் சமுதாயத்தில் திருமுறை பேணிப் பாராட்டப்பட்ட காலப்பகுதிகளும் சிறப்புற்றன; திருமுறைகளை ஓதியவர்களும்மேன்மைப்பட்டிருந்தனர்என்பதை நினைந்துநினைந்து சைவத்தமிழ்ச் சமூகம் தமிழ்மொழியில் உள்ள அருள் நூல்களின் பயனையும் நயனையும் பெறமுயல்வது புறக்கணிக்கக்கூடாத பண்பாகும்.

# தையல் சொல் கேள் ஏல்

பெண்ணிற் பெருந்தகையார் என்றெண்ணியவுடனேயே நம் கண்முன் நிற்பவர் ஔவைப் பிராட்டியாராவார். அவரை விட்டதொரு பெண்கல்வியை நாம் எதிர்பார்க்க முடியாது. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என மனித உயிரின் அறியாமையையும் 'ஓதுவதொழியேல்' என வாழ்நாள் பூராக் கல்வியையும் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' எனக் கல்வியின் அவசியத்தையும் எடுத்துக் கூறிக் கல்வியின் மேன்மையைப் பல வழிகளாலும் புகட்டியவர் அவர்.

ஔவையாரே நல்வழி, மூதுரை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய பல நீதி நூல்களையும் இயற்றியவர். அத்தகைய உயர்ந்த உள்ளமும் ஆன்ற புலமையும் எளிமையான இயல்பும் கொண்ட அம்மூதாட்டி ஏன் 'தையல் சொற்கேளேல்' எனப் பாடினுர். விந்தையான இக்கருத்துக் கடந்த பல ஆண்டுகளாகச் சிந்தையைக் குழப்பி வருகிறது.

ஆத்மஞானியாகிய இவர் இயற்றியிருக்கும் 'ஔவை குறள்' எனும் ஞான நூல் நமது யோகிகளாலும் சித்தர்களாலும் உபநிஷத்துக்களுக்கு சமானமாகப் போற்றப்பட்டு வருகிறது என பாரதியார் கூறுகிருர். சாதாரண சொற்களையும் வாக்கியங்களையும் கொண்டு அமைந்து தெளிவான எளிய தமிழ் நடையில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் எனும் கவிதைக்குரிய உத்திமுறையோடு இந்நூல் விளங்குகிறது. அத்தகைய பெருமை வாய்ந்த அம்மையார் ஏன் 'தையல் சொற் கேளேல்' என்ருர்.

சற்றேனும் – ஏறுமாருக நடப்பாளேயாமாகில் கூருமல் சந்நியாசம் கொள்' என ஓர் அடங்காப்பிடாரி மனைவியை கடிந்து கூறிய ஔவையார்,

'ஈதல் அறம், தீவினை விட்டீட்டல் பொருள் எஞ்
ஞான்றும்
காதல் இருவர் கருத்தொரு
மித்து ஆதரவு
பட்டதே இன்பம் பரனை
நினைந் திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு'

என அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்களையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தவர். எக்காலமும் தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் மனம், வாக்கு செய்கைகளினுல் கற்புநெறி தவருது நித்தியப் பற்றுடையராய் ஒருமை எய்தி அன்பைத் துய்க்கும் இன்பமே ஒருவன் ஒருத்திக் கோட்பாடு எனக் கூறும் வண்ணம் 'கருத்தொருமித்து' எனும் தொடரால் விளக்கிய

**வள்ளிநாயகி இராமலிங்கம்**

ஔவையாரா 'தையல் சொற் கேளேல் என்ருர்? இது விந்தையாக இருக்கிறது.

இரக்கமேயற்ற ஒரு உலோபிக்கு வந்து வாய்த்த நல்ல குணங்களைக் கொண்ட மனைவி ஒருத்தியைத் தன் நேரடி அனுபவத்தில் கண்டு கொண்ட ஔவையார் 'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன' எனும் கொள்கையிற் போலும் பிரம்ம தேவனை ஏசுகிருர்.

'அற்ற தலைபோக அருத தலை
நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனே.
வற்றல்
மரமனையானுக்கு இம்மானை
வகுத்த
பிரமனை யான் காணப்
பெறின்.

மக்கள் மத்தியில் இத்தகைய பொருத்தமற்ற அநீதிகளைக் கண்டு பொங்கியெழுந்து நாத்திகமே பேசத் தொடங்கி விட்டார் ஔவையார். அத்தகைய முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட ஔவையாரா 'தையல் சொற் கேளேல்' என்ருர்.

'தாயோடு அறுசுவைபோம்' என்ற பாடலில் 'பொற்ருலியோடெவையும் போம்' என்ருரே எவையும் போம் என்ற தொடரில் வெறும் உடற் சுகங்களை மட்டுமா ஔவையார் கருதினுர். இருக்க முடியாது. உள்ளமே அழிகின்ற நிலையைத் தான் 'எவை' எனும் சொல்லால் கருதியுள்ளார் எனலாம்.

ஔவையார் பிற்காலத்தவராயின், 'மனைவியானவள் ஒரு கணவனுக்கு மந்திரி போன்றவ'ள் என்ற கருத்தும் இக் கால கட்டத்துள் இருந்திருகக வேண்டும் அது மலர்ந்து தற்காலத்தில் 'மு வ' அவர்கள் கருத்தோடு ஒன்றிய 'தோழமை பயின்றவாழ்வு'க்குப் பழக்கப்பட்டு வருகின்றது பல ஔவையார்கள் வாழ்ந்தார்கள் எனத் தட்டிக் கழியாது, துறைபோகிய தமிழறிஞர்கள் இதில் சற்று ஆர்வங் காட்ட வேண்டும். ஒட்டக்கூத்தரை - கம்பரை புறங் கண்டமூதாட்டி பற்றி எழுந்த நூல்களுள் கைக் கெட்டிய ஒரு சில நூல்களிலும் ஏற்ற விளக்கம் பெறப்படவில்லை.

நீதிநூல்கள் தோன்றிய இடைக்காலத்தது ஆயினும் தானே ஒரு பெண்ணுக இருந்து கொண்டு 'தையல் சொற் கேளேல்' எனப் பொருள் கொண்டு எழுதியிருக்க முடியாது. 'தையல்' எனும் சொல் பல்வேறு காலப் பகுயில் பல்வேறு பொருள்களைக் கொண்டிருக்கலாம். பிறநூல்களில் இச்சொல்லின் பொருளைக் காலகட்டத்தோடு ஆராய்ந்து உண்மை நிலை காணவேண்டும்–தையல் என்பது மனைவியா–பெண்ணு? மேற் சொன்ன கூற்று இடைச் செருகலா?

அவர் வாழ்ந்து வந்த கால கட்டத்தில் தையல் என்ற

... 14 ஆம் பக்கம் பார்க்க

# மங்கையர் மஞ்சரி

## மாஸ்கோவின் முதல் அழகுராணி

நீங்கள் கவர்சியானவரா? வடிவான உடலமைப்புக் கொண்டவரா? நடனம் ஆடவும், சரியாக நடந்து காட்டவும் தெரியுமா? நற்பண்புகள் அமையப் பெற்றவரா? அனைவருடனும் கலகலப்பாகப் பழகுபவரா? நகைச்சுவை உணர்வு கொண்டவரா? ஒரு சிக்கலான சூழ்நிலை நேரும் போது குழப்பமடையாதிருக்கும் ஆற்றல் உள்ளவரா?

''இவற்றில் ''ஆம்'' என பதே விடையானுல், 'மாஸ்கோ அழகி–88' போட்டியின் முதல் சுற்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவீர்கள்!''

இந்த விளம்பரமானது, ''வெச்சர்னியாய மாஸ்க்வா'' ஏட்டின் ஏப்ரல் இதழில் வெளிவந்தது. எதிர்பாராத அளவுக்கு இதனுல் பலன் கிட்டியது. மாஸ்கோ அழகியாக தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்என்று கனவுகாணும் 16–27 வயது கொண்ட மாஸ்கோவில் உள்ள இளம் பெண்கள் பலரும் விளம்பரத்தில் காணப்பட்ட முகவரியில் கூடி விட்டனர்,

2,700க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் கண்டிப்பான நடுவர்கள் முன் தோன்றினர். தகுதியற்றவர்களை விலக்கும் முதல் சுற்றுப்போட்டி 5 நாட்கள் நடைபெற்றது, இரண்டாவது சுற்றுக்கு 125 பேரே எஞ்சினர். இறுதிப் போட்டியில் 36 பேர் மட்டுமே கலந்து கொண்டனர்.

மாஸ்கோ கலாசார இயக்கம், நகர இளம் கம்யூனிஸ்டு கழகம் போன்றவை உட்பட எட்டு அமைப்புகள் இந்த மாஸ்கோ அழகுப் போட்டி–88ஐ நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தன. எண்ணற்ற பிரபலமான அழகு சாதன நிறுவனங்களும் துணைநின்றன,

''இந்த முதலாவது மாஸ்கோ அழகிப்போட்டியை முடிந்த அளவு ஜனநாயகத் தன்மை கொண்ட வகையில் நடத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்தோம்'' என்று வியோனித்யகுபோவிச், ''மாஸ்கோவ்ஸ்கி காம்சொமாலெட்ஸ்'' என்ற இளைஞர் ஏட்டுக்கு அளித்த போட்டியில் கூறினுர் அவரே இந்த அழகிப் போட்டியை நடத்தும் பொறுப்பேற்றுள்ளார். கன்னிப் பெண்களும் திருமணமான இளம் பெண்களும் இந்த அழகிப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். போட்டியில் கலந்து கொள்பவர்கள் நல்ல உடற்கட்டுடனும் புகைப்பழக்கம் குடிப்பழக்கம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்

12,000 இருக்கைகள் கொண்ட லுஸ்னிக்கி விளையாட்டு அரங்கில் மாஸ்கோ அழகியைத் தேர்ந்தெடுக்க இறுதிப்போட்டி நடைபெற்றது பார்வையாளர்களிடம் உற்சாகம் நிரம்பிவழிந்தது. அவர்களில் சோவியத் மற்றும் வெளிநாட்டுப்பத்திரிகையாளர்கள் 300 பேரும் இருந்தனர்.

மாஷா கலினின என்ற 16 வயது பள்ளிமாணவி மாஸ்கோ அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 176 சென்டிமீட்டர் உயரமும் 53 கிலோகிராம் எடையும் கொண்டவர்:பழுப்புநிறக் கூந்தலும், பழுப்புநிறக் கண்களும் உடையவர்.

''என்னைப் பொறுத்தவரை 'அற்புத உலகில் அலெஸ்' மாதிரி இருந்தது'' என்ற மாஷா, தமது முதாவது நிருபர்கூட்டத்தில் கூறினுர் ●

# கைவழி நயனம் செல்ல.. கண்வழி மனமும் செல்ல...

**கைலாசபதி கலையரங்கில் சுபாஷினி பத்மநாதன்**

நீண்ட நாட்களின் பின் இனியதொரு கலை அனுபவம். யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம் கண்ட, நாட்டிய கலாசிகாமணி செல்வி சுபாஷினி பத்மநாதனின் நடன நிகழ்ச்சி பற்றியது இந்தச் சிறுகுறிப்பு. யாழ் பல்கலைக்கழக மாணவர் நலனுக்கான துணைவேந்தர் நல நிதியத்திற்குத் தாமாகவே முன் வந்து இந் நிகழ்ச்சியை அளித்த சுபாஷினி அனைவரினதும் பாராட்டினைப் பெறுகின்ருர். சுபாஷினியின் பரத நாட்டிய நிகழ்ச்சி 15–1–89 அன்று இடம்பெற்றது.

நீண்ட நாட்களின் பின் நடன நிகழ்ச்சி என்பதுடன் நீண்ட நாட்களின் பின் வழுவூரார் பாணியிலான நாட்டிய நிகழ்ச்சியின் தரிசனமாகவும் இது அமைந்திருந்தது. திரிபுர சுந்தரி, மாலதி, கல்யாணி, கார்த்திகா போன்ருேரின் வரிசையில் செல்வி சுபாஷினி பத்மநாதனும் சேர்ந்து கொள்கின்ருர்.

வழமையான அலாரிப்பு, ஜதிஸ்வரம் என்பவற்றுடன் ஆரம்பித்த செல்வி சுபாஷினியின் நாட்டிய நிகழ்ச்சியில் காம்போதிராகத்தில் சப்தம் அமைந்திருந்தது. ஆடலுடன் அபிநயமும் தலையெடுக்கின்றமை சப்தத்தில் நன்கு புலப்படும்.

நாட்டிய நிகழ்ச்சியின் நடுநாயகமான முக்கிய உருப்படியான வர்ணம் சுபாஷினியின் நிகழ்ச்சியிலும் குறிப்பிடத்தக்க அனுபவமாக அமைந்திருந்தது. ஆடல், அபிநயம் இரண்டும் இங்கே சமமான

**என். சண்முகலிங்கன்**

இடத்தைப் பெறுவன. அருணசலக் கவிராயரின் கவிநயம் மிக்க பைரவிராக 'யாரோ இவர் யாரோ' என்ற பதத்தில் வழுவூராரின் முத்திரைகள் துலங்கின. சுருட்டியில் அமைந்த 'ஏதுக்கித்தனை' என்ற பாடலுக்கான நடனமும் குறிப்பிடத்தக்கது தான்.

அடவுகளில் வாசியத்தைக் கூடுதலாக வழங்குதலும், பாவத்திற்கும், கவர்ச்சிக்கும் முக்கிய இடத்தைத் தருதலும் வழுவூரார் பாணியின்பிரதான அம்சங்களாகச் சொல்லப்படுபவை சுபாஷினிக்கு இவை எளிதில் கைவருகின்றன.

இந் நிகழ்ச்சி முழுவதும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட



நட்டுவாங்கப் பின்னணியில் இடம் பெற்றமையையும் குறிப்பிடவேண்டும். தாளம் பிசகாமல் ஒலிப்பதிவுடன் இயைந்து கச்சிதமாக ஆடிய சுபாஷினியைப் பாராட்ட வேண்டும். ஆயினும் நேரடியான நட்டுவாங்கத்திற் கிடைக்கின்ற உயிர்ப்பு ஒலிப்பதிவு நாடா நட்டுவாங்கத்தில் எதிர்பார்க்க முடியாதது இருந்தும் வழுவூராரின் மகன் சாம்ராஜின் மணியான குரல் வளத்தில் நட்டுவாங்கம் சிறந்திருந்தது. ஜதி ஒவ்வொன்றும் உயிராகவே ஒலித்து நின்றது.

நிகழ்ச்சியின் போது அடிக்கடி திரையை மூடி இசை வேலையென்ற பெயரில் ஒலிப்பதிவுகளை ஒலிக்கவிட்டதும், திடீரென நிறுத்திவிடுவதுமாய் நடந்து கொண்டமை சலிப்பான அனுபவங்கள். நிகழ்ச்சி அம்சங்களின் தெரிவிலும் மேலும் கவனம் செலுத்தியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, கமாஸ்ராகத்தில் அமைந்த மதனுங்க மோஹனபதத்தைத் தொடர்ந்து வர்ணமும் அதே ராகத்தில் அமைந்தமையைத் தவிர்த்திருக்கலாம்.

தற்போது பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் செல்வி சுபாஷினி உயர் கல்வி கற்பதாக அறியத் தரப்பட்டது. உயர்கல்வியுடன் நாட்டியப் பயிற்சியையும் தொடர்ந்து அவர் பேணவேண்டும். ஆக்கத்திறன் வாய்ந்த புதிய கலை வடிவங்களையும் நடன அரங்கில் தரவேண்டும். சுபாஷினியிடமிருந்து பரதக்கலையுலகம் நிறைய எதிர்பார்க்கின்றது. ●

# பயிர் செய்கையில் பூச்சிநாசினி பிரயோகம்

## விவசாயம்

### சென்றவார தொடர்ச்சி

மு. கந்தசாமி
விரிவுரையாளர்
யாழ்ப்பாணக்கல்லூரி
விவசாய நிறுவனம்

பூச்சி நாசினிகளை கையாளும் போது அறியாமையாலும், அவதானக்குறைவாலும் நஞ்சுத்தன்மை ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்படாது இருப்பதற்கு கீழ் வரும் விடயங்களை நாம் கவனிக்க வேண்டும். விசிறலை மேற்கொள்ளுவதற்கு சிறுவர்களை பயன்படுத்தக் கூடாது. காயம் அல்லது புண் உள்ளவர்கள் விசிறலை மேற்கொள்ள கூடாது. காற்று திசையில் விசிறவேண்டும். எதிர் திசையில் விசிறும் போது காற்றினல் உடைகள் நனைவதுடன் மூக்கு, வாய் மூலம் பூச்சிநாசினி உட்செல்லலாம். விசிறலை மேற் கொள்ளும்போது பாதுகாப்பான மேலுடை, கையுறை, காலணி என்பன அணிந்து கொள்ள வேண்டும். மேலும்வாய், மூக்கு என்பவற்றை சீலையால் மூடிக் கட்டுவதுடன் கண்ணுக்கு கண்ணுடி அணிவது சிறந்தது. வெற்றுடம்புடன் விசிறக் கூடாது. விசிறும்போது பருகுதல், புகைத்தல், வெற்றிலை போடல், பொடிபோடல் என்பவற்றை செய்வதனுல் நஞ்சுத் தன்மை உடலில் சேருவதனுல் இவற்றை முற்ருக நிறுத்த வேண்டும். விசிறும்போது தெளிகருவியில் அடைப்பு ஏற்பட்டால் வாயால் ஊதாமல் தடிக்குச்சி அல்லது ஊசியை பயன்படுத்த வேண்டும். வெப்பம் அதிகமுள்ள நேரத்தில் வியர்வை கூடியளவு இருப்பதால் பூச்சி நாசினியை உறிஞ்சும் தன்மை அதிகமாவதால் விசிறலை மேற்கொள்ள கூடாது. நீண்ட நேரம் விசிறலை தவிர்க்கவும். பூச்சிநாசினி உடையில் பட்டால் உடனே சவர்க்காரம் இட்டு கழுவவும். மண்ணில் சிந்தினுல் மண்ணினுல் மூடவும் அனுபவமுள்ளவரின் புத்திமதியை பயன்படுத்த வேண்டும்.

### பூச்சிநாசினி பிரயோகத்தின் பின் கவனிக்க வேண்டியவை

தெளிகருவியில் மிகுதி பூச்சி நாசினி இருந்தால் ஒருவருக்கும் எட்டாத இடத்தில் ஊற்ற வேண்டும். தெளிகருவியை சுத்தமாக கழுவி, வைத்தபின் சவர்க்காரமிட்டு உடுப்புகளை நன்ருக கழுவி குளிக்கவேண்டும். பாவித்த வெற்று பூச்சிநாசினி கொள்கலன்களை மண்ணில் வெட்டி புதைக்க வேண்டும். கண்ட இடங்களில் எறிவதையோ அல்லது வீட்டுத் தேவைக்கு பாவிப்பதையோ நிறுத்த வேண்டும். நன்ருக சவர்க்காரமிட்டு குளித்திருந்தாலும் சாப்பிட முன் கையையும் வாயையும் சவர்க்காரத்தினுல் நன்ருக கழுவவும். நாசினி விசிறின பின் ஏதாவது சுகவீன அறிகுறி காணப்பட்டால் வைத்திய உதவியை நாடவும் நாசினி பாவித்த பயிர்களுக்குள் நடமாடக் கூடாது. நாசினி விசிறிய பின் "நஞ்சு அபாயம்" என்று பலகையில் எழுதி வயலில் நாட்டவேண்டும். நாசினி பாவித்த பின் கால் நடைகளுக்கு உணவுக்காக புல் பூண்டுகளை பிடுங்குவதை நிறுத்திவிட வேண்டும். நாசினி பாவித்தபின் அறுவடை பூச்சிநாசினிகளுக்கு ஏற்ப 3-21 நாட்களுக்கு வேறுபடும். சில பூச்சிநாசினிகளும் அறுவடை செய்யும் நாட்களும் கீழே தரப்பட்டுள்ளன:-

| | |
|---|---|
| லெனற் | —3 நாள் |
| அம்புஸ் | —5 நாள் |
| ரைகுளேர்பென் | —7 நாள் |
| காபோபியூரான் | —14 நாள் |
| டைமீதோயேற்று | —14 நாள் |
| பென்தியோன் | —14 நாள் |
| குவினஸ்பொஸ் | —14 நாள் |
| ரைகுளோர்பென் | —14 நாள் |
| காபரில் | —7 நாள் |
| மெதாமிடோபொஸ் | —14 நாள் |
| மிதோமையில் | —14 நாள் |
| மொனேகுரோடபொஸ் | —14 நாள் |
| பென்தோயேற்று | —14 நாள் |
| புரோபெனேபொஸ் | —14 நாள் |
| புரோத்தியோபொஸ் | —21 நாள் |

### நஞ்சுத் தன்மை ஏற்படும் வழிகள்

மிகவும் சக்தி வாய்ந்த நச்சு தன்மையுள்ள பூச்சிநாசினிகளை பாவிக்கும்போது கவனக்குறைவால் அல்லது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களால் எமது உடம்பினுள் நஞ்சுத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. தெளிகருவியின் பீச்சுமுனையை ஊதுதல், புகைத்தல், உண்ணுதல், வீட்டுத்தேவைக்கு கொள் கலன்களை பாவித்தல் என்பவற்ருல் வாய்மூலம் நஞ்சுத் தன்மை உடம்பை அடைகிறது. தோல், கைகள், கண்கள், தொண்டை என்பவற்றை சரியான முறையில் அங்கி அணியாமையாலும், புண் வெட்டு காயங்களுடன் பூச்சிநாசினியை பாவிப்பதாலும் பூச்சிநாசினி உறிஞ்சப்பட்டு ஊடுருவல் மூலம் உடம்பை அடைகிறது. பூச்சி நாசினிகளை கலக்கும்போதும், பிழையான முறையில் விசிறும் போதும் சுவாசித்தல் மூலம் நஞ்சுத் தன்மை உடம்பை அடைகிறது.

### நஞ்சுத் தன்மை அறிகுறி

நஞ்சுத் தன்மையின் அறிகுறிகள் தென்பட்டால் கால தாமதமின்றி வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும். வைத்தியரிடம் செல்லும் போது பாவித்த பூச்சிநாசினியை அல்லது அதன் கொள்கலனை, அல்லது அதன் அறிவுறுத்தல் சுட்டியை கொண்டு செல்ல மறக்க வேண்டாம்.

**அ) குறைந்த நஞ்சுத் தன்மையின் அறிகுறிகள்:-** தலையிடி, களைப்பு, வயிற்றுளைவு, வியர்வை சிந்தல், பசியின்மை, ஆகியவற்றுடன் கண், தோல், மூக்கு, தொண்டை அரிக்கும் தன்மைகள் காணப்படும்.

**ஆ) நடுத்தர நஞ்சுத் தன்மையின் அறிகுறிகள்:-** வாந்தி எடுத்தல், திடீரென பார்வை மங்குதல் உயர்ந்த நாடித் துடிப்பு, சுவாசிக்கக் கஷ்டப்படல், வியர்வை சிந்தல், திடீரென தசை நரம்புகள் இழுத்தல் என்பன காணப்படும்.

**இ) அதிகூடிய நஞ்சுத் தன்மையின் அறிகுறிகள்;-** மயக்கமடைதல், சுவாசிக்க கஷ்டப்படல், குறைந்த நாடித்துடிப்பு ஆகிய அறிகுறிகள் காணப்படும்.

### முதலுதவி

பதற்றமடையாமல் நோயாளியை உடனடியாக அவ்விடத்தில் இருந்து அகற்றி நனைந்த உடுப்புகளை நீக்கி உடம்பை நன்ருக சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும். தலையில் பட்டிருந்தால் ஒழுங்காக தலைமயிரை கழுவ வேண்டும். நோயாளியை இளஞ் சூடான நிழல் உள்ள இடத்தில் வைத்திருக்க வேண்டும். பூச்சிநாசினி கண்ணில் பட்டிருந்தால், 10-15 நிமிட நேரம் கண்ணை சுத்தமான நீரால் கழுவிக் கொள்ளலாம்.

பூச்சி நாசினி வாய் மூலம் உட்சென்ருல் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டும். வாந்தி எடுப்பது கஷ்டமாக இருந்தால் உப்புநீர், பால், சுடுநீரில் கறியுப்பை கரைத்து கொடுத்தல், முட்டை வெள்ளைக்கருவுடன் மா கரைசல், மக்னீசிய பால் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பருக கொடுக்கவும். நோயாளி மயக்க நிலையில் இருந்தால் ஒன்றும் கொடுக்கக் கூடாது. மயக்க நிலையில் இருக்கும்போது சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்க வேண்டும்.

நடுக்கம் அல்லது இழுத்தல் காணப்பட்டால் பற்களுக்கிடையில் கை குட்டை அல்லது மரத்துண்டு போன்ற சிறிய பொருட்களை வைப்பதன் மூலம் நாக்கு கடிபடுவதை தவிர்க்கலாம் எவ்வளவு விரைவாக வைத்திய சாலைக்கு போக முடியுமோ அவ்வளவு விரைவாக செல்ல வேண்டும்.

### மாற்று மருந்துகள்

நஞ்சுத் தன்மையை முறிப்பதற்கு மாற்று மருந்து கொடுக்கப்படுகிறது. சேதன பொஸ்பஸ் சேர்வையை சேர்ந்த பூச்சி நாசினிகளுக்கு அற்ரேப்பின் சல்பேற் உடன் பீ. ஏ. எம். அல்லது டொக்சோனிக் மருந்து கொடுக்கப்படுகிறது. கார்பமேற் சேர்வை பூச்சி நாசினிகளுக்கு அற்ரேபின் சல்பேற்று மட்டும் கொடுக்கப்படுகிறது கொறிப்பான் வகை பூச்சிநாசினிகளுக்கு விற்றமின் கே கொடுக்கப்படுகிறது. மற்றைய வகை பூச்சி நாசினிகளுக்கு மாற்று மருந்து இல்லை அறிகுறிகளுக்கு ஏற்றவாறு வைத்தியர்கள் வைத்தியம் செய்வர். அற்ரேபின் சல்பேற்றுக்கு பதிலாக அன்ரிடோட் பாம் பாவிக்கப்படுகிறது மாற்று மருந்துகளை விவசாயிகள் கைவசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்.

### பூச்சி நாசினிகளால் ஏற்படும் தீமைகள்

கூடியளவு பணச் செலவுள்ள முறையாக இது அமைந்துள்ளது. பூச்சிநாசினிகளின் விலை அதிகரிக்க உணவு உற்பத்திச் செலவும் அதிகரித்துச் செல்வதனுல் விளை பொருட்களின் விலையும் கூடியளவில் உள்ளது. மேலும் வருடாந்தம் எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யபடும் 7,00,000 கிலோக்கிராம் பூச்சி நாசினிகளுக்காக அந்நியச் செலாவணியை செலுத்தப்படுகிறது. பயிர் செய்கையில் விவசாயிகள் பயிர் பாதுகாப்புக்கேகூடியளவுபணத்தை செலவிடுகிருர்கள்.

பூச்சிநாசினிகள் பற்றி அறியாமையாலும் கவனக்குறைவாலும் 1000 விவசாயிகளில் 5 பேர் பாதிக்கப்படுகிருர்கள். அதிசக்தி வாய்ந்த பூச்சி நாசினிகளை கையாளும் போது நாம் மிகவும் கவனம் செலுத்தாவிடில் பூச்சிநாசினியால் பாதிக்கப்படவோ அல்லது மரணமடையவோ நேரிடலாம். பூச்சிநாசினிகளின் தாராள கிடைக்கும் தன்மையினுல் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இலங்கையில் சராசரியாக 13,000 பேர் வருடத்தில் நஞ்சூட்டப்படுகிருர்கள். இவர்களில் 1000 பேர் இறக்கிருர்கள். 1988-ம் ஆண்டு 2,000 பேர் இறந்துள்ளார்கள். இக்கணக்கீடுகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் மட்டும் அடங்குகிறது. மற்றையவிபரங்கள் தெரியவில்லை. நஞ்சூட்டப்பட்டவர்களில் 73 வீதமானவர்கள் தற்கொலை முயற்சியை மேற் கொண்டோராவர்.

பயிர்களுக்கு விசிறப்படும் பூச்சிநாசினிகள் பயிர்களில் தங்கியிருந்து நாம் உண்ணும் போது பூச்சிநாசினியின் கூறுகள் உடலிலுள்ள கொழுப்புகளில் கரைந்து திரள்கிறது. உயிர் ஆபத்து இல்லாவிடினும் பலவீனமும், இலகுவாக நோய்கள் ஏற்படுவதையும் அவதானிக்கப்பட்டுள்ளது. பூச்சிநாசினிகள் தெளித்து குறிப்பிட அறுவடைகாலம் முடிந்தபின்பே பயிர்களில் அறுவடையை மேற்கொள்ள வேண்டும் இல்லாவிடில் பயிர்களில் நஞ்சுத்தன்மை இருக்கும்.

குளோரீன் கூட்டுப்பொருளை கொண்ட பூச்சி நாசினிகள் மண்ணில் அதிக காலம் இருக்கும் தன்மையுள்ளவை இவை வடிந்து செல்லும் நீருடன் கலந்து நீர் நிலைகளை அடைவாதால் நீர் அசுத்தமடைகிறது. மேலும் நீர் தேங்கியுள்ள இடங்களில் பூச்சிநாசினி பிரயோகித்த பின் அந் நீர் நல்ல நீருடன் கலக்கும் சந்தர்ப்பங்களுமுண்டு. பவுடர் வகை பூச்சி நாசினிகளை விசிறும் போது அவை காற்றுடன் கலக்கப்பட்டு சூழல் அசுத்தமடைகிறது. பூச்சி நாசினி தொழில் சாலையிலிருந்து வெளியேறும் நஞ்சுகழிவுகளான திரவம் நீருடனும் வாயு காற்றுடன் கலந்து நீரும் சூழலும் அசுத்தமடைகிறது.

பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்காக அதிகளவு செறிவிலும் தொடர்ந்தும் ஒரே பூச்சிநாசினியைப் பாவிக்கும் போது பூச்சிகள் பூச்சிநாசினிக்கு எதிர்ப்புத் தன்மை உள்ளவாக இருப்பதனுல் மேலும் சக்தி வாய்ந்த பூச்சிநாசினிகளை தயாரிக்க வேண்டியுள்ளது யாழ் மாவட்டத்தில் வெங்காயப் பயிரில் வெங்காயத்தாள் கோதிப் புழுவும் உருளைக்கிழங்கில் அழுக்கணவனும் பூச்சி நாசினிகளுக்கு எதிர்புத்தன்மை தெரிவித்தமையை யாவரும் அறிவார்கள் உணவு விவசாய ஸ்தாபனத்தின் புள்ளி விபரப்படி 1965-ம் ஆண்டுக்கும் 1972-ம் ஆண்டுக்கும் இடையில் 364 புதிய எதிர்ப்பு சக்தியுள்ள பூச்சி இனங்கள் உருவாகியுள்ளன.

பூச்சிநாசினிப் பிரயோகத்தின் போது நன்மைசெய்யும் பூச்சி இனங்களும் அழிக்கப்படுவதால் இயற்கை சமநிலை மாற்றமடைந்து தீமை செய்யும் பூச்சிகள் பெருகும் அதேவேளையில் சாதாரண நிலையிலிருந்த சில பூச்சிகள் பீடைகளாக மாறியுள்ளன. கத்தரியில் வெண்ஈயை இதற்கு நல்ல உதாரணமாக கொள்ளலாம்.

மேற்கு நாடுகளை சேர்ந்த பல்தேசிய கம்பனிகள் தமது நாடுகளில் தடை செய்யப்பட்ட இரசாயன பொருட்களின் மூலக்கூறுகளை மூன்ரும் உலக நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளில் அனுப்பி அங்கு உண்டாகும் பூச்சிநாசினிகளை மூன்ரும் உலக நாடுகளில்விற்பனை செய்யும் உத்திகளை கையாளுவதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்களான டேவிட் வெயரும் மார்க் ஷபினேவும் கூறுகிருர்கள்.

### பூச்சிநாசினி பிரயோகத்தின் நன்மைகள்

பூச்சிநாசினிகள் விவசாயிகளுக்கு ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவே இருக்கிறது. ஆயினும் இதன் விரைவான செயற்பாட்டுக்கும் கட்டுப்பாட்டுக்கும் வேறு எந்த ஒரு முறையும் இதுவரை பயன் தரவில்லை. உடனடியாகவும் விரைவாகவும் பூச்சிகளை கட்டுப்படுத்தாவிடில் பயிரில் சேதம் ஏற்படுவது அதிகரிக்கும். இதற்கு இரசாயன முறையே சாலச்சிறந்தாதகும். மேலும் பூச்சிநாசினி பிரயோகத்துக்குமுன்கூட்டியே திட்டமிடத் தேவையில்லை. பூச்சிநாசினிகள் எல்லாச் சூழலிலும் பாவிக்க கூடியவாறு உள்ளது.

பூச்சிநாசினி பிரயோகத்தின் நன்மை தீமைகளை நோக்குமிடத்து அவற்றின் தீமைகளைவிட நன்மைகளே கூடியளவில் காணப்படுகிறது. ஆயினும் தீமைகளையும் நாம் ஒதுக்கி விடமுடியாது. இந்நிலையில் பூச்சிநாசினியுடன், மற்றை பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகளான பண்பாட்டு முறை, பொறிமுறை உயிரியல் முறை, சட்டமூலம் என்பவற்றை இணைத்து ஒன்றிணைந்த பூச்சி பீடை கட்டுப்பாட்டு முறையை மேற்கொள்ளுவதன் மூலம் பூச்சிநாசினிகளின் பாவனையை ஓரளவுக்கு குறைத்துக் கொள்ளலாம்.

---

## அன்னை

மரங்கள்
பூக்கின்றன
அதனை
உதிர்க்கின்றன
மீண்டும்
பூக்கின்றன
சுழல்கின்றது
இச்சக்கரம்
அந்தப் பூவை
பல காலம்
காக்க
அந்த மரம்
எண்ணவில்லை
நீயும்
உன் ஆசையினுல்
வந்த விளைவினுல்
பெற்று விட்டாய்
எங்களை,
ஆனுல்
காப்பாற்ற மட்டும்
மறந்து விட்டாய்.

சாயினி

---

## ஒரு வார்த்தை போதுமே

வீணையின் தந்தி அறுந்து கிடந்தது தூசு படிந்து கிடந்த வீணை துன்பத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.

பக்கத்திலிருந்த மத்தளம் அதைப்பார்த்து, வீணையே! கை கொஞ்சம் பலமாக விழுந்ததாலே நீ அறுந்துபோகிருய். என்ன தான் உன்னிடம் அருமையான ஓசை இருந்ததென்ன? என்னைப்பார் நான் எத்தனை அடிகளையும் தாங்கிக்கொண்டு கம்பீரமாக வாழ்ந்துகொண்டிருக்கிறேன்!" என்று கர்வமாகச் சொன்னது.

வீணை அமைதியாகப் பதில் சொன்னது; "மானஸ்தர்களுக்கு ஒரு வார்த்தைபோதும்"

(கவிஞர்கண்ணதாசனின் குட்டிக் கதைகள் என்ற நூலிலிருந்து)

சா. இராமகிருஷ்ணன்

## நொடிகளும் பதில்களும்

1. வெயிலில் அடங்கிக் கிடப்பான். மழையில் கூத்தாடுவான்.
அவன் யார்?
2. சின்னமச்சான் குனிய வெச்சான்
அவன் யார்?
3. போனாலும் வராது வந்தாலும் நிற்காது.
அது என்ன?
4. நீருண்டு குளமல்ல நிலமுண்டு வானமல்ல, கதவுண்டு வீடல்ல
அது என்ன?
5. கரிக்கோலைச் சுற்றி கட்டையால்பாதுகாப்பு.
அது என்ன?
6. நீரிலே பிறந்து நீரிலே அழிந்து போகிறவன்.
அவன் யார்?
7. இலை போட்டேன் எடுக்க முடியவில்லை
அது என்ன?
8. எல்லோருக்கும் நல்லவன் மழை வந்தால் மறைகின்றான்.
அவன் யார்?

### பதில்கள்

(1) தவளை
(2) முள்
(3) நாள்
(4) கண்
(5) பென்சில்
(6) உப்பு
(7) கோலம்
(8) சூரியன்

✱ கு. சர்மிளா
(அங்கத்தவர் இலக்கம் 87)

## பெரியோரின் சிறப்புப் பெயர்கள்

1. எம். கே. காந்தி
—மகாத்மா
2. சரோஜினிதேவி
—கவிக்குயில்
3. சுப்பிரமணிய பாரதியார்
—மகாகவி பாரதியார்
4. இராமலிங்கசுவாமிகள்
—அருட்கவி
5. ம பொ. சிவஞானம்
—சிலம்புச்செல்வர்
6. கதிரேசன் செட்டியார்
—பண்டிதமணி
7. எம்.எஸ். சுப்புலஷ்மி
—இசைவாணி
8. தேசியவினயகம்பிள்ளை
—கவிமணி
9. ஆறுமுகநாவலர்
—நாவலர்
10. சோமசுந்தரப்புலவர்
—தங்கத்தாத்தா
11. சுவாமி வேதாசலம்
—மறைமலையடிகள்
12. கனக சுப்புரத்தினம்:
—பாரதிதாசன்

★ த. காஞ்சனா
பூந்தோட்ட அங்கத்தவர்
இல.44.




### விலங்குகள் விதம் விதம்: 15

## காண்டாமிருகம்

காண்டா மிருகம் ஐந்து வகைப்படும். ஆபிரிக்காவில் வாழும் காண்டா மிருகம் கறுப்பு நிறமானது. நைல்நதியின் பக்கம் வாழ்வது வெள்ளைக் காண்டா மிருகம். இதுவே உலகில் மிகப்பெரிய காண்டா மிருகம்இதன் உயரம்5½ முதல் 6 அடிவரையாகும். மற்றும் இந்தியா, யாவா, சுமாத்திராத் தீவுகளிலும் காண்டாமிருகங்கள் உள்ளன. இவற்றின் உடலில் மடிப்புகள் காணப்படும். இம்மடிப்புக்களுக்கிடையில் பூச்சிகள் வாழ்ந்து காண்டா மிருகத்திற்கு இம்சைஅளிக்கும். இதனால் இவை சேற்றில் விழுந்து புரளும். ஆனால் ஆபிரிக்கக் காண்டாமிருகங்கள் மடிப்புகளை கொண்டனவல்ல.

காண்டா மிருகத்தின் சிறப்பம்சம் கொம்பு அதன் மூக்கில் அமைந்திருப்பது தான். இது 'கெரட்டின்' என்ற பல லட்சக்கணக்கான நார்களால் உருவானதாகும். ஆசியாக் காண்டாமிருகத்திற்கு ஒரு கொம்பு ஆபிரிக்க இனத்திற்கு இரு கொம்புகளும் உள்ளன. சீனரும் வட இந்தியரும் இக் கொம்பை மருந்திற்காக எடுக்கின்றனர்.

வடஏமன் என்ற அரபு நாட்டில் பெரும் பணக்காரர்கள் காண்டாமிருகக் கொம்பை அதிக விலைக்கு வாங்கி வாக்கிங்ஸ்டிக் உடைவாள் போன்றனவற்றைச் செய்கின்றனர்.

ஆபிரிக்க காண்டாமிருகம் வலிமையானது. ஆனால் வீண் சண்டைக்குப் போகாது.

காண்டாமிருகம் யானையைக் கூடத் தாக்கும் வலிமை கொண்டது.

இதன் கர்ப்பகாலம் 15 மாதங்களாகும். குட்டியின் எடை60முதல் 70 வரையான கிலோகிராமாகும் காண்டாமிருகத்தின் நிறை 2½தொன் ஆகும்.

பணத்திற்கு கொம்பு மருத்துவத்திற்கு கொம்பு என்ற காரணத்திற்காக காண்டாமிருகம் வேட்டையாடப்படுவதால் இவ்வினம் அழிந்து வருகின்றது.

✱ தி. தவபாலன்

## எங்கள் செல்லப் பிராணிகள்

சின்னக் கோழிக் குஞ்சுகள்
தீனி போடத் தாயுடன்
என்னை நோக்கி வந்துமே
இரையை ஒகயில் தேடுமே.

பாலைக் குடிக்கக் கன்றுமே
பசுவைத் தேடி ஓடுமே
வாலைக் கிளப்பி துள்ளுமே
வந்து என்னைத் தள்ளுமே.

பூனை கண்ணை மூடிக் கொண்டு
பாலைக் குடிக்கப் பார்க்குமே
நாளெழுந்து நடக்கவே
நடுவிற் கண்ணைத் திறக்குமே.

✱ த. தாரணி

### விஞ்ஞானக் கதை

## முதலையும் குருவியும்

தொலைதூரத்தில் ஆரவாரிக்கும் நாய்கள். அதனுடன் கலந்து போய்விடுகிறமனம்.

உச்சி வெயிலைச் சூரியன் உரமாக அள்ளி வீசிக் கொண்டிருந்தான்.

தெருக்கள் சனங்களைச் சில நிமிடங்களுக்கு மறந்து போயிருந்தன.

நீர் தேங்கி நின்ற அந்தக் களிமண் பரப்பில் இருந்த முதலையண்ணா நீர்ப்பரப்பின் எல்லைக்கு மெதுவாக வந்தார். தனது பெரிய வாயை ஆவெனப் பிளந்து வைத்துக் கொண்டு யாருக்கோ காவல் இருந்தார்.

"நீ வரும் உலா... என் தெருவில் எனக்குத் திருவிழா" என்று மனதிற்குள் பாடிக்கொண்டார்.

சிறிதுநேரத்தில்,சன நடமாட்டமற்ற அந்தப் பிரதேசத்தில் அவரது நண்பி வந்தாள். அவள் வேறு யாருமல்ல;

ஒரு சின்ன நீர்க் குருவி. அவள்பெயர் 'புளோவர்'

அவள் எந்த விதத் தயக்கமுமின்றி "விசுக்'கென்று பறந்துவந்து முதலையண்ணாவின் வாயில் அமர்ந்து கொண்டாள்.

அவரது பல் இடைவெளிகளில் இருந்த உணவைக் கொத்திக் கொத்தி உண்டு மகிழ்ந்தாள்.

முதலையண்ணாவின் வாய் சுத்தமாகிக் கொண்டிருந்தது. குருவித் தங்கைக்கும் உணவு கிடைத்துக்கொண்டிருந்தது.

திடீரென......

குருவித் தங்கையின் இளைய மனதில் ஒரு புயல் நுழைந்தது. தெருவில் யாரோ மனிதர்கள் வரும் அறிகுறி தெரிந்தது. அதை உணர்ந்து கொண்ட குருவித்தங்கை,

"யாரோ வருகிறார்கள். உள்ளே போய்விடுங்கள் அண்ணா" என்று முதலைக்கு அறிவித்துவிட்டு வேகமாய்ப் பறந்து போனாள்.

"ச்சீ... இந்தப்பல்லை ஒழுங்காகத் துப்பரவு செய்வதற்கிடையில் அபாயம் வந்துவிட்டது... நாளைக்குப் பார்ப்போம்" என்று அலுத்துக் கொண்டு நீரினுள்ஒடி மறைந்ததுமுதலை.

"பல் வைத்திய நிபுணர் உன் பல்லைத் துப்பரவு செய்தமைக்கு எத்தனை காசு கொடுத்தாய்?

உள்ளே வந்த முதலையை இப்படிக் கேட்டது சுறா.

"காசா? மனிதர்கள் அல்லவா காசில் ஆசை கொண்டவர்கள். குருவித் தங்கை என்னை ஒருபோதும் காசு கேட்பதில்லை" என்று புழுகினார் முதலை அண்ணா.

✱ பிரவீன்ஸ்

## விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்

ஒலிப்பதிவு — தோமஸ் அல்வா எடிசன்.
மின்கலம் — வோல்டாகிரஹாம்பெல்.
தந்தியும் சிக்னலும் — மோஸ்.
வானியல் தொலைநோக்கி — கலிலியோ கலிலி.
எக்ஸ் கதிர்கள் — கொன்ராட்ரேன்னட்ஜெ.
அணுக் கொள்கை — ஜோன்டால்டன்.
தன்னீர்ப்புத் தத்துவம் — ஆக்கிமிடிஸ்.
ஒலி பெருக்கி — கியூஸ்.
சுழல் துப்பாக்கி — கொல்ட்.
தட்டச்சு — சோல்ஸ்.
பாரசூட் — லெனேர் மான்ட்
டைனமைட் — அல்பிரெட் நோபெல் (நோபெல் பரிசு தாபகர்)
உருக்கு — ஹென்றி பெஸ்மர்
ஹெலிகொப்டர் — உரோல்டி, பெஸ்கரா.
மின்னற் கடத்தி (இடியேறு தாங்கி) — பெஞ்சமின் பிராங்ளின்

✱ பா. பாலுறஞ்சன்

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் ''த்திரம்

முழுப்பெயர்: ..........................................

வயது: ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................

வீட்டு முகவரி: ..........................................

கையொப்பம்: ..........................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................
திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்)

## உங்கள் கட்சி நியாயமானதா?

சீதனம் வாங்குவது
சிறுபிள்ளைத்தன மென்று
சீறுகின்ற பெண்மணிகளே!
அவனியை நம்பி
அதிகாலை முதல் அந்திவரை
அயராது உழைத்து
அகிலத்திற்குஉணவளிக்கும்
உழவுத்தொழில் செய்யும்
ஆண்மகனொருவன்
சீதனம் வாங்காமல்
மணம் முடிக்க வந்தால்
தயக்கமின்றிகழுத்தைநீட்ட
முன் வருவீர்களா?
மாட்டீர்கள்தானே
ஏனென்றால் நீங்கள் விரும்புவது
எஞ்சினியரையும் எக்கவுண்டனையும் டொக்டரையும் தானே!
நீங்களே உயர்வு தாழ்வு பார்த்து
தர நிர்ணயம் செய்தால்
தவப்புதல்வர்கள் தங்களை
விலைபேசுவதில் தப்பேது?

✱ புலோலியூர்
சந்திரசேகர்

## பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 171 ஸ்ரீதரன் பரணீதரன்
வயது 08, மட்டுவில் மகாவித்தியாலயம், சாவகச்சேரி

இலக்கம் 172 நடராசா முகுந்தா
வயது 13, ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், நல்லூர்

இலக்கம் 173 லோகநாதபிள்ளை பானுகோபன்
வயது 10, ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை, யாழ்ப்பாணம்

இலக்கம் 174 ஜெயபாலகிருஷ்ணன் றமேஷ்
வயது 12, பொன். பரமானந்தர் மகாவித்தியாலயம் குரும்பசிட்டி,

இலக்கம் 175 அப்துல் றஹீம் கஸ்மின்
வயது 12, ட்றீபேர்க் கல்லூரி சாவகச்சேரி

இலக்கம் 176 கதிரவேலு சிவச்சந்திரன்
வயது 9, அம்மன் அ மி. த. க. பாடசாலை, குடத்தனை

இலக்கம் 177 யோசுவா யுடா பிறின்ஸ்
வயது 12, ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை

இலக்கம் 178 இரத்தினராஜ் மனோராஜ்
வயது 08, றோயல் கல்லூரி, கொழும்பு-7

இலக்கம் 179 ஆ. சிவசுப்பிரமணியம் பிரிதிவிராஜ்
வயது 13, மல்லாகம் மகாவித்தியாலயம்,

இலக்கம் 180 சுபோதினி சோமசேகரம்
வயது 07, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

# பலஸ்தீன கிளர்ச்சியை அடக்க இஸ்ரேலின் புதிய முடிவு

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பகுதிகளில் பலஸ்தீனர்கள் மேற்கொண்டுவரும் கிளர்ச்சியை அடக்குவதற்காக இஸ்ரேல் மேற்கொண்டுள்ள புதிய கடுமையான நடவடிக்கைகள் உலகநாடுகளின் கடுமையான கண்டனத்திற்கு இலக்காகியுள்ளன. பிரச்சனையை சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் இஸ்ரேலுக்கு அக்கறை இல்லை என்பதையும் இஸ்ரேலின் இயலாத்தன்மையையுமே இது எடுத்துக்காட்டியுள்ளது.

## புதிய நடவடிக்கைகள்:

பதின்மூன்று மாதகால பலஸ்தீன மக்களின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இப்புதிய நடவடிக்கைகள் உதவுமென இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் ராபின் நம்பிக்கை வெளியிட்டார்.

கிளர்ச்சிகளை, ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்காக இஸ்ரேல் புதிதாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூன்று அம்சங்களை முக்கியமாகக் கொண்டுள்ளன.

அடிப்படையான மனித உரிமைகளையே மீறும் விதமாகவுள்ள இந்த நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆர்ப்பாட்டங்கள் கிளர்ச்சிகளைக் கலைப்பதற்காக 'பிளாஸ்ட்டிக்' குண்டுகளைப் பயன்படுத்திச் சுடுவது இதில் முதலாவது நடவடிக்கையாகும். பிளாஸ்டிக் குண்டுகள் உடலில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. ஆர்ப்பாட்டங்களில் சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்ப்பது இரண்டாவது நடவடிக்கை. கிளர்ச்சிகளில் பலஸ்தீன சிறுவர்களே பெருமளவில் கலந்து கொள்வதால் அதற்காக அவர்களைத் தண்டிக்காமல் அவர்களது பெற்றோரைத் தண்டிப்பது மூன்றாவது நடவடிக்கையாகும்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக செயல்படுவது. இஸ்ரேலிய படைகள் மீது கல் எறிவது ஆகிய செயல்கள் இங்கு குற்றச் செயல்களாகக் கருதப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த இது வரைகாலமும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனைத் தராததாலேயே புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கப்பட்ட மறுநாள் கூட ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் கிளர்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. அன்று மூன்று பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலஸ்தீனர்களின் பெருமளவு வீடுகள் குண்டு வைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டன, எனினும் இதனால் பலஸ்தீனர்களின் கிளர்ச்சி பாதிக்கப்படாமல் தொடர்ந்தும் நடைபெறுவது இஸ்ரேலுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது. இஸ்ரேலின் கடுமையான நடவடிக்கைகள் எதிர் மாறான விளைவுகளையே ஏற்படுத்துமென்பதை இது எடுத்துக் காட்டியுள்ளது

## எதிர்ப்புக்கள்:

லியன்னுவில் நடைபெறும் மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டிலும் இதற்கெதிராகக் குரல் எழுப்பப்பட்டுள்ளது இங்கு உரையாற்றிய அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கூட இதனை வன்மையாகக் கண்டித்தனர். ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பெரஸ் டி குயெலர் கூட இது தொடர்பாக தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக மட்டுமன்றி தேசியரீதியாக இஸ்ரேலுக்குள்ளேயே ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்களையும் இஸ்ரேலிய அரசாங்கம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது இஸ்ரேலின் முக்கிய தலைவர்கள் பலரும் கல்விமான்களும் இது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென எச்சரித்துள்ளார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடமையாற்றும் இஸ்ரேலிய படைவீரர்களிலும் பலர் இதனை ஏற்கமறுப்பதாக அங்கிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன. மனிதாபிமானத்தைக் கைவிட்டுச் செயற்படுமாறு அரசாங்கம் தம்மைக் கேட்டுக் கொள்வதைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

புதிய நடைமுறைக்கு சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டுக்குள்ளும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது ராணுவத்தினரும் இவ்விடயத்தில் அரசுக்கு ஒத்துழைக்க மறுக்கலாம் இவற்றிற்கு மேலாக பலஸ்தீனர்கள் இதற்கு அஞ்சவில்லை. இந்நிலையில் அடுத்த நடவடிக்கையாக இஸ்ரேல் என்னசெய்யும் என்பதே கேள்விக்குறியாகியுள்ளது.

## பூகோளத்தில் பான வாரம்

## ஆர்பீ

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**22-1-89 -- 28-1-89 வரை**

**மேடம்:** மாதாவழி கவலை. வாகனசுகம், வணிகர்கள் இலாபம், வாக்கு வசிகரம், உத்தியோக உயர்வு, மங்கள காரிய நிவர்த்தி, வெளியூர் போனவர்கள் வருகை.

**இடபம்:** புகழ்தேடி வரும், புண்ணியவழிபாடு, வாகன லாபம், தடைப்பட்ட விவாகம் நடைபெறும், திடீர் பிரயாணம், புதுத்தொழில், மூத்த சகோதரர் வழி நன்மை.

**மிதுனம்:** பெரியோர் ஆதரவு, வாகனசுகம், இலட்சுமி கடாட்சம், புகழ் தேடி வரும், புண்ணியவழிபாடு, தடைப்பட்ட பணம் கிடைக்கும், கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**கடகம்:** வாக்கு வசிகரம், உயர்பதவி, உறவினர்வருகை, வாகனசுகம், வணிகர்கள், கடற்தொழில் செய்வோர்க்கு லாபம், எண்ணிய கருமம் நடக்கும்.

**சிங்கம்:** பொருள் நஷ்டம், பெரியோர் பகை, வாகன இலாபம், மங்கள காரிய விருத்தி, இளைய சகோதரர் வழி உதவி, திடீர் பிரயாணம், வாகன மாற்றம், மனை பூமியால் லாபம்.

**கன்னி:** மூத்த சகோதரர் வழி நன்மை, இருதொழில் வருமானம், மங்கள காரிய நிவர்த்தி, வாகனசுகம், மகப்பேறு, மனைபூமியால் லாபம், கடற்தொழில் வணிகத் தொழில், இயந்திரத்தொழில் செய்வோர் லாபமடைவர்.

**துலாம்:** சத்துருபயம் உடல் ரோகம். உத்தமர் வருகை, வாகனயோகம், மூத்த சகோதரர் வழி நன்மை, மாமன்வழி உதவி, மனையலங்காரம், பிரிந்த காதலர் ஒன்று சேருவர்.

**விருச்சிகம்:** உத்தியோக உயர்வு, வாகனலாபம், இடமாற்றம், இனசன வருகை, கல்வியால் தொழில், காதலர் ஒன்று சேருவார்கள், தூர தேசம் போனவர்கள் வருகை.

**தனுசு:** பணத்தடை, இனசன உதவி, வாகன லாபம், வணிகர்கள், கடற்தொழில் செய்வோர் லாபம், கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், பூமியால் லாபம்.

**மகரம்** பணத்தடை, இனசன உதவி, வாகனலாபம் விருந்துபசாரம், தூரதேசம் போனவர் வருகை, புதுத் தொழில் புகழ் தேடித்தரும், மனைமகிழ்ச்சி, மங்கள காரிய விருத்தி

**கும்பம்:** சத்துருபயம், பணநஷ்டம், பெரியோர் ஆதரவு, இருதொழில் முயற்சி, பிரிந்தவர் ஒன்று சேருவர், தூர தேசம் போனவர் வருகை. மாமன் வழியால் பணவரவு.

**மீனம்:** நினைத்தது நடக்கும், பெரியோர் ஆதரவு, இருதொழில் லாபம், வாகனசுகம், கல்வியால் தொழில், தேடிவவர் வீடுவருகை, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், புது வாகன சேர்க்கை.

## தையல் . . .

.. 11 ஆம் பக்கத் தொடர்ச்சி

சொல்லுக்கு அச்சொட்டான பொருள் என்னவாக இருக்க முடியும்? கல்வியறிவற்ற அல்லது அனுபவ அறிவு அற்ற அல்லது இழிகுணமுள்ள பெண் எனலாமா?

அவரது பல நீதி வாக்கியங்களில் பேசேல், சேளேல், சுருக்கேல் போன்றஎதிர்மைற வாக்கியங்கள் பல காணப்படுகின்றன. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இவ்வாக்கியம் இடைச் சொருகலாகப் புகுத்தப்பட்டிருக்கலாமாற் யாரோ விஷமிகளால் மாறம் செய்யப்படிருக்கலாம்

'பழையன கழிதலும்புறதியடின புகுதலும் வழுவல' என், அம்மையாரது நீதி வாக்ரபகியங்களுக்கு எழுதிய உைகள் பற்றியும் ஆய்வு வேண்டியிருக்கிறது. ஏற்கனவே ஆய்வு நடத்தப்பட்டதாயின் அறியாமைக்கு வருத்தமே. எனினும் அவ்வாக்கியத்தை நீக்கி விடுவதற்குப் பதிலாகத் 'தையல் சொல் கேள்; ஏல், எனத் தற்துணிபு கொண்டு 'பெண்களுடைய அறிவுரைகளைக், கேட்டு, ஆய்ந்து, ஏற்றுக் கொள்வாயாக' எனப் பொருள் கொள்வது தற்காலச் சமுதாய நிலைக்கும் பெண்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்குமல்லவா

காலத்துக்கேற்ற வகையில், மநுதர்ம சாஸ்திரத்திலும் பிற சாஸ்திர நூல்களிலும் உள்ள பல நீதிகள் தூக்கியெறியப்பட்டுள்ளன. அது போல ஔவைப் பிராட்டியின் இந் நீதி வாக்கியமும் தூக்கியெறியப்பட வேண்டும். அதற்கு முன் இதுபற்றியஆய்வு நிகழ்த்தப்படவேண்டும். ●

## வாய் விட்டுச் . . .

... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

"அதில் வருத்தப்பட என்ன இருக்கிறது.?"

"இன்னும் என்மனைவிக்கு அது தெரியாதே!"—

✶

"நேற்றையவிட இன்று உங்கள் உடம்பு நன்றாக குணமாகி இருக்கிறது"— என்றார் டாக்டர்.

"நீங்கள் என்னிடம் கொடுத்த மருந்துப் போத்தலில் எழுதி இருந்ததை அப்படியே பின்பற்றினேன்"— என்றார் நோயாளி.

"அதில் என்ன எழுதியிருந்தது?

"போத்தல் மூடியை இறுக்கமாக மூடிவைக்கவும்."

✶

"என் மனைவியின் ஞாபகார்த்தமாக என்று புத்தக சமர்ப்பணத்தில் போட்டிருக்கிறீர்களே ஏன்?"

"இது ஒரு பேய்க் கதை அதனால்தான்"

"சே, நானும் ஒரு நாய்க் கதை எழுதி என்மனைவிக்குச் சமர்ப்பணம் செய்யத்தான் வேண்டும்! என்றார் மற்றவர்.

இந்தத் துணுக்குக் கட்டுரையை எழுதிவிட்டு என் இரகசிய நண்பனுக்குக் காட்டி அபிப்பிராயம் கேட்டேன்—

"அசல் மச்சான்! உன்னுடைய நகைச்சுவைத் துணுக்குகள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன" என்றான்.

"அப்படியா...!" என நான் மகிழ்சியடையும்போது..."

ஓம், மச்சான் துணுக்குகளைப் படித்துச்சிரித்ததும்இவைகளை முன்பு எங்கோ படித்தோமே என சிந்திக்கவும் வைக்கிறது. ●

## முது மக்கள் . . .

... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

மையால் அந்த வயோதிபரும் நெடுநாள் வருத்தப்படாது இறந்து விடுவார்.

வீட்டில் இறந்து போனவர்களுக்குச் செய்யப்படும் சகல சடங்குகளும் செய்யப்படும்.

இப்படியாக உயிருடன் கொடூரமான முறையில் முற்காலத்தில் புதைக்கப்பட்ட முதியவர்களின் உடலைத் தாங்கிய பானைகளே இப்பொழுது ஆற்றுப் படுக்கைகளிலே கண்டெடுக்கப்படும் 'முது மக்கள்தாழிகள்' ஆகும் ●

# சம்பந்தர் பாடிய தைப்பூசம்

பரமேஸ்வரி சிவராமலிங்கம்

இருபத்தேழு நட்சத்திரங்களுள் பூசம் அல்லது புஷ்யம் எட்டாவதாகும். தைத்திங்களில் பூச நட்சத்திரம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும் இதனைப் புண்ணியநாளாக இந்துக்கள் கொண்டாடுவர்

தேவர்களின் குருவாகிய பிருகஸ்பதி பூசநட்சத்திரத்தின் தேவதை என்பர். பிருகஸ்பதி அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூசநட்சத்திரத்தை வணங்கினால் பிருகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர் தைப்பூச நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் அதிக புண்ணியம் கிடைக்கும் என்பர்.

தைப்பூசம் ஒரு சுபதினமாகும்? இன்றைய தினம் புதிதாய் விளைந்த தானியக் கதிர்களை வீட்டிற்குக்கொண்டு வருவர். இது 'புதிது எடுத்தல்' எனப்படும். வீட்டிற் சேர்த்த தானிய மணிகளை கடவுள், தேவர் விழாவுக்கு வழங்குவர். ஏழை எளியவர்க்கும்கொடுப்பர்.

ஆதிசேடனும் வியாக்கிய பாதரும் காண இறைவன் இன்பத் திருநடனம் ஆடிய நாளாகவும் இது விளங்குகிறது. இதனால் இந்நாள் விசேடம் பெற்றது. இதனை மணிவாசகர் 'பதஞ்சலிக்கருளிய பரமநாடகம்' என்று அருளியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவிடை மருதூர் இத்தைப்பூச விழாவிற்குப் பேர் போன தலமாகும் அங்கு கோயிலிலுள்ள சித்த தீர்த்தத்தில் நீராடுவதும் வில்வமரத்தைச் சுற்றி வருவதும் சுவாமி தரிசனம் செய்வதும் பாவங்களைப் போக்கும் என்பர்.

பூசநட்சத்திரத்தை வடமொழியில் திஷ்யம் என அழைப்பர். திஷ்யம் என்பது தைசம் எனவரும். தைசம் என்பது தை என மருவி நின்றது.

தைப்பூசத்தின் சிறப்பினை உணர்த்தும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம் இது.

மைப்பூசு மொண்கண்மட
நல்லார் மாமயிலைத்
கைப்பூசு நீற்றான் கபாலீச்
சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்கல்
நேரிழையார் கொண்
டாடும்
தைப்பூசங் காணாதே போதி
யோ பூம்பாவாய்.

# ஊரெழு திருவாசக விழா இன்றைய நிகழ்ச்சிகள்

ஊரெழுவில் நடைபெற்று வரும் திருவாசக விழாவின் இறுதி நாளான இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்:

வித்துவான் சி குமாரசாமி தலைமையில் காலை ஒன்பது மணிக்கு விழா ஆரம்பமாகும். திரு த. திருநாவுக்கரசு, திரு திருமதி கே. ஆர். சிவலோகநாதன் ஆகியயோரின் மங்கள விளக்கேற்றலுடன் இறைவணக்கம் இடம்பெறும்.

திரு க. முத்துக்குமாரசாமி வரவேற்புரை வழங்குவார். அதனையடுத்து "திருவாசகத்தில் தேன்" என்ற தலைப்பில் திருமதி வசந்தா வைத்தியநாதன் உரையாற்றுவார்.

அடுத்து நடைபெறும் "என் புருக்கும் வாசகத்தில் எமையுருக்கும் வாசகங்கள்" எனும் தலைப்பிலான கருத்தரங்கு வித்துவான் க. ந. வேலன் தலைமையில் நடைபெறும். இவ்வரங்கில் திரு. சோ. பத்மநாதன், திரு எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி அ சண்முகதாஸ், திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொள்வார்கள். திரு. மு. வேலாயுதம் நன்றியுரையாற்றுவார்.

மாலை இரண்டு மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் தவத்திரு என். எம். சவரிமுத்து அடிகள் தலைமை தாங்குவார். உதயன் சஞ்சீவி நிர்வாக இயக்குநர் திரு. திருமதி க. சரவணபவன், திரு. திருமதி பே. பரமேஸ்வரநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திரு. அ தனபாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

"யார் கொலோ சதுரர்?" என்ற தலைப்பில் புலவர் ஈழத்து சிவானந்தன் உரையாற்றுவார். இதனையடுத்து முதலாம் நாள் விழா பட்டி மண்டபத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு பட்டி மண்டபம் நிகழும் இதன் நடுவர்களாக கலாநிதி அ. சண்முகதாஸ், வித்துவான் க. ந வேலன், திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் இடம்பெறுவர். மேன்முறையீடு செய்பவர்களாக பக்திக்கு கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், கவித்துவத்திற்கு கவிஞர் சோ. பத்மநாதன், கழிவிரக்கத்துக்கு திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் முறையிடுவார்கள்.

திரு. செ. சந்திரன் நன்றியுரையாற்றுவார். இரவு ஏழு மணிக்கு நடைபெறும் திருவாசக ஆய்வில் தலைவராக கலாநிதி இ பாலசுந்தரமும், ஆரம்பித்து வைப்பவராக திரு க. நாகேஸ்வரனும் இடம்பெறுவர்.

## சி சிவசேகரத்தின்...

... 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

பண்புசளை இழந்து விடும் "மாநகர்:மோகினி" யையும் வெளிப்படுத்தியுள்ளார்...... "மறுநாள் வேறொரு அற்புதம் நிகழ்ந்தது, பொறிகளின்று மானுடர் எழுவர்" என நம்பிக்கையூட்டப்படுகிறது.

அடக்கு முறை தலைவிரித்தாடும் சமுதாயத்தில் "வழிகாட்டும்" பேர் வழிகளால் ஏமாற்றப்படும் அவலம் மக்களுக்கு ஏற்படுவரையும் குட்டி முதலாளித்துவத் தலைமையின் விபரீதங்கள் மக்களைக் குட்டிசுவராச்கும் என்ற அறிவியல் உண்மையையும் யதார்த்த விரோதமான கொள்கைகளையும் கோசத்தையும் கொண்டுள்ளோர் "இல்லாத ஊருக்கு, நாளை புறப்பட்டு, நேற்றிரவு போய்ச்சேர. இந்த இரவின், இருளால் வழிகாட்டும்"ம் வித்துவத்தை "திசை மாறிய மாஜி நண்பனுக்கு" என்பதில் அடித்து விழுத்திவிடுகிறார்.

மரணத்துள் வாழும் மக்களின் துயரத்தைப் பலமாக்கும் பயணத்தை விடுத்து, சோகத்தையே வாழ்வாக்கி விரக்தி கொண்டு "சட்டை மாற்றிய சாமியார்"...... "நடுச்சாம வெய்யிலியேஞான ஒளி தெரிந்ததே, மாமுனிவர் நம்மூர் மடத்துக்கு வந்துள்ளார்" என நடுச்சாம வெய்யிலின் பொய்மையை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

"ஒதுங்கி ஓடியவர்கள்" இவ்மக்கள் எழுச்சி வரலாறு தவிர்க்க முடியாத நியதி," "பதர் விலகி நெல் கெட்டுப் போவதாமோ?, வழி விலகிப் போவோராற் புரட்சி சாமோ?" என நம்பிக்கையூட்டுகிறார்.

"உன் சட்ட ரீதியான உரிமைகள் 1 இல்... இந்த மண்ணில்–நீரில் இறங்காமல் நீச்சலடிக்கவும், யார் காதில் விழாதபடி பேசும், உனக்கு எல்லையற்ற உரிமை இருக்கிறது" ஏட்டுச் சட்டங்களின் இயலாமையின் வினைநுட்பத்தை விளக்குகிறது.

"உன் சட்டரீதியான உரிமைகள் 2" இல் "... .. உன்னிடந்தான் நேற்றே ஒப்பம் வாங்கியாயிற்றே" என்பதில் இறுதியாய் வந்த 'ஏ'காரம் பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன்போவதை உயிரோட்டமாய் காட்டுகிறது.

"நத்தார் நாள் வெறுவயிற்றில் பெரிய வெள்ளிக்கிழமை நினைவுகள்" கவிதையில் "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு, மறுகன்னத்தைக்காட்ட, நம் குழந்தைகள் முகத்தில் கன்னங்கள் இல்லை குழிகள்தான் இருக்கின்றன,... சிலுவை ஏறி அலுத்ததனுல், சிலுவை ஏற்றுகிறவர்களைச் சிலுவை ஏற்றப் போகிறோம், பரமபிதாவுக்கு இனி ஒரு நாளும் தன்குமாரன் எவனையும், சிலுவையில் அறையப்படுவதற்காக. பூமிக்கு அனுப்பும் அவசியம் ஏற்படாது" எனச் சவால் விடுவது காலத்தின் தேவையைக் கண் முன்னே நிறுத்துகின்றது.

"செப்பனிட்ட படிவங்கள்" கவிதைத் தொகுப்பு பல்லாயிரக்கணக்கான மக்களும் படித்துப் பயன்பெற வேண்டியதும் நீசத்தனங்களுக்கெதிராக நின்று பிடிக்க வேண்டிய மக்களின் நேசப் பிணைப்பை ஏற்படுத்துமோர் பலம்மிக்க–வலிய ஆயுதமாக பர்ணமிக்க வேண்டியதும் அவசியமாகும். தேசிய கலை இலக்கிய பேரவைக்காக சென்னை புக்ஸ் இதனை வெளியிட்டுள்ளது.

## நம்நாட்டு . . .

... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்குவேண்டிய உதவிகளையும் தொடர்புகளையும்எழுத்தாளர்களும், கலாசார பேரவை போன்ற நிறுவனங்களும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஏற்படுத்திக்கொடுத்தால் எமது நாட்டில் நூல்களின் விற்பனை ஒரு பிரச்சனையாக இருக்காது இவை தவிரக் கடைகளில் போட்டு விற்பனை செய்வதையும் பெரியபுத்தக நிறுவனங்கள் (பூபாலசிங்கம் புத்தகசாலை, வடலங்கா, ஸ்ரீலங்கா போன்றவை) ஏற்றுக்கொள்ளலாம். எல்லாக் கடைகளுக்கும் அலையாமல் ஒரு கடையுடன் மட்டும் எழுத்தாளர் தொடர்பு வைக்கலாம். இக் கட்டுரை கருத்துக்கள் தொடர்பாக வாசகர், இலக்கியகாரர்கள், பிரசுர கர்த்தாக்களின் கருத்துக்களையும் முரசொலிக்கு எழுதி இப்பிரச்சனைக்கு விரைவான முடிவுகாண வேண்டும் என்பதே எம் விருப்பமாகும்.

## இன்று

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை வியோடை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று நடைபெறும் தைப்பூச விழாவில் மாலை ஐந்து மணியளவில் 'ஸ்ரீசக்கரம்' ஒன்று புதிதாக வைக்கப்படவுள்ளது.

மாதந்தோறும் வரும் பூரணைநாளில் இச் ஸ்ரீசக்கரத்திற்கு விசேட பூஜைகள் நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## இந்துபோர்ட் . . .

... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்கம் நாளடைவில் இதைத்தட்டிக் கழித்தது. வெளிநாட்டு மதுபான வகைகளைப் பெருமளவில் இறக்குமதி செய்த அரசாங்கம் தன் ஆற்ருப் போக்கைக்காட்டிவிட்டது. நாடு சுதந்திரம் அடைந்தால் அல்லது இந்தப் போக்கை மாற்ற முடியாது என்ருர். இராசர் மதுவொழிப்பில் தீவிரமாக ஈடுபட்டமை தவறணை முதலாளிகளுக்கெல்லாம் ஆத்திரமாய் இருந்தது.

யாழ்ப்பாணத் தொகுதியில் அருணசலம் அவர்களும் இந்து போர்ட்இராசரத்தினம் அவர்களும் போட்டியிட்டார்கள். போட்டி தீவிரமாயும் சுறுசுறுப்பாயும் நடைபெற்றது. மகாதேவா அவர்களுக்குக் கிறிஸ்தவரிடையே திரளான வாக்குக் கிடைத்தது. அதனுல் அவர் 10627 வாக்குகள் பெறக்கூடியதாயிருந்தது. இராசரத்தினம் அவர்களுக்கு 6110 வாக்குகள் கிடைத்தன. அன்று நடைபெற்ற வர்ணப் பெட்டி வாக்களிப்பு முறையில் வாக்குச்சீட்டுகளில் பழுது என்பதே கிடையாது மட்டைத் துண்டைச் சுலபமாகப் பெட்டியுள் போடுவதே அக்காலத்து முறையாகும் அது சர்வஜன வாக்குரிமையில் எழுத்தறிவு, பென்சில் பேனை பிடிக்கும் அறிவு, யானை பூனை பேதங்காணும் அறிவு இல்லாதவர்க்கும் இயன்ற ஒரு முறையாகும்.

(தொடரும்)


31-ம் நாள் நினைவஞ்சலி



சி. வேணுஜா

( நீரா )

விழிப்பு: 06-12-1987 துயில்வு: 23-12-1988

நினைவலையில்
நிறைந்திருக்கும் நீரா
நீரலையாய்
மறைந்ததேனோ !

அப்பா, அம்மா, மற்றும்
குடும்பத்தினர்.

வண்ணங்கேணி,
பளை.

01537

U. S. Enterprises

Super Cannon Photostat Service

SITHANKENY

உங்களுக்குத் தேவையான சகலவிதமான பாஸ்போட் எடுத்தல் மற்றும்Bond செய்தல் ஆகியவற்றை விரைவில் செய்து பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

★ யு. எஸ். என்ரபிறைசஸ் ★

சித்தன்கேணி

01462

அறிவித்தல்

யாழ். சைனீஸ் றெஸ்ரறேன்ற் (PVT) LTD

YARL CHINESE RESTAURANT (PVT) LTD

முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

- மேற்குறிப்பிட்ட ஸ்தாபனம் இரவு 7-30 வரை திறந்திருக்குமென அறியத்தருகிறோம்.
- அறைகளும் வாடகைக்கு உண்டு.

01469

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

Computer Programming and Data Processing in Basic Language

ஆரம்பம்: 28 - 01 - 89

பயிற்சிக் காலம் $2\frac{1}{2}$ மாதம்

கட்டணம்: 950/-

(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப்பயிற்சி I B M (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்த்துகொள்ளப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவுசெய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள் 27 - 01 - 89

UNIKCO COMPUTER CENTRE

No. 5, Power House Road,

2nd Lane, Jaffna.

( Near Sup-post Office )

01501

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

( வரையறுக்கப்பட்டது )

கேள்விப்பத்திர அறிவித்தல்

1. 8000 வெற்றுச்சாக்குகள்
2. பழுதடைந்த பொருட்கள்
   1. மா, சீனி, அரிசி கடலைப்பருப்பு, துவரம் பருப்பு
   2. வெற்று பரல்கள் (210 லீற் கொள்வனவு) வெற்று தகரங்கள் (3 லீற்.)
   3. லொறி உதிரிப்பாகங்கள் மின் மோட்டர்
   4. சுவர் மணிக்கூடு, பெற்ரோமாக்ஸ், தட்டச்சு இயந்திரம், குக்கர்
   5. நிறுவை அளவு கருவிகள், படிகள். ராப்வகை
   6. மீன்ரின், சயிக்கிள் ரயர், ரியூப், நெல்லிரசம், நெல்லிகோடியல்
   7. அலுமீனியப் பாத்திரங்கள்

மற்றும் பழுதடைந்த பொருட்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மேலும் விபரங்கள் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ரூ 500/-வைப்புப் பணமாக தலைமைக்காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திர விண்ணப்பம் 1989-01-27-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர் தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு, பழுதடைந்த பொருட்கள் கேள்விப்பத்திரம்" எனத் தவருது குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திர உபசபையினரின் முன்னிலையில் 1989-1-27-ம் திகதி பி.ப.4.00 மணிக்குத் திறக்கப்படும்

தெல்லிப்பழை. பொதுமுகாமையாளர்
1989-1-19. 01515

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

ForQuality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# யாழ். மாவட்ட மக்களின் வீடமைப்புக் கடனுக்கு 64 லட்ச ரூபா ஒதுக்கீடு

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் நகர வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கென அறுபத்துநான்கு லட்சத்து அறுபதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்தி எழுநூற்றி ஐம்பது ரூபாவுக்கு குறைந்த குடும்ப வருமானமுள்ள, யாழ் மாநகரசபை அல்லது சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கே நகர வீடமைப்புத் திட்டத்தின்கீழ் இத்தொகை வீடுகட்ட அல்லது திருத்த கடனாக வழங்கப்படவுள்ளது.

ஐந்து முதல் பதினைந்து வருட காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய இக்கடனுக்கு ஆறு சதவீத வட்டி அறவிடப்படும் என யாழ். மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளர் திரு. ஏ. ஜோசப் மரியான் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை பிரதேசத்தில் 475 குடும்பங்களுக்கு வழங்குவதற்கென நாற்பத்தேழு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும், சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் 57 குடும்பங்களுக்கு வழங்கவென தலா ஐந்து லட்சத்து எழுபதினாயிரம் ரூபாவும் இத்தொகையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக புதிய மாணவர் பயிற்சிநெறி ஏப்ரலில்

யாழ். பல்கலைக்கழகத்தில் 1988-89 ஆம் ஆண்டுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஏப்ரல்மாதம் நடுப்பகுதியில்ஆரம்பமாகவுள்ளன.

கலை, விஞ்ஞான, மருத்துவ பீடங்களுக்கென இம்முறை சுமார்அறுநூறுபேர் யாழ். பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் அக்டோபர் மாதம் இவர்களுக்கான புதிய வகுப்புக்களை ஆரம்பிக்க திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் அப்போது நிலவிய கலவரங்கள் காரணமாக ஆரம்ப திகதி பின்போடப்பட்டிருந்தது.

புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த மாணவர்கள் தற்பொழுது ஆங்கில பயிற்சியும், நிர்வாக விடயம் சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சியும் விசேடதிட்டத்தின்கீழ் பெற்று வருகின்றனர் ஏப்ரல் மாதம் வரை இப்பயிற்சி தொடர்ந்து நடாத்தப்படும்

## கிளிநொச்சி கல்விகந்தோர் புதிய இடத்துக்கு மாறியது

கரடிப்போக்கில் உள்ள கட்டடமொன்றில் இயங்கி வந்த கிளிநொச்சி கல்வித் திணைக்களம் கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலயத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடம் பதினேழு லட்சம் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலக திறப்பு விழாவில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தேவசிகாமணி, கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## முன்னாள் எம். பி. வீடு தாக்கப்பட்டது

முன்னாள் உடுநுவர எம். பி. திரு. திஸநாயக்காவின் வீடு கடந்த வியாழன் இரவு இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டது. அங்கிருந்த அவரது பாதுகாப்பு ஊழியரும் மற்றொருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### வன்னியில் . . .

இராணுவத்தினரும் ஒரு குடிமகனும் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன் ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடமிருந்து ஒரு எல். எம். ஜி, ஒரு ரி - 56, ஒரு 303 துப்பாக்கிகள் அபகரிக்கப்பட்டிருந்தது. இதன் எதிரொலியாக வவுனியா நகரில் ஏற்பட்ட கலவரம் இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கையால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

### ஜனாதிபதி...

என்றும் சட்டமும், ஒழுங்கும் ஜனாதிபதி தேர்தலின்போது மீறப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதலமைச்சர் . . .

நடைபெற்றது. அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள தலைவர்கள் உட்பட பல்வேறுதுறை அதிகாரிகளும் இம்மா நாட்டில் பங்குபற்றினர். மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் திரு. வி. என். சிவராஜா உட்பட மாகாண அமைச்சின் பல்வேறு துறைச் செயலாளர்களும் இதில் பங்குபற்றினர். இது தொடர்பான ஆலோசனைகள் இன்று நடைபெறலாமெனத் தெரிகின்றது.

### விராஜ்...

பலர் வரவேற்றனர். பெரும் தொகையான பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் விமான நிலையத்தில் காத்திருந்தனர். தன்னைச் சிறைசெய்த லண்டன் அரசு தன்னை கடுமையாக நடத்தியதாகவும், சிறையில் தான் துன்புறுத்தப் பட்டதாகவும் கூறிய மெண்டிஸ் மீண்டும் தனது நாட்டைக் காண்பதில் தான் மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார். நேற்று முன்தினம் இரவு லண்டனிலிருந்து மெண்டிஸ் பலவந்தமாக விமானத்தில் ஏற்றியனுப்பப்பட்ட போது பலர் விமான ஓடுபாதையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது தெரிந்ததே.

## காலமானார்

### திரு. வேலன் சின்னர்

தும்பளை தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற கற்பகம் அவர்களின் துணைவரும், புடவைக் கைத்தொழிற் திணைக்களம் நெசவு ஆசிரியருமாகிய (அம்பன்) திரு. சி. நடேசன், திருமதி ஆறுமுகம் சகுந்தலா அவர்களின் அன்புத்தகப்பனுருமாகிய திரு. வே. சின்னர் காலமாகி விட்டார். இறுதிச்சடங்குகள் இன்று 22-01-1989 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

01542

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
சி. நடேசன்

## சிறு செய்திகள்

### மட்டக்களப்புக்கு மீண்டும் பஸ்சேவை

யாழ் - மட்டக்களப்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெள்ள நிலை காரணமாக கடந்த ஒருவார காலமாக இச்சேவை நடைபெறவில்லை. மட்டக்களப்புக்கான பஸ்சேவை காலை ஆறு மணிக்கு மத்திய பஸ் நிலையத்திலிருந்து நடைபெறும். இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புக்கு இரு பஸ்கள் சேவையாற்றும்.

### மண்சரிவில் 32 பேர் பலி

மேற்கு சுமத்திராதீவில் ஏற்பட்ட மண்சரிவில் 32 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த எட்டு நாட்களாக பெய்த கடும் மழையால் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். தேநீர் கடை ஒன்றில் உணவருந்திக் கொண்டிருந்த பஸ் பயணிகளே மண்சரிவில் கொல்லப்பட்டவர்களாவர்,

### தேர்தல் . . .

முதல் தேர்தல் முடிவை அறிவிக்க ஒவ்வொருமணி நேரமும் விசேஷ வானொலிச் செய்தி இடம்பெறும்.

### எரிபொருளும் சீனியும் வந்தது

எரிபொருட்கள், சீனி என்பன அனுராதபுரத்திலிருந்து நேற்று ரயில் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது. 71770 லீற்றர் பெற்ரோல், 98140 லீற்றர் மண்ணெண்ணை 98140 லீற்றர் டீசல் அத்துடன் 1640 பாக் சீனி என்பனவே நேற்றுஇங்கு கொண்டுவரப்பட்டவையாகும்

### வித்தியானந்தன் ஆஸ்பத்திரியில்

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் சுகவீனமுற்று கொழும்பிலுள்ள வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் விசேட அவதானிப்புப் பிரிவில் வைத்து கவனிக்கப்பட்டு வருகின்றார்.

### நாளை கூட்டம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை வட்டாரத்தில் உள்ள பாடசாலைகளில் ஒன்பதாம் ஆண்டு வகுப்புகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைகாலப்பயிற்சிக் கருத்தரங்கொன்று நாளை திங்கட்கிழமை காலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில்நடைபெறவுள்ளது

## காலமானார்

### திருமதி பொன்னம்மா கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை - சிவபூஜா துரந்தரி)

நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா 18-01-89 இல் சிவபதமடைந்துவிட்டார். இவர் ஓய்வுபெற்ற அதிபர் பண்டிதர் சிவபூஜாதுரந்தரர் கணபதிப்பிள்ளையின் அருமை மனைவியும், செல்லம்மா, காலஞ்சென்ற சேதுப்பிள்ளை (கனகம் ஆசிரியை),காலஞ்சென்ற நடராசா (கிராம சேவகர்), கதிரவேலு (முன்னாள் கிராமசபை உபதலைவர், நெடுந்தீவு), ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற ஞானராசா (காந்தி மாஸ்டர்), சிவபாக்கியம், காலஞ்சென்ற நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், சந்திராதேவி, குமுதினி (கனடா), ஆகியோரின் அன்பு தாயாரும், வாமதேவன் (தொழிநுட்ப உத்தியோகத்தர் கட்டிடத்திணைக்களம் கொழும்பு), சண்முகரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சரஸ்வதிதேவி (எழுதுவினைஞர், யாழ். கோப் றெக்ஸ்), மகாலிங்கசிவம்(மாலி லண்டன்), இராஜகுமார் (பொறியியலாளர் லண்டன்), பாஸ்கரகுமார் (நோர்வே), சாரதாதேவி, கேதாரநாதன் (பொறியியலாளர் Saudi Telephone), பேரின்பநாதன் (பொறியியலாளர் லண்டன்), சுலோஜினி, கலாநாதன், (பங்காளர் விஷ்ணுவிஹார்), கேதீஸ்வரகுமார்(கனடா) ராகினி (லண்டன்), ஆகியோரின் பெரியதாயாரும், மகேந்திரன் (பங்காளர் விஷ்ணு விஹார்), அம்பிகை (லண்டன்), சரோஜினிதேவி (கணக்காளர், தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்திச்சபை,யாழ்ப்பாணம்), கெசில்டா (நோர்வே), பிரபாலினி (சவுதி அரேபியா), சித்திரா (லண்டன்). பாலகிருஷ்ணன் (லண்டன்), மதனரஞ்சனி(ஜெர்மனி), வேதரஞ்சனி, யோகரஞ்சனி, பேரின்பரஞ்சனி (இந்தியா) ஆகியோரின் மாமியாரும், அபிராமி (சவுதி அரேபியா), விஜாசன் ஜனனி, (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார். ஈமக்கிரியைகள் 23-01-89 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு சிதையிலேயே அந்தியேட்டிக்கிரியைகளும் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

65, திருஞானசம்பந்தர் வீதி,
(பாற்பண்ணை வீதி)
திருநெல்வேலி - வடக்கு

தகவல்:
பண்டிதர்
தி. கணபதிப்பிள்ளை

01544

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவெற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 எ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 22-01-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது